பருத்தித்துறை

Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

**சிலோன் எலக்றிக்கல்ஸ்**

*180, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, மாசி 16-ஆம் நாள். (28-2-59) இதழ் 4.

# ஒரு நாள் வேலை நிறுத்தம்; மீண்டும் கலவரமா?

## விஷமத்தனமான சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்கள்

### தமிழ்பேசும் மக்களின் கவலை

— *நமது அரசியல் நிருபர்* —

**வருகிற மார்ச்சு மாதம் 3-ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் அமைதியாக முடியுமா? அல்லது அன்றும் அதைத் தொடர்ந்தும் கலவரங்களும் காடைத்தனங்களும் ஏற்படுமா? இந்த அச்சம் சிறப்பாக இங்கு தமிழ்பேசும் மக்களிடையும் இந்திய வம்சாவளியினரிடையும் நிலவுகின்றது.**

**நா**ட்டில் அரசியற் கிளர்ச்சிகளோ, அல்லது தொழிற் சங்கக் கிளர்ச்சிகளோ எவை நடந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தைச் சில காடையர்கள் பயன் படுத்திக்கொண்டு, சில பகுதிகளில் தமிழ்பேசும் மக்களைத் தாக்குவது என்பது "அப்பே ஆண்டுவா" கோஷம் கிளம்பியதிலிருந்து சகஜமாகிவிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர மற்ற இடங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள், எந்தச் சமயம் யார் தாக்குவார்களோ என்ற பயத்துடனே நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து, நாளை ஒவ்வொன்ருக ஓட்டிவருகின்ருர்கள்.

சென்ற மே மாதத்திலிருந்து அவசர நெருக்கடி உத்தரவை அரசாங்கம் நீடித்து வருவதால் தான் தாங்கள் உயிருக்கு ஆபத்தின்றி இப்பகுதிகளிலிருந்து வெளியில் நடமாட முடிகிறது என்றும், நெருக்கடி உத்தரவை அகற்றிவிட்டால், வகுப்புவெறியர்களுக்குத் தாங்கள் பலியாக நேரிடுமென்றும் அவர்களிடையே பீதி சரியாகவோ, தவருகவோ இருப்பது பகிரங்க ரகசியம்.

### காரணம்

சென்ற மே மாதக் கலவரத்தில், டாக்டர் என். எம். பெரேரா கூறியதுபோல், அவசர நெருக்கடி உத்தரவை 24 மணிநேரம் தாமதமாகப் பிறப்பிக்கப்பட்டது. ஒருநாள் முன்னதாக அந்த உத்தரவைப் போட்டிருந்தால் பல உயிர்களும், சொத்துக்களும் காப்பாற்றப் பட்டிருக்கலாம்.

தேசமெங்கும் பொதுவாக ஒழுங்கீனங்கள் ஏற்பட்டாலே, அவசர நெருக்கடி உத்தரவை; தேசமெங்கும் பழைய சட்டப்படி பிறப்பிக்க முடியுமென்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும், ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கவோ, இரண்டொரு நாளுக்கும் இராணுவத் துருப்புகளை அனுப்பி வைக்கவோ அதிகாரமில்லையென்றும் அதனுல்தான் இத் திருத்த மசோதாவைக் கொண்டுவர நேரிட்டது என்றும் அரசாங்கத்தின் சார்பாகக் கூறப்படுகிறது.

"உண்மையான தொழிற் தகராறுகளை" இச்சட்டம் பாதிக்காதென்று அரசாங்கம் முதலில் ஒரு திருத்தம் கொண்டு வந்து,பின்னர் "உண்மையான" என்ற சொல்லையும் நீக்கிவிட்டதாயும், ஆகவே தொழில் சம்பந்தமான இந்தத் தகராறுகளிலும் இச்சட்டம் குறுக்கிடாதென்றும், அரசாங்கத்துக்கு எதிராக, தொழிலாளரைப் பயன்படுத்தி, நாட்டிற் குழப்பங்களை ஏற்படுத்த விரும்புகிறவர்கள்தான் இத் திருத்தச் சட்டத்தைப்பற்றிப் பயப்படவேண்டியிருக்கு மென்றும் கூறி, ஆசியாவிலேயே மேலான சனநாயக நாடு என்று கருதப்படும் இந்தியாவில், இதைவிடக் கடுமையான அதிகாரங்கள் அரசாங்கத்துக்கு இருப்பதாக இன்றைய அரசாங்கம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை கூறுகின்றது.

### கோப்பாயின் பதில்

இந்தியா உதாரணத்தைப் பற்றி, கோப்பாய் பிரதிநிதி திரு. ஸி. வன்னியசிங்கம் பிரதிநிதிகள் சபையிற் பேசுகையில் சரியான பதில் அளித்தார். ஒருமணி நேரத்துக்குமேல் தமிழிற் பேசினுர் அவர். 'ஹன்ஸார்ட்' எனும் பார்லிமென்ட் நடைமுறை அறிக்கையில் 23 பந்திகளுக்கு மேல் அவர் பேச்சுப் பிரசுரமாகியுள்ளது. சிங்களப் பேச்சுகள் அதிகரித்து வரும் சபையில் தமிழிலேதான் பேசுவதென்று உறுதி கொண்டிருக்கிருர் அவர். அவர் பேச எழுந்ததும், மூன்று முறை 'கோரம்' (நிறைவெண்) இல்லாமற் போயிற்று.

இதைக்கண்டதும் அவர், "கௌரவ சபாநாயகர்களே! எதிரிலே அமர்ந்திருக்கிற அன்பர்களுக்குத் தேனினுமினிய தீந்தமிழைக் கேட்பது நாராசம் தைப்பதுபோல் இருக்கலாம்.

[9-ம் பக்கம் பார்க்க]

## கிராம விருத்திக்கு ஒரு இலட்சம் ரூபாய்

இந்த ஆண்டு கிராமாபிவிருத்தி வேலைகளுக்கு என யாழ்ப்பாணத்துக்கு ஒரு இலட்சம் ரூபாயை மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. அதனை ஒவ்வொரு கிராம முன்னேற்றச் சங்கங்களினதும்அத்தியாவசிய தேவையை அறிந்து பங்கிடும் முயற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

வழக்கப்பிரகாரம் வீதி திருத்துதல், கிணறு வெட்டுதல் என்பனவற்றுக்கு மட்டுமன்றிப் பிரேத வண்டி செய்வதற்குக் கூடச் சில கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மான்யம் கோரியிருக்கின்றன. மற்றொரு கிராம முன்னேற்றச் சங்கம் சவரத்தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கும் உதவி கேட்டதாக அறியப்படுகிறது.

கனடா அரசாங்கத்தின் நன்கொடை யாழ்ப்பாணப் பகுதிக்கு இப்போது தாராளமாகக் கிடைப்பதில்லை என்ற குறையும் கி. மு. சங்க வட்டாரங்களில் நிலவிவருகிறது. இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை.நீர்ப்பாசனவேலைகளுக்கு மட்டுமே கனடா நிதியிலிருந்து பெரும்பாலும் பணம் வழங்கப்படுவதாகத்தெரிகிறது

# அடையாள வேலைநிறுத்தப் பேச்சின் விளைவு

## தொழிலாளர் பெற்ற ஒரு மணி அனுபவம்

— நமது நிருபர் —

ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்காகச் செய்யப்பட்ட முயற்சி யாழ்ப்பாணத்தில் ஒரு மணி நேர வேலை நிறுத்தம் ஒன்றை வெற்றிகரமாக நடத்திமுடிக்க உதவியது. இந்த வேலை நிறுத்தத்தைக் கடந்த வியாழக்கிழமை வகுப்புத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் நடத்தினர்.

பொது சனப் பாதுகாப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தை ஆதரித்து வகுப்புத் தொழிலாளர் சங்க உறுப்பினர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நடந்த சமசமாசக் கட்சியின் கூட்டத்திற் பேசினுர். இக் கூட்டத்தில் பேசியதுகண்டு ஆத்திரம் கொண்ட ஒப்பந்தக்காரர் அத்தொழிலாளியை வேலைநீக்கம் செய்தார்.

இச் செயலைக் கண்டிக்கும் முகமாக ஏனைய வகுப்புத் தொழிலாளர்கள் புதன்கிழமை காலை திடீர் வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தினர். இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமான ஒருமணி நேரத்துக்கிடையிலேயே சமரசம் ஏற்பட்டது. நீக்கப்பட்ட தொழிலாளிக்கு மீண்டும் வேலை கிடைத்தது.

இந்த வேலை நிறுத்தத்துக்கு திரு. எம். பெருமாள் தலைமை வகித்தார்.

## திருக்கோணமலையில் தமிழருக்குப்பல்கலைக்கழகம்

**தி**ருக்கோணமலையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவத் தீர்மானித்திருப்பதையும் இதற்குப் பூரண ஒத்துழைப்பைத் தமிழர்கள் அளிக்க வேண்டுமென்றும் காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் வேண்டிக் கொண்டார்.

தமிழர் நலனைக் கருதி ஒரு திட்டத்தை வகுக்கும் செயற்குழுவைத் தமது கட்சி அமைத்திருப்பதாகவும் அக்குழுவினர் எதிர்வரும் மார்ச்சு மாதம் 15-ம் திகதிக்கிடையில் தமது முடிபுகளைச்சமர்ப்பிப்பார்களென்றும் இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. இராஜவரோதயம் எம். பி. குறிப்பிட்டார்.

## இசைவிழாவில் ஹரிசனருக்கு இடமில்லையா?


**யா**ழ்ப்பாணத்தில் ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம்ஆகியவற்ருேடுதொடர்பு கொண்டு தீவிரம் பெற்ற சாதிப் பிரச்சினை இப்போது சங்கீத விழாவிலும் புகுந்து கொள்ள முயற்சிக்கிறது. சமீபத்தில் இங்கு நடைபெறவிருக்கும் இசைவிழா ஒன்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் இப்பிரச்சினைக்குச் சுமுகமான முறையில் முடிவு காண முயற்சிகள் நடைபெறுகின்றன.

தேநீர்ச்சாலை, ஆலயம் என்பனவற்றைப் பொறுத்தவரை ஏற்பட்ட மனமாற்றம் இசைவிழாவில் மட்டும் ஏற்படாமற் போவது ஆச்சரியப்படத்தக்கதாகவேயிருக்கும் எனச் சம்பந்தப்பட்டவர்கள் பேசிக் கொள்கின்றனர்.

நிலைமை சுமுகமாகச் சமாளிக்கப்படாத பட்சத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தக்கூடிய பல காரியங்கள் நிகழலாம்.

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா நடத்தும் இசைவிழாக்களில் ஹரிசனவகுப்பைச் சேர்ந்த இசைக் கலைஞர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென்று அகில இலங்கைச் சிறுபான்மை தமிழர் மகாசபை அண்மையில் வேண்டுகோள் விடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




பிரிட்ஜஸ்டோன் டையர்கள் மோட்டார் தேவைகள்
எல்லாவற்றையும் திருப்தி செய்யும் வண்ணம்
உற்பத்தியாக்கப்பட்டிருக்கின்றன.

ஏக விநியோகஸ்தர்கள் :

**ஓட்டோஸ் லிமிடெட்**

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## வண்ணை வைத்தீசுவரன் கோயில்

### மகோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசுவர சுவாமி கோயிற் கொடியேற்றம் 6–3–59 திங்கட்கிழமை ஆரம்பமாகி 26 தினங்கள் நடைபெறும். 23-ந் திகதி தேர்த்திருவிழாவும் 24-ந் திகதி தீர்த்த விழாவும் நடைபெறும்.

### விற்பனைக்கு

Z 4994 (Morris Eight) மொறிஸ் எயிற் கார் விநோதன்ஸ் அன் கோ, யாழ்ப்பாணம்.

திறமான இரும்புப் பெட்டிகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எவர் சில்வர் பாத்திரங்களுக்கு எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வேலைப்பாடுகள் அமைந்த திறமான இரும்புக் கேற்றுகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வான் EL நம்பர் Station Wagon த. பெ. இல. 49.

உத்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

குறித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆடர் நகைகள் செய்வதற்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

புதிய டிசையின் நெக்கிலஸ் முதலியன வேண்டுமானல், து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சிறு வீடு வாடகைக்கு தேவை. த. பெ. இல. 49

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## ஈழநாடு வரிவிளம்பரம்

★ திருமண அறிவிப்பு
★ நன்றி தெரிவித்தல்
★ விற்பனவு
★ கொள்வனவு

ஆகியவற்றை
இப்பகுதியில் விளம்பரம் செய்துகொள்ளலாம்.

**ஒருமுறை விளம்பரம் செய்வதற்கு முதல் 20 சொற்களுக்கு ரூ. 3-50. மேற்கொண்டு ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.**

மற்றும் வியாபார விளம்பர விகிதங்களுக்கும் ஒப்பந்த நிபந்தனைகளுக்கும் எழுதுக.

**ஈழநாடு வரிவிளம்பரப் பகுதி,**
தபாற் பெட்டி எண் 49,
**யாழ்ப்பாணம்.**



“ரேயல்” தலைமுடிகளுக்கும் மற்றும் பெண்கள் விரும்பும் கவர்ச்சிகரமான நாகரீகமான பலவித பொருட்களுக்கும் சிறந்த இடம்

## பென்ஸி பலெஸ்

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்



## தேவை

இலங்கையில் எல்லா மாகாணங்களிலும் ‘**ஈழநாடு**’ விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.

கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பம் செய்யவும்.

ஈழநாடு விநியோக மனேஜர்,
**ஈழநாடு**
தபாற் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.


# பீடி உற்பத்தித் தொழில்

## இளைஞர்களுக்கு வேலை

பீடி உற்பத்தித் தொழிலை யாழ்ப்பாணத்தில் விருத்தி செய்வதற்கானமுயற்சிகள் இப்போது ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. அதனைத் தயாரிப்பதற்குவேண்டிய மேல்இலையை வடபகுதியில் உள்ள காடுகளிலிருந்து தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாமென்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கோப்பாய் ஐக்கிய சுருட்டுச் சங்கத்தில் பீடித் தொழில் சில மாதங்களுக்கு முன் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்பட்டதன் பயனக இப்போது பல இளைஞர்களுக்கு அங்கு வேலை கிடைத்திருக்கிறது. பயிற்சியளிப்பதற்காக இந்தியாவிலிருந்து ஒருவர் வரவழைக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து காரைநகரிலும் பீடி சுற்றும் தொழிலைக் கற்றுக் கொடுக்கும்பயிற்சிமுகாம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதனை ஆரம்பித்து வைப்பதற்கான முக்கூடல் ராமகிருஷ்ண பீடித் தொழிற்சாலையின் அதிபரான திரு. ஏ. வி. பாலகன் அழைக்கப்பட்டிருக்கிறார்.

## பிளவுண்டு நிற்கும் தமிழினம்

‘பொருளாதாரத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை நாம் கடைக்கண்ணாற் கூடத் திரும்பிப் பார்க்க மறுக்கின்றோம். இவ்வளவு காலமும் யாழ்ப்பாண மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்துவந்தனர். இந்த உன்னத வாழ்வு எமக்கு நிரந்தரமானதன்று. நாம் என்றுமே எதிர்பாராத வகையில் இன்று மிகுந்த பொருளாதார நெருக்கடிக் குள்ளாகியிருக்கின்றோம்.’ இவ்வாறு சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கே. சபாபதிப்பிள்ளை அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற கல்லூரிப் பழைய மாணவர் விருந்து விழாவின்போது கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:

தமிழினம் இன்று பொறாமை காரணமாகப் பிளவுண்டு நிற்கின்றது. எமது இனத்துக்கே பேரிடி நேரிட்டாலும் எல்லோரும் விரும்பி ஏற்கும் தலைவர் தாமும் எம்மிடையே தோன்றுவதாயில்லை. என்னதான் இன்னல்கள் நேர்ந்தாலும் கண்களை மூடிக்கொண்டு இருந்து விடுகின்றோம். இன்றைய ஆபத்தான நிலையைக் கூட நாம் உணர மறுப்பது எமது மடைத்தனமேயாகும்.

மாறிவரும் கல்வித் திட்டத்துக்கேற்ப மிகச்சில கல்லூரிகளே தங்களையும் அதற்கேற்பப் பக்குவம்செய்து வருகின்றன. அழகிய இல்லங்களையும், அற்புதமான இயற்கைக் காட்சிகளையும் கிடுகு வேலிகள் இன்றுந்தான் திரைபோல் மறைத்துக்கொண்டு நிற்கின்றன. நாம் இனியேனும் விழித்தெழுந்து நமது சமூக பொருளாதாரக் கட்டுக் கோப்பை நிலையுள்ளதாக மாற்றி அமைக்க வேண்டும்.

தமிழர் கடந்த 30 ஆண்டுகளாக முற்போக்கான திட்டங்கள் எல்லாவற்றையுமே எதிர்த்து வருகின்றனர் என வழக்கறிஞர் ஏ. ஆர். ஆசீர்வாதம் கூறினர். அரசாங்க அதிபதி திரு. எம். ஸ்ரீகாந்தா, அத்தியட்சர் வண. ச. குலேந்திரன் ஆகியோரும் இவ்வைபவத்திற் கலந்துகொண்டனர்.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பயங்கரச் சூழ்நிலை

### மக்களின் துர்ப்பாக்கியம்

நாட்டில் அடுத்து வரவிருக்கும் வேலைநிறுத்த முஸ்தீபுகள் பற்றியே எங்கும் பேச்சாக வருகிறது. இதனைச் சாதகமாக்கி கொண்டு குறிப்பிட்ட சில பண்டங்கள் மறைவாகப் போய்க்கொண்டிருக்கின்றன. அத்தியாவசியத் தேவைப்பொருள்கள் இந்நிலைக்குள்ளானுற் பொதுமக்கள் பாடு மிகவும் கஷ்டத்திற்குள்ளாகும்.

இதனை வேலைநிறுத்தம்செய்யப்போகும் அரசியற் கட்சிகளும், அதனைத் தமது சட்டங்களால் வெற்றி கொள்ளலாம் என்று கருதும் அரசாங்கமும் உணர்ந்தேயுள்ளன. இவ்வெதிரான இருமுனைக் கத்திகளுக்குட்பட்ட பொது மக்கள் கதி யாது?

பொது ஜனப் பாதுகாப்பு ‘மசோதா’ மக்களுக்குப் பாதுகாப்புள்ளதோ — அன்றித் தேவையற்றதோ என்ற சிக்கல் பற்றி மக்கள் அக்கறை காட்டுவதாகக் காணேம். ஆனல் நிலைமை கட்டுக்கடங்காது — தொடர்ந்து செல்லுமானல் வாழ்க்கைப் பளுவை எப்படித் தலையிற் சுமப்பது என்ற பீதியே அவர்களை ஆக்கிரமித்துள்ளது.

இந்த நிலையை மாற்றவேண்டுமானல் மக்களின் நலனைக் கருதும் கட்சிகளும் அரசாங்கமும்தான் தீர்க்கமான முடிவுக்கு வருதல்வேண்டும்.

கடந்த வேலைநிறுத்தத்தின் போதும், அதைத்தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட கஷ்ட நிலைவரத்திலும் பட்ட தளும்பு மாறுவதற்கிடையில் இப்படியான பயங்கரச் சூழ்நிலை உருவெடுத்திருப்பது பாமர மக்களின் துர்ப்பாக்கியமே.

அன்றாட வாழ்க்கையைச் செப்பமான முறையில் கொண்டியக்க முடியாத அன்றாடம் காச்சிகளை அதிகமாகக் கொண்டது இந்நாடு. இப்படிப்பட்ட நாட்டில் அடிக்கடி இந்நிலை ஏற்படுமாயின் நாட்டின் அமைதி குலையும்.

நாட்டின் நிலையைத் திருத்துவதற்கும், சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் திட்டங்களை மேற்கொள்பவர்கள் பொதுமக்களின் நிலையையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். தமது எண்ணங்களே பொதுமக்களின் நோக்கமும் என்று அவர்கள் கருதுவார்களாயின் அது பிற்போக்கான நிலையையே சிருஷ்டித்துவிடும்.

நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளும் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேடுவதிலும் பார்க்க நாட்டின் அன்றாட தேவைகளை நிறைவேற்றக் கூடிய பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதே வரவேற்கத்தக்கது.

ஆர். என்.

யாழ்ப்பாணம்.

### வடபகுதியில் காணி நெருக்கடி!

சமீபகாலத்தில் நடைபெற்ற கலவரங்களின் உந்துதலினல் அரசாங்கத்திற் சேவைசெய்பவர்கள் தங்கள் நிலைமை பாரதூரமாகப் பாதிக்கப்படுவதை அறிந்து தாயகம் சென்று ஏதாவது செய்யலாமென நம்பினர். அவர்களின் பூரண விருப்பம் குடியேற்றத்திட்டங்களில் நிலம் பெற்று அங்கு விவசாயத்தை மேற்கொள்ளலாமென்பதே. ஆனல்அவ்வெண்ணத்திலும் இன்று மண் விழுந்துள்ளது.

சென்ற 23ஆம் திகதி அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகந்தா அவர்கள் காரைநகரில் உள்ள பீடிப் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் “வடமாகாணத்திலே தேவையான அளவு காணி கிடைக்காத புதிய நெருக்கடி ஒன்று தோன்றியுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார். அப்படிப்பட்ட நிலையில் தமிழர்களின் எதிர்காலம் யாது? என்ற புதிய கேள்வி எழுகின்றது.

எதிர்காலத்தில் முன்னர் போற் சிங்களப்பகுதிகளில் வியாபாரம் செய்யவோ, அன்றி உத்தியோகம் பார்க்கவோ முடியாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழரின் எண்ணிக்கை விகிதாசாரம் வருடாவருடம் அதிகரிப்பதாயின் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் எவ்விதம் தீர்வுபெறும். தலைவர்கள் இதனை அறிந்துகொள்வது நன்று.

சங்கானை **எஸ். சிவகுரு**

### சிமேந்தின் விலை கட்டுப்படுத்தவேண்டும்

காங்கேசன் சிமேந்துக்குக் கட்டுப்பாட்டுவிலை வேண்டும் என்றதீர்மானம் ஒன்று காங்கேசன்துறைப் பட்டினசங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கதே.

இன்றுவரை வியாபாரிகள் கட்டுப்பாட்டுக்குள் அமையாது சந்தர்ப்பத்தை ஒட்டி விலையில் ஏற்ற இறக்கம்காட்டித் தமது இலாபத்தைத் தட்டிக்கொண்டு வருகின்றனர். அன்றியும் ஒரு நாட்டின் தேசிய உற்பத்திப் பொருளை அந்நாட்டு மக்கள் நிர்ணயமான விலைக்குப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு மிக அவசியமாகும்.

உற்பத்திகுறைவான காலத்தில் ஒருவருக்குச் சிமேந்து தேவையானல் அவர் அதிக விலைகொடுத்துத்தான் வாங்க வேண்டும். விலையிற் கட்டுப்பாடு இல்லையேல் எவரும் விலையை எந்த அளவிற்கும் உயர்த்தலாம். ஆகவே, காங்கேசன்துறை பட்டின சங்கத்தின் இந்தத் தீர்மானத்தை சிமேந்துத் தொழிற்சாலைநிர்வாகிகள் கவனத்துக் கெடுத்துக் கொள்ளவேண்டும்.


**விலைவாசி**

தெல்லிப்பளை

**1935ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இவ்வாண்டு 125ஆவது ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது.**

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி


## கல்வித்துறையில் 125 ஆண்டுப்பணி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஒரு தோற்றம்

ஒருநாட்டின் வரலாறு அந்நாட்டிலுள்ள தாபனங்களின் வளர்ச்சியையும் விருத்தியையும் எடுத்துரைக்கும் கதையெனக் கூறின் அதுமிகையாகாது. அது மாத்திரமன்றித் தனிப்பட்டவர்கள் பல்வேறு துறைகளிலும் ஈட்டும் பெறுபேறுகளைக் கூறும் கதையாகவும் நாட்டின் வரலாறு அமைந்துவிடுகின்றது.

இன்று யாழ்ப்பாணத்திலே 125-வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பிறந்து வளர்ந்த கதையும் பொதுவாக ஈழநாட்டினதும் சிறப்பாக யாழ்ப்பாணத்தினதும் வரலாற்று ஏடுகளிலே மிக முக்கியமானதொன்றெனவே கூற வேண்டும். 1935-ம் ஆண்டிலே நூற்றாண்டு நிறைவுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய இக் கல்லூரி இவ்வாண்டு 125-வது ஆண்டு நிறைவுவிழாவையும் அதற்குரித்தான சீர் சிறப்புகளுடன் கொண்டாடுகின்றது.



டக்டர் பேர்சிவல் நிறுவிய பள்ளிக்கூடம்

வெஸ்லியன் மிஷனரிமார் 1814-ம் ஆண்டு ஜூன்மாதம் 29-ந் திகதி இலங்கையை வந்தடைந்தனர். யாழ்ப்பாணத்திலேயே அவர்கள் தங்கள் முதலாவது பள்ளிக்கூடத்தை 1817-ம் ஆண்டில் நிறுவினர். **யாழ்ப்பாணம் ஆங்கிலப் பள்ளிக்கூடம்** என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பெற்ற இப்பள்ளிக்கூடத்தை ஜேம்ஸ் லிஞ்ச் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவரே யாழ்ப்பாணத்து மெதடிஸ்ட் சபையின் முதலாவது தலைவராகும் பேற்றைப் பெற்றார். இன்று மத்திய கல்லூரி கண்கவர் கட்டடங்களுடன் காட்சியளிக்கும் இடத்திலேதான் அப்பள்ளிக்கூடமும் நிறுவப்பட்டது. அப்பள்ளிக்கூடத்துக்குத் தேவையான நிலத்தை ஜேம்ஸ் லிஞ்ச் அவர்கள் அரசினரிடமிருந்து விலைக்கு வாங்கினார்கள்.

1824-ஆம் ஆண்டில் வண. யோசேப் ருெபேட்ஸ் அவர்கள் வேம்படி மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கூடம் நிறுவுவதற்கான நிலத்தை வாங்கினர்.

1834-ஆம் ஆண்டில் வண. ஜேம்ஸ் ருெபேட்ஸ் இளைப்பாறவே, டக்டர் பீற்றர் பேர்சிவல் யாழ்ப்பாணம் மெதடிஸ்ட்சபையின் தலைவராகப் பணியாற்றினர்.

இவருடைய காலத்திலேதான் (1834) யாழ்ப்பாணம் ஆங்கிலப் பள்ளிக்கூடம், யாழ்ப்பாணம் மத்திய பள்ளிக்கூடம் என்ற பெயருடன் ஆண்பிள்ளைகளை மட்டும் பயிற்றும் பணியை மேற்கொண்டது.

இப்பெரியாரின் காலத்தில் இப்பள்ளிக்கூடம் கல்வித்துறையிற் புதிய திருப்பத்தைக் கண்டது. கிறிஸ்தவத் தொண்டு நலமுறுவதற்குத் தமிழ்மொழி வளர்ச்சி மிக அவசியமென்பதை உணர்ந்த பேர்சிவல் அவர்கள் தமது கல்லூரியிலும் தமிழ்மொழி ஆக்கத்துக்கான பாடதிட்டங்களை அமைத்தார்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த யாழ்ப்பாணம் மத்திய பள்ளிக்கூடத்தில் ஆறுமுகநாவலர் ஆங்கிலம் கற்க விரும்பி அங்கு மாணவனாகச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு. ஆங்கிலத்திற் தேர்ச்சிபெற்ற நாவலர் அவர்கள் இப்பள்ளிக்கூடத்திலேயே ஆசிரியராகவும் பணியாற்றினர்.

ஆறுமுகநாவலரின் தமிழ்ப் புலமையைக்கண்டு பேர்சிவல் அவர்கள் நாவலர் அவர்களின் உதவியுடன் விவிலிய வேதத்தைத் தமிழிற் பெயர்த்தார். இக்காலத்திலேதான் சென்னையிலும் விவிலிய வேத மொழி பெயர்ப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்படியிருந்தபோதிலும் பேர்சிவல் அவர்கள் மனம் சோராது தாம் மேற் கொண்ட பணியை ஆறுமுகநாவலரின் உதவியுடன் செய்து முடித்தார். விவிலிய நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு முடிவடைந்ததும் அவர் ஆறுமுகநாவலரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்னை பட்டணம் சென்ருர். அங்குள்ள சபையினர் ஆக்கியமொழி பெயர்ப்புடன் பேர்சிவல் அவர்களின் மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டபோது பேர்சிவல் அவர்களின் மொழி பெயர்ப்பே சிறந்ததெனக் கண்டு ஏற்கப்பட்டது. எனவே, 1850-ஆம் ஆண்டில் பேர்சிவல் அவர்களின் விவிலிய நூல் சென்னையில் அச்சுவாகனமேறியது. பேர்சிவல் அவர்களின் தமிழ் மொழிப்பற்று வேறும் பல துறைகளிற் பயன்பட்டிருப்பதைத் தமிழ் உலகம் நன்கறியும். யாழ்ப்பாணம் மத்திய பள்ளிக்கூடத்தின் மாண்புமிக்க அதிபராகப் பேர்சிவல் அவர்கள் 20 ஆண்டுகள் பணியாற்றினர். இவருக்குப்பின்னர். 1855-இல் வண. உவில்லியம் பாட்டர் சபையின் தலைவராகவும் பள்ளிக்கூட அதிபராகவும் பணியாற்றினர். சாமுவேல் கிறனியர் அவர்கள் பல துறைகளிலும் திறமை மிக்கவர். இவருடைய நற்சேவைகளும் இப்பள்ளிக்கூடத்துக்குக் கிடைத்தன.

மத்திய பள்ளிக்கூடத்துக்கு நற்புகழ் ஈட்டிக்கொடுத்த இச்சட்ட நூல் விற்பன்னருக்குப் பின்னர் தமிழ்ப்புலமை மிக்க உவில்லியம்நெவின்ஸ் அவர்கள் அதிபரானர். 'நியாய இலக்கணம்' என்னும் நூலை இயற்றிய இப்பேராசிரியரின் மகன் திரு நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள், யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியதைப் பலரும் அறிவர்.

உவில்லியம் சிதம்பரப் பிள்ளை நெவின்ஸ் அவர்கள் இப் பள்ளிக்கூடத்தை விட்டு விலகி 1886 இல் தாமே ஒரு புதிய பள்ளிக்கூடத்தை நிறுவினர். இதுவே இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக விளங்கி வருகின்றது. உவில்லியம் நெவின்ஸ் அவர்கள் இப்பள்ளிக்கூடத்தை விட்டு விலகித் தாமே புதியதொரு பள்ளிக்கூடத்தை நிறுவியதும் மத்திய பள்ளிக்கூடத்து மாணவர்கள் புதிய பள்ளிக்கூடத்தை நாடிச் சென்றனர். மாணவர்களின் தொகை அருகி வருவதைக் கண்ட சபையினர் வண. டி. பி. நயில்ஸ் அவர்களை அதிபராக நியமித்தனர். அவர் நிலைமையைச் சமாளித்துப் பள்ளிக்கூடத்தை நன்னிலைக்குக் கொண்டுவந்தார்.

யாழ்ப்பாண மக்கள் உதைபந்தாட்டத்தில் இன்று ஆர்வமிக்கவர்களாக இருக்கின்றனர். இந்த விளையாட்டில் யாழ்ப்பாணத்தை ஈடுபடச்செய்த பெருமை வண. கபிரியல் லீஸ் அவர்களுக்கே உரியது.

திரு. எட்வேட் மார்ட்டின் பதில் அதிபராக இருந்தகாலத்திலே (1900) மத்திய கல்லூரி வெளியீடு முதன் முறையாக வெளியிடப்பெற்றது. இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி அதிபராக விளங்கிய திரு. டபிள்யூ ரோமெயின் குக் அவர்களின் சேவையும் குறிப்பிடத்தக்கது.

இன்று இக்கல்லூரி சீருடன் விளங்குகின்றதாயின் அதற்கான முக்கியதுறைகளில் வண. வில்க்ஸ், திரு. குக், திரு. ஜே. கே. சண்முகம் ஆகியோர் சலியாது உழைத்தனர் என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். திரு. ஜே. கே. சண்முகம் 1894—1927 வரை அதிபராகப் புகழுடன் பணியாற்றினர். இவருடைய காலத்திற்ருன் ஷேக்ஸ்பியரின் நாடகம் முதன் முதலாக இங்கு அரங்கேற்றப்பெற்றது.

கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணத்தில் 1906ஆம் ஆண்டிலும், கொழும்பில் 1913ஆம் ஆண்டிலும் நிறுவப்பெற்றது.

முன்னுள் அதிபர் திரு. புல்லோ அவர்கள் இக்கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவிற் பங்குபற்றுவது அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதொன்றாகும்.

வண. பேர்ஸி ரீ. காஷ் அவர்களின் வருகையுடன் மத்திய கல்லூரியின் வளர்ச்சியும் துரிதமடைந்தது. தமிழ் மொழியை அவர் கட்டாயபாடமாக்கியதுடன் லண்டன் பரீட்சைகளுக்குரிய சில வகுப்புக்களையும் ஏற்படுத்தினர். அவருடைய இலட்சியங்கள் இன்று பெருமளவிற் பூர்த்தியாகியிருக்கின்றன.

திரு. சண்முகம் அவர்கள் கல்லூரி ஒழுங்கு முறைகளிற் கண்டிப்பாக நடந்து வந்தவராயினும் அவரின் இதமான சுபாவம் கல்லூரியின் விருத்திக்கு பேருதவியாகவிருந்தது. இவர் இளைப்பாறியதும் திரு. ஜே. டபிள்யூ அருட்பிரகாசம் 1929—1944 வரை அதிபராகப் பணியாற்றினர். இவருடைய காலத்திலேதான் இக் கல்லூரி புதிய கட்டிடங்களுடன் பொலிந்து விளங்கலாயிற்று.

வண. சிமித் அதிபராக இருந்த காலத்தில் திரு. சாள்ஷ் உதவி அதிபராக கடமையாற்றினர். திரு. சாள்ஷ் அவர் 1957இல் இளைப்பாறியதும் திரு. ஏ. ஈ. தம்பர் இன்று உதவி அதிபராகப் பணியாற்றி வருகின்றுர்.

இன்று இக் கல்லூரியின் அதிபராக டக்டர் நயில்ஸ் அவர்கள் செவ்வனே பணியாற்றுகின்றுர்கள். உலகம்சுற்றும் தமிழர்களில் ஒருவரான டக்டர் நயில்ஸ் அவர்கள் விரிவுரைகள் ஆற்றும் சிறப்பே தனி. அவருடைய ஆழ்ந்த ஞானமும், செயல் திறனும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரண்போல்வன.

ஆறுமுக நாவலர், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், வைமன்க திரவேற்பிள்ளை, ரி. செல்லப்பாபிள்ளை, நியாயவாதி நாகலிங்கம், கௌரவ சபாபதி, சேர் டபிள்யூ. துரைசுவாமி போன்ற சைவப் பெரியார்களையும் தமிழ் அறிஞர்களையும் தேச பக்தர்களையும் இலங்கைக்கு அளித்த பெருமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கே உரியதாகும். 'தமிழ்ப் பேரகராதி'யைத் தமிழ் உலகுக்கு உதவிய வைமன் கதிரவேற்பிள்ளை இக்கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியிருக்கிருர் எனின் இக்கல்லூரியின் பெருமையைப் பற்றிப் பேசவும் வேண்டுமா?

இத்தகைய சிறப்புக்களுக்கு உரித்தான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1935ஆம் ஆண்டிலே நூற்றுண்டு விழாவைக் கொண்டாடிற்று. இவ்வாண்டு 125ஆவது நிறைவு விழாவைக் கொண்டாடும் பெரும் பேற்றைப் பெற்றிருக்கின்றது.

உலக வாழ்வுக்கான கல்வியை மாத்திரம் இக்கல்லூரி மக்களுக்கு ஊட்டவில்லை. இறைவனின் செயல்கள் அனைத்திலும் காணப்படும் அற்புதங்களையும் உண்மைகளையும் இக்கல்லூரி அனைவருக்கும் எடுத்துரைத்து அவர்களை நல் வழியில் நடாத்தி வருகின்றது. இந்நாட்டின் சேவைக்கெனத் தன்னை அர்ப்பணம் செய்துள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிபல்லாண்டுவாழ்க!


★ சேமிப்புக்கும்

★ சீதன சேமிப்புக்கும்

★ நவீன சேமிப்புக்கும்

சிறந்த ஸ்தாபனம்

**இலங்கா நிதி லிமிற்றெட்**

தலைமைக் கந்தோர்: திருநெல்வேலி

கிளை: வண்ணுர்பண்ணை

( அதிகார முலதனம் ரூபா 50,00,000/- )

சிறுகதை

# செயற்கரிய செயல்

சுகி சுப்பிரமணியன்

புதிய இடத்துக்கு வந்தால் காலும் ஓடாது; கையும் ஓடாது. சிறுபிராயத்துள் பள்ளிக்கூடம் போனபோது, நாம் மற்றப்பிள்ளைவிட்டு ஒதுங்கி உட்கார்ந்திடுவோம். ஆசிரியரும் நம்மை அப்பாவியாக நினைத்துச் சிரிப்பார்; அல்லது அனுதாபம் காட்டுவார். பள்ளிக்கூடத்துள்ளே நடக்கும் புதிய உபசாரம் வேறு; அலுவலகங்களிற் புதிய மனிதனாக மாற்றலாகிப்போனால், புலிக் கூண்டுக்குள் சிக்கிக் கொண்டதற்குச் சமம். ஒவ்வொருவனும் தன் வேலையை என் தலையில் சுமத்துவதற்கு வழிகள் சொன்னார்கள். வேலைகள் பழகிக் கொள்வதிலுள்ள லாபங்கள் எத்துணை என்பதை விளக்கினார்கள். இவற்றுள் எவர் உதட்டுச் சிரிப்பர்கள், எவர் உள்ளத்துக் கொதிப்பர்கள் என்பதைத் தெரியாமல் பழகிவிடக்கூடாது.

நானும் ஒரு புதுமாடுபோல் எல்லோருக்கும் தலையசைத்துக் கொண்டிருந்தேன். அனுதாபத்தைவிட அகம்பாவிகள் நிறைய இருக்கின்ற உலகம். எல்லாம் அறிந்த எம்பெருமாள்கள் என்று சொல்லாமற் சொல்லிக் காட்டினார்கள். அந்த அலுவலகத்துக்கு நான் புதியவன். ஆனால் அவ்வுலகத்துக்கு அப்பாலும் உலகம் இருக்கிறதென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். தவறு செய்பவர்கள் தங்களைத் தவிர கெட்டிக்காரர்கள் இருக்கமாட்டார்கள் என எண்ணுவது இயல்பு; கெட்டிக்காரர்கள் தங்களுக்கு அப்பால் உலகத்தே கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள் என நினைப்பது இயல்பு.

நாகராசன் தன்னைப்பற்றி உயர்த்திச் சொல்லவும் இல்லை; தாழ்த்திச் சொல்லவும் இல்லை. அவனை எல்லோரும் முட்டாள் என்று சொன்னார்கள். அவர்கள் கூற்றுக்கள் எதையும் மறுக்காமல் இருந்தான்.

"நீங்களும் எனக்கு ஏமாளிப் பட்டம் சூட்டலாம். எனக்கு முன்னதாக உலகத்தில் முட்டாள் அவதரிக்கவும் இல்லை; எனக்குப் பின்னால் முட்டாள் வரப்போவதும் இல்லை. இன்னும் ஒரு வாரம் போனால் நீங்களும் என்னை மடமட்டி என்பீர்கள்?"

எனக்குத் துக்கமாக இருந்தது. ஆபீஸ் கடைநிலைச் சிப்பந்திகளும் அவனை இளக்காரமாகச் சொன்னார்கள்; பரிகாசம் செய்தார்கள்; அவன் எல்லோருக்கும் சிரிப்புத்தரும் சிலையாக இருந்தான். ஒருநாட் பொழுதுக்குள்ளாக எனக்கு அழுகை வந்தது. அத்தனை பேர்கள் தரும் முட்டாள் பட்டங்களை எவ்வாறு தாங்கிக் கொள்ளுகிறான். நானாக இருந்தால்? ஒன்று அவர்கள் முகத்தில் கரியைப் பூசுவேன். காய்ந்தும் விழுவேன். மனிதனுக்குள்ள பொறுமைக்கும் எல்லை உண்டு. போதாக் குறைக்கு அவன் சிற்றுண்டி கொண்டுவந்ததை யாரோ சாப்பிட்டுவிட்டார்கள். இது அங்கு சகசம் என்கிறார்கள்.

நாகராசன் அப்பாவியும் இல்லை. இளகிய மனசு; பெருந்தன்மையென்றும் சொல்வதற்கு இல்லை. "அவன் போக்கு அப்படி" என்று சொல்வார்களே அந்த இனத்தோடு சொல்லவேண்டும். ஒரு வாரகாலமாக அவன் பட்டபாடு எந்த மனிதனையும் துர்வாசராக்கும். எனக்குக் காரணமில்லாமலே இரண்டொருவர் மீது கோபம் வந்தது. அவர்கள் நாகராசன் எழுதிய குறிப்பை வைத்துக்கொண்டு பரிகாசம் செய்தார்கள். அவன் எழுதிய "பைல்" மீது பெரிய கோழிமுட்டை போட்டிருந்தார் மனேஜர். அவன் முகம் கன்றிக்கறுத்துப் போயிருந்தது. எனக்கு இவ்வாறு ஒருநாள் நடந்தால் விரோதிகள் மீது பாணம் தொடுத்திருப்பேன்.

முழுக்கமுழுக்கஎன் இதயத்துள்ளே அனுதாபம் பெற்ற ஒருவராகஇருந்தார்நாகராசன். அவர் அலுவலகத்துக்கு வரும்போது அவர் முகத்தைப் பார்த்துத்தான் "தேஜஸ்" என்பதற்கு விளக்கம் தேடவேண்டும். மாலையில் அவர் முகத்தைப் பார்த்துத்தான் "விளக்கெண்ணெய்" என்பதற்கு விளக்கம் காணவேண்டும். மலர்ந்தபூவைப் போல வருகின்ற மனிதனை வேலையால் கசக்கிக் கொல்லாமல், வேடிக்கையால், வீண் சொல்லால் ஏன் கொல்லுகிறார்கள்? நாகராசன் தனக்கு ஏற்படுகின்ற அவமானத்தை உள்ளே வரும்போதே உணர்ந்து முதலையைப் போன்று முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டால் ஒரு பயல் நெருங்கமாட்டான். இவ்வாறு சற்று வேலை உயர்ந்ததும் ஒருசிலர் முகத்தை 'உர்' என்று வைத்துக்கொள்வதையும், பதவி உயரும் என்ற எண்ணம் உள்ளவர்கள் முதலையாகப் பழகிக் கொள்வதையும் பார்த்திருக்கலாமே!

"ஐயா எனக்கு யோசனை இருக்கிறது. நான் வேண்டுமென்று தவறு செய்யவில்லை. எவ்வளவு முன்யோசனை கவனத்தோடு செய்தாலும் முட்டாள் பட்டம் பெற்றுவிடுகிறேன். எனக்குத் தவறு பழகிவிட்டது; எனக்குத் திறமை செத்துவிட்டது. நானும், நான்கு ஆண்டுகளாக இவ்வாறு வாழுகிறேன்."

என்னால் நம்பமுடியவில்லை. ஒவ்வொருநாளும் அவர் வருகின்றபோது ஆனந்தமாகச் சிரித்த முகமும் சீதேவியும் என்பார்களே அவ்வாறு வருகிறார்?

அலுவலகத்தைக் கடன் பூமியாக எண்ணிக்கொண்டு மாரடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவராக இல்லாமல் மனசார உழைக்கிறார். அப்படியிருந்தும் சூழ்நிலையும் அபிப்பிராயமும் சேர்ந்து "நித்ய முட்டாள்" பட்டம் சூட்டிவிட்டது. இனி மற்றொரு பிறவியெடுத்து வந்தாலும், அவர் கையில் எவரும் நல்ல காரியத்தைக் கொடுக்கமாட்டார்கள். இவ்வளவு பரிகாசத்துக்குள்ளான மனிதரை தகுதியற்றவர் என்று தள்ளிவிடலாம் என்றால்? அவர் மாமனார் அதே பகுதியில் பெரிய அதிகாரி. அதனால் எவருக்கும் அவர் வயிற்றைக் கிழிப்பதில் பயம். தமது மாமனார் உயர் பதவியில் இருப்பதற்காக, நாகராசன் தெம்போ திமிரோ கொள்ளுகிறாரா இல்லை?

அது என்ன பிறவியோ யென்ற அலுப்பைத் தருகிறபடி என் மனமும் ஒரு மாதத்துள்ளே கசந்து கொண்டது.

ஒரு மாதகாலமாக நாகராசன் உள்ளே நுழையும்போது பின்னல்போட்ட வலைப்பைக்குள் 'பிளாஸ்க்'கும், வெள்ளிடப்பாவில் சிற்றுண்டியும் கொண்டு வருவார். அவர் போட்டுக் கொண்டுள்ள வெற்றிலை மணம், கராம்பு ஜம்மென எங்கும் மிதக்கும். வெற்றிலைக் காவியில்லாமலே சிவந்த அதரங்கள். நெளிநெளியான முடிக் கற்றைகள். நெற்றிக்குக் குங்குமம் இட்டிருக்கிறார்; உதட்டின் ஒரு பகுதியைக் கிள்ளி வைத்ததுபோல. அவ்வளவு அழகிருந்தும், அப்பொழுது அலர்ந்த செந்தாமரையாக வருகின்ற பண்பை எப்படித்தான் கற்றுக் கொண்டாரோ? மாலையில் வெளியே போகும் போது, அவர் முகம் காய்ந்து கருவாடாகி, சோர்ந்துதான் போவார்.

மனிதனாக இருந்து, அவர் படித்தது உண்மையாக இருந்தால், மனித உருவத்துக்கும் உணர்ச்சியுண்டென்பதும் நிதர்சனமாக இருந்தால் அவர் சீவிச்சிங்காரித்துக் கொண்டு வரமாட்டார். வாய் நிறைய மணமணக்க வெற்றிலை தாம்பூலாதிகள் இடுக்கிக்கொண்டு வருவாரா?

சை இவரா மனிதன்?

— 2 —

பழைய புத்தகக் கடையில் கதைப்புத்தகம் ஒன்று வாங்கியபடியே பிரித்துக்கொண்டு நடந்தேன். அதிலே இருந்தது ஒருகதை, பழையகதை; சாமியார் குடிலுக்கு மற்றொரு சாமியார் போனார்; தமது பேச்சைக் கவனிக்காமல் குடிலுக்குச் சொந்தக்காரர் கம்புகொண்டு தரையில் தட்டுவதைக் கேட்டார் வந்த சாமியார். முடிவில் அந்தக்குடிலில் ஆறடி உயரத்துக்குத் தாவும் எலியைப்பற்றி அறிந்தார். எலிவளைக்குள் இருக்கும் தானியத்தைப் பறிமுதல் செய்தார் வந்த சாமியார் என்ற குட்டிக்கதையைப் படித்தேன். எனக்கு, கதைக் குப்பதில் நாகராசன் எண்ணம் உதித்தது.

நாகராசன் அலங்கார புருஷனாக வருகின்ற இரகசியம நொந்தமனசோடுபோகும் காட்சி இரண்டும் தொல்லை செய்தன.

நாகராசனிடம் பொய்யைச் சொல்லிவைத்தேன். அவனுடைய தெருவில் வாடகைக்கு வீடு கிடைக்குமென்று கேள்விப்பட்டதாகவும் அவன் உதவியும் வேண்டுமென்று சொன்னேன். நாகராசன் வீட்டுக்குக் கிளம்பும் சமயம் அவன் உடலில் உயிர் இருக்கிறதோ என்றபடி நடப்பார்.

"வாருங்களேன்" என்று சொன்னார்.

பின் தொடர்ந்தேன், இருவரும் பேசாமல் மோட்டார் ஏறினோம். பாவம், அவர் எதை எண்ணிக்கொண்டு சோகசித்திரமாக இருக்கிறாரோ? அவர் உள்ளத்துள்ளே வேதனைகள் வெந்து கொண்டிருக்க வேண்டும்.

அவரோடு நடந்தேன். அப்பொழுதும் அவர் சும்மா போய்க்கொண்டிருந்தார். என்னிடம் மட்டும் அனுதாபம் இருந்தது. இன்னும் நான் அவரைக் கேலிசெய்யவில்லை. கேலி செய்கின்றவர்கள்மீது கோபங்கொள்ளுகிறேன் என்ற மகிழ்ச்சியில் ஒருதினம் தமது மத்தியான உணவை எனக்குக் கொடுத்தார். ஆகா என்ன ருசி!

நான் அவர் வீட்டுக்குப் போனதும், திடுக்கிட்டேன். வந்தது பெண் அல்ல; இந்த யுகத்துப் பெண்ணும் இல்லை. மின்கொடி போன்ற பெண்; தாழம்பு வர்ணம்; ஒட்டுப் போடாமலே முழங்கால்வரை புரளும் ஜடைப்பின்னல்.

அவள், நான் உடன்வந்ததையும் எதிர் பார்க்கவில்லை. ஆகவே "ஹலோ வந்தீர்களா?" என்றாள். அவர் பையை மரியாதையாகவும், தொட்டுப் பறித்துக்கொண்டும் வாங்கினாள். என் கண்கள் நம்பவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

## உருத்திரபுரம் காந்தி நிலையம்

அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கத்தின் முயற்சியால் உருத்திரபுரம் 8-ம் வாய்க்காலில் "காந்தி நிலையம்" என்ற பெயருடன் அனாதரவான பிள்ளைகளுக்கான விடுதி சென்ற ஒரு வருட காலமாக நடைபெற்று வருகின்றது. காந்தி நிலையத்தில் இப்பொழுது 21அனாதரவான குழந்தைஉளர். இப் பிள்ளைகளுக்குக் கமத்தொழிலும், கைத்தொழிலும் அதற்கான கல்வியை ஊட்டவும் குருகுலமுறையான வாழ்க்கை முறைகளைப் பயிற்றவும் ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளன.

இந்த விடுதியில் உள்ள பிள்ளைகளின் உணவுத் தேவைக்காகச் சென்ற வருடம் அன்பர்கள் பலர் நெல்லும், நிதியும் உதவினர். அவ்வாறே இவ்வாண்டும் அன்பர்களின் உதவியைக் காந்தி நிலையத்து நிர்வாக ஊழியர்கள் நாடுகின்றனர். எனவே, இயன்ற நெல், நிதி, தானமாக உதவுமாறு அன்பர்களை நிலையத்தினர் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

விலாசம்: காந்தி நிலையம், 8 ஆம் வாய்க்கால், உருத்திரபுரம்.

## ரோட்டரி சங்கத்தில்


### திரு. லோகநாதன் பேச்சு

மக்களின்தேவையை இலங்கை வங்கி எவ்வளவு தூரம் நிறைவேற்றுகின்ற தென்பதை அதன் பிரதம அதிபர் திரு. ஸி. லோகநாதன் சமீபத்தில் யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கக் கூட்டத்திற் பேசும்போது விளக்கினார்.

இக்கூட்டம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணப் பெரும் பிரிவுக் கூட்டு நீதிபதி திரு. என். சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

திரு. லோகநாதன் "நாட்டின் பொருளாதாரத்தோடு இலங்கை வங்கிக்குள்ள தொடர்பு" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினர்.

கட்டடங்களுக்குத் தேவையான
பொருட்களுக்கு



போன்: 697

சண்முகம் ஸ்ரோர்ஸ்

பிரபல இரும்பு வியாபாரிகள்

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்

சிறந்த இடம்

விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957

மலாயா கபே

உரிமையாளர்: M. K. கதிரவேலு

36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

புத்தர் பிரான் முதன் முதலாக இலங்கையில் தரிசித்த புனித இடம்

# மகியங்கனை

செ. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு

இலங்கையிலே மிகப் பழமைவாய்ந்த பௌத்த சின்னங்களுள் ஒன்ருகக் கருதப்படுகின்ற மகியங்கனைத் தாதுகர்ப்பம், இலங்கை வரலாற்றிலே மாத்திரமன்றி பௌத்தமத வரலாற்றிலும் முக்கிய இடம் வகிக்கிறது. புத்தபிரான் முதன் முதலில் தரிசித்து தருமோபதேசம் செய்த இடத்திலே, அவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தலைமயிரை வைத்து அவர் உயிர்வாழ்ந்த காலத்திலே நிர்மாணிக்கப்பட்ட இக்கோபுரம், அந்நிய நாட்டவரின் ஆட்சியின்போது புறக்கணிக்கப்பட்டது. இதனல் பண்டைப் பெருமையை இழந்து, அழிந்கதாழிந்து போகும் நிலையை எய்தியது. ஆயினும் கடந்த பலவருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தாதுகர்ப்பத்தின் புனருத்தாரண வேலைகள் இப்போது பூர்த்தியடைந்துவிட்டமையால், இது மீண்டும் பௌத்தர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பௌத்த உலகிலே பிரசித்திபெற்று விளங்கிய இப் புனித தாதுகர்ப்பத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டும் என்ற பிரச்சனை, நாடு சுதந்திரமடைந்ததும் உச்சமடைந்தது. அவ்வமையம் முதலமைச்ராகவிருந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்கள், மகியங்கனைப் புனருத்தாரணச் சபை யொன்றினை நிறுவி அதனைப் புதுப்பிக்கும் கைங்கரியத்தின் பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனல் அப் பெரியாரின் மரணத்தின்பின் புனருத்தாரணப் பணியில் ஓரளவு காலதாமதம் எற்பட்டது. ஆயினும் 1953ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இப் பணியை மேற்கொள்ளும் வகையில் திரு. டட்லிசேனநாயக்கா அவர்கள் அத்திவாரக் கல் நாட்டினர். தொடர்ந்து இரு வருடங்கள் கழிந்தபின்னர், சேர் ஜோன் கொத்தலாவல அவர்களின் காலத்திற்ருன், புனித சின்னத்தைச் சீராக்கும்பணி உண்மையில் ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்களினதும் பௌத்த பிக்குகளினதும் முன்னிலையில் தாதுகர்ப்பத்தின் மத்தியிற் புத்தபிரான் புனிதப் பொருள்கள் வைக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

## பூர்வீகவரலாறு

புத்தர்பிரான் மகியங்கனையைத் தரிசித்த வரலாற்றுச் செய்திகள் மகா வம்சத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புத்தர் ஞானமடைந்த ஒன்பது மாதங்களுக்குப்பிறகு, அப்போது இங்கு வாழ்ந்த இயக்கர்களின் கொடுரத்தினின்றும் இலங்கையை மீட்கும் பொருட்டு மகியங்கனைக்குவந்தார். அவ்வமயம் மகாவலி கங்கையின் வலது கரைக்கண்ணமைந்த மகாநாக வனத்தில் வழக்கமாக அவர்கள் கூடுமிடத்தில் இயக்கர்கள் குழுமியிருந்தனர். வான் வழிவந்த புத்தர் இங்குவந்து அவர்களுக்கு அறவுபதேசஞ் செய்தார். இங்ஙனம் அறவுபதேசஞ் செய்த இடத்திலேயே, பிற்காலத்தே புனிதப்பொருட்கள் வைக்கப்பட்டு மகியங்கனைத் தாதுகர்ப்பம் நிர்மாணிக்கப்பட்டது. தம்மை நாடி வந்த தேவர்களுக்கும் தருமோபதேசம் செய்த புத்தபிரான், போதனையிறுதியிற் சமன்தெய்யுவான மகாசுமணனின் வேண்டுகோளின்படி தலைமயிர்களைப் பூசிக்கும் பொருளாகக் கொடுத்தார். தங்கத்தாலாய பேழையுள் அதனை வாங்கிய மகாசுமணன், பின்பு அம்மயிர்களைப் பலவர்ண இரத்தினக் கற்களின் மேல் வைத்து பத்தரை அடி உயரமுள்ள தாதுகர்ப்பத்தை எழுப்பினர். இதுதான் மகியங்கனைத் தாதுகர்ப்பத்தின் பூர்வீக வரலாருகும்.

## மற்றுமொருகாரணம்

பௌத்தமத வரலாற்றிலே இத்தாதுகர்ப்பம் சிறப்புற்று விளங்குவதற்கு மற்றுமொரு காரணமுமுண்டு. புத்தர்பிரான் பரிநிர்வாணமடைந்த பின்பு அவருடைய காறை எலும்பு (CollarBone) சாரிபுத்தரின் சீடனுகிய சரபு என்பவனுல் இங்கு கொண்டு வரப்பட்டு தாதுகர்ப்பத்துள் வைக்கப்பட்டுள்ளது. சரபு இத்தாதுகர்ப்பத்தை 18 அடி உயரமாகக் கட்டினுன் எனவும், பிற்காலத்தே உதசுலாபயன் இதனை 45 அடி உயரமாக்கினுன் எனவும் வரலாறு கூறுகின்றது.

கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் மகியங்கனை, சரித்திரத்தில் ஓர் யுத்தகளமாகக் காட்சியளிக்கிறது. தமிழருக்கெதிராகத் தீவிரப்பிரசாரம் ஆரம்பித்த துட்ட கைமுனு, மாஹமை என்னுமிடத்திலிருந்து சிங்களச் சேனையுடன் எல்லாள மன்னனைத் துரத்தி நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்துடன் இங்கு வந்தான். ஆனல் தமிழர்களின் எதிர்ப்பை இவனல் சமாளிக்க முடியாமல் போய்விட்டது. முற்றுக்கையிட்டு வெற்றிகொள்ளப்பலமாதங்கள் சென்றன. இங்குதான் தமிழருக்கும் துட்ட கைமுனுவுக்கும் முதன் முதலில் போர் நடந்தது. போரில் வாகை சூடிய துட்ட கைமுனுவின் சிந்தனை, பின்பு தாதுகர்ப்பத்தின் திருப்பணிகளில் சென்றது. போர் வீரர்களையும், அங்கு குடியேறியிருந்த மக்களையும் கொண்டு தாதுகர்ப்பத்தை 120 அடி உயரமாகக் கட்டுவித்தானும்.

## சிறிசங்கபோதி

கி. பி. 3-ம் நூற்ருண்டிலே அதாவது இறுதிக்காலத்திலே மகியங்கனை வரலாற்றில் மீண்டும் இடம் பெறுகிறது. அக்காலத்திலே சேல அபயன் என்ற மன்னனின் சகோதரரான நந்ததேரர் மகியங்கனையில் பிரதம பிக்குவாக இருந்தார். இவர் ஆங்குள்ள போதிமர நீழலிலிருந்து மதபோதனை செய்துவந்தார். ஓர்நாள் சேல அபயன் தன்மகனையும் உடனழைத்துச்சென்று, மதபோதனை பயிலும்படி அச்சங்கத்தின் ஆதரவில் விடுத்தான். சங்கத்தின் ஆதரவிற் போதி விருட்சத்தின்கீழ் போதனை பெற்றமையால், இவனுக்கு 'சிறிசங்கபோதி' என நாமகரணஞ் சூடப்பட்டது. சிறிசங்கபோதி, காலவரையில் பௌத்த மதா சாரங்களைக் கடைப்பிடித்துப் பண்புவாய்ந்த குணசீலனுக மாறினுன். பிற்காலத்தே தன் அரசபதவியைத் துறக்கவேண்டிய காலம் வந்தபோதும், சிறிசங்கபோதி மகியங்கனையை மறந்தானில்லை. அனுரதபுரத்திலுள்ள தன் மாளிகையினின்றும் நேரே மகியங்கனைக்குக் கால்நடையாக வந்து, மதோபதேசம் பெற்ற போதிநீழலில் தன் உடைகளை மாற்றி பிக்குக்கோலம் பூண்டு, அங்கிருந்து காட்டுவழியே அத்தனகலைக்குச் சென்ருன்.

இதன்பின்பு 500 ஆண்டுகளாக மௌனம்சாதிக்கும் சரித்திரத்திலே, மகியங்கனை மன்னர்களின் அரவணைப்பை இழந்துவிடுகிறது. 2-ம் சேனன் காலத்திலே (851—855 கி. பி.) மகியங்கனைத் தாது கர்ப்பத்தின் பராமரிப்புக்காக இவன் கிராமமொன்றினை நிவந்தமாக அளித்த செய்தி மகாவம்சத்தில் காணப்படுகிறது. இதே போன்று 2-ம் காசியப்பனும் (896—913 கி. பி.) சில ஆண்டுகளின் பின்பு கிராமமொன்றினை நிவந்தமாக அளித்தான். 1-ம் விஜயபாகுவின் காலத்திலே (1059—1114 கி. பி.), மகியங்கனைத் தாதுகர்ப்பத்துக்கயலில் சோழர்களை எதிர்க்கும் வகையில் பாசறையொன்றினை இவன் அமைத்தானென்றும் பின்பு தன்னுட்சிக்காலத்தே மகியங்கனையைத் திருத்தியமைத்தானென்றும், பல கிராமங்களை நிவந்தமளித்தானென்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

## சோழராட்சியில்

மகியங்கனைத் தாதுகர்ப்ப புனருத்தாரணம் சம்பந்தமாக சில பொறுப்புகளை ஏறத்தாழ 8 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொண்ட இலங்கைப் புதைபொருளாராய்ச்சியாளர் தரும் செய்திகளை இங்கு நினைவு கூருதல் நன்று. புனித பீடத்தைத் திறந்தபோது அங்கு காணப்பட்ட சிலைகள், பொற்காசுகள், இராஜேந்திர சோழன் காலத்தை (கி. பி. 1014—1044)ச் சேர்ந்த வெள்ளிக்காசுகள் என்பன தரும் சான்றுகளிலிருந்து இப்புனிதபீடம் 11-ம் நூற்ருண்டைச் சேர்ந்ததென்றும், மகாவம்சம் தரும்செய்தி ஒப்பக் கூடியதேயென்றும் 1-ம் விஜயபாகுவின் காலத்திலே புனருத்தாரணவேலை நடந்திருக்கலாமென்றும் டாக்டர் பரணவிதாரண அவர்கள் கருதுகிருர். 11-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் சோழராட்சியில் இலங்கையில் உள்ள பௌத்த புண்ணியஸ்தலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்றும், சிங்களவர்கள் மகாவிஜயபாகுவின் தலைமையின்கீழ் இலங்கை முழுவதையும் சுதந்திர நாடாக்கிய பின்னர் முதன்முதலில் மகியங்கனையே புனருத்தாரணம் செய்யப் பட்டிருக்க வேண்டுமென்றும் தமது அறிக்கையில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

17-ம் நூற்ருண்டிற் போத்துக்கீசப் படைகள் ஜெனரல்

( 12ஆம் பக்கம் பார்க்க )

இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸ்ஸன்

ஹெப்பற்ரே - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி

268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

"ஈழ மண்டல நாடு எங்கள் நாடே" (2)

# வாசலிடைக் கொன்றைமரம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(சென்றவாரத் தொடர்ச்சி)

முதலியார் தம்மிடம் வருகின்ற வித்துவானைத் தூரத்தே கண்டு எதிர் வந்து வரவேற்று உபசாரஞ் செய்தார். உபசாரங்களின்பிறகு 'வித்துவ சம்பாஷணம்' ஆரம்பமாயிற்று. வித்துவானுக்குச் சம்பாஷணத்தில் மனஞ் செல்லவில்லை. 'வாசலிடைக் கொன்றைமரம்' வித்துவானுடைய இருதயத்தை விழுங்கி வளரத் தொடங்கி விட்டது. சந்தேகம் கிளைகள் விட்டது. அதனல், நிகழ்ந்த வித்துவ சம்பாஷணம் மற்ருெரு வழியில் மாறியது. வித்துவான் அந்த வழியை ஆரம்பஞ் செய்து வைத்தார்.

"முதலியார் அவர்கள் 'பொன்பூச் சொரியும்' என்று தொடங்குகின்ற வெண்பாவைத் தயை செய்து ஒருமுறை சொல்லுதல் வேண்டும்."

"வித்துவான் அவர்களே, தொடக்கத்தில் 'பொன்பூ'ச் சொரிவதொரு வெண்பாவை நான் இதுகானும் அறியேனே."

"தங்கள் வீட்டின் பெருமையைத் தாங்கள் குறிப்பிட நாணி 'அவ்வெண்பாவை அறியேன்' என்கின்றீர்கள் போலும்."

"இல்லை! இல்லை! அப்படி ஒரு வெண்பாவை நாம் அறியேன். தாங்கள் அறிந்திருந்தால் சொல்லுங்கள்."

வித்துவான் வெண்பாவை ஒப்பித்தார். "வில்லவராயன் கனக வாசலிடைக் கொன்தை மரம்" என்று அது முடிந்தது. முதலியாரின் முகத்தில் ஆச்சரியமும் சற்றே நாணமும் மாறி மாறித் தோன்றின. மீட்டும் மீட்டும் அவ்வெண்பாவைக் கேட்க ஆசைப்பட்டார் முதலியார். வித்துவான் இரண்டாம் முறையும் ஒப்பித்து மூன்ருவது முறையும் ஒப்பித்தார். முதலியார் மனசிலும் வேர் விடத் தொடங்கியது கொன்றைமரம். முதலியார் சம்பாஷணத்தைத் தொடருவாராயினர்.

"வித்துவான் அவர்களுக்கு இந்த வெண்பா எவ்வாறு கிடைத்தது என்பதை அறியலாமா ?"

"யாம் தங்கள் கிருகம் யாண்டையதென்று விசாரஞ் செய்து கொண்டு வந்தபோது, அண்மையில் ஒரு சிறுவர் கூட்டம் எதிர்ப்பட்டது. அக்கூட்டத்தை அண்மி வினவினேம். அக்கூட்டத்துள்ளான ஒரு சிறு மகவு, வெளிப்போந்து 'பொன்பூச் சொரியும்' என்கின்ற இந்த வெண்பாவைச் சொரிந்தனன்."

அது கேட்டு முதலியாரின் முகலாவம் மாறியது. சிந்தனையில் ஆழ்ந்தார் முதலியார். 'இந்த வெண்பாவை இயற்றியவன் யாவன் ?' என்ற கேள்வி அவர் இருதயத்தில் எழுந்தது. பாடலைச் சொன்ன சிறுவனின் அங்க அடையாளத்தை வித்துவானிடம் அறிய முதலியார் விரும்பினுராயினும் அவர் மனம் அதற்கு இடந்தரவில்லை.

"யாரோ என்னை அறியாமல் இந்தக் கொன்றைமரத்தைப் பாடியிருத்தல் கூடும். அதனை அந்தச் சிறுவர்கள் பாடம் பண்ணியிருப்பார்கள். தங்களை ஒரு வித்துவான் என்று ஊகித்து, விளையாட்டாக அதனை ஒப்பித்திருப்பார்கள். தாங்கள் அவர்களை மன்னிக்க வேண்டும். உடனே பாட்டுத் தொடுக்கும் ஆற்றல் அவர்களுக்கு ஏது ? ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை." என்ருர் முதலியார்.

"மன்னிப்பதற்கு அவர்கள் செய்த தவறு ஒரு சிறிதும் இல்லையே. அவர்களை வாழ்த்து

( 12ஆம் பக்கம் பார்க்க )

மாதர் பகுதி

# பெற்றோரும் பிள்ளைகளும்

**பருவத்துக்கேற்றவாறு குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. என்றாலும் சில குறைபாடுகள் இன்றும் பலரிடத்தில் இருந்து வருகின்றன.**

இன்றைய சிறுவர்களே நாளைய சந்ததியினர். ஆகவே, அவர்களைச் சீரிய முறையில் வளர்த்துச் சான்றோராக்கும் பணி பெற்றோரைப்பொறுத்தது. இன்றையநிலையில் நம் செல்வக் குழந்தைகளை நாம் கருத்துடன் வளர்த்துவர வேண்டும்.

இல்லங்களிலும்சரி, பொது இடங்களிலும்சரி பெரியோர்கள் சம்பாஷிக்கும்போது குழந்தைகளை அருகில் வைத்துப் பேசுவது உகந்ததல்ல. சில சமயங்களில் தவறான வார்த்தைகளைப் பேசிவிடுகின்றார்கள். குழந்தை பக்கத்தில் இருப்பதை அவர்கள் உணர்வதில்லை. "சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை" என்பதுபோல குழந்தைகளும் அவர் வார்த்தைகளைச் சரியோ பிழையோ என உணராமல் அப்படியே பேசப் பழகிவிடுகின்றனர். இதற்கு மூலகாரணம் பெற்றோரே என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதோ என் வாழ்விற் கண்ட ஓர் உண்மையான சம்பவத்தை இங்கு கூறுகிறேன். தாய் தன் பிள்ளையைக் குளிப்பாட்டும் சமயம் அப்பிள்ளை சில தவறுகளைச் செய்யவே, "நாய், கழுதை, மூதேவி" என்ற தகாத வார்த்தைகளைக் கூறித் தாயார் வைகிறாள். அச் சொற்கள் குழந்தையைக் கண்டிப்பதாக இருந்தாலும், வேறொரு சமயத்தில் அக்குழந்தை தாய் கூறிய சொற்களை உபயோகித்துத் தன் சினேகிதர்களைக் கண்டித்துப் பேசியது. இவற்றைக் கண்ணுற்ற சில பெரியார்கள் பிள்ளையைத் தண்டிக்கின்றார்கள். தாய்மாரே, தந்தைமாரே நாம்செய்யும் தவறைப் பார்த்தீர்களா?

**வளர்ப்பு முறை**

பருவத்துக் கேற்றவாறு குழந்தைகளை வளர்க்கவேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. என்றாலும் சில குறைபாடுகள் இன்று பலரிடத்தில் உள; சிறுவயதிற் குழந்தைகளைப் பயமுறுத்தியும், கண்டித்தும், வீட்டுக்குள் பூட்டிவைக்கும்முறை அவர்களின் பிற்கால வாழ்விற் பெரும் பூகம்பங்களை ஏற்படுத்தும் என்பதை நாம் உணரவேண்டும். அண்மையில் என் கிராமத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு தெருவாற் போகும்போது ஒன்பது வயதான ஒரு பெண்பிள்ளை 'கூய்!... கூய்!!...... என்று கைகாட்டிக் கூப்பிட்டது. வியப்படைந்த நான் என் வேகத்தைக் குறைத்துக்கொண்டேன். சில விநாடிகளில் எனக்கருகாமையில் வந்த அப் பெண்பிள்ளை என் மடியைத் தடவிக் "காசுதா" எனக் கெஞ்சியது. என் உள்ளமும் உருகியது. அதேசமயம் என் உள்ளம் "குழந்தைகளின் வாழ்வைத் திரும்பிப்பார்" என எச்சரிக்கை செய்தது. உடனே அக் குழந்தைக்கு ஆறுதலான சில புத்திமதிகளைக் கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். இப்படியான இத் தவறுகள் பெற்றோரின் வளர்ப்பில் தங்கியுள்ளதே தவிர குழந்தைகளிடம் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும்.

**சுகாதாரம்**

சுகாதாரமுறைகள் கிராமப் பள்ளிகளில் மோசமானநிலையை அடைந்துள்ளன. கந்தையானாலும் கசக்கிக் கட்டுதற்கு வறுமை தடைசெய்கிறதா? இல்லை. குளிப்பதற்கு வசதி இல்லையா? எத்தனை நாட்கள் உங்கள் பிள்ளைகள் குளிக்காமல் இருக்கிறார்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்திருந்தால் தவறுகள் ஏற்பட இடமில்லை.

**கல்வி**

அரசாங்கத்திற் சேவை செய்வதற்காகப் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவது தவறு. அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரசைகளாகவிளங்கி நாட்டுக்குச் சேவைசெய்யவேண்டும் என்ற ஆசையை அவர்களுக்கு உண்டாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். தாய் தந்தையர் இவற்றைக் கவனித்துப் பிள்ளைகளின் நல் வாழ்வில் மிகுந்த ஊக்கம் கொள்ளவேண்டும்.

— செல்வி —


★ பெண்களுக்குத் தேவையான நவநாகரிகமான பொருள்களுக்கும்

★ மற்றும் குழந்தைகளின் 'விளையாட்டுச் சாமான் களுக்கும்

★ "ரேயல்" தலைமுடிகளுக்கும்

சிறந்த இடமெனப் பெண்கள் கூறுவது

★

பென்ஸி பலெஸ்

ஒன்றே!

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்


# குடும்பக் கட்டுப்பாடு மாநாடு

புதுடில்லியிலுள்ள விஞ்ஞான பவனத்தில் ஆறாவது சர்வதேசக் குடும்பக் கட்டுப்பாடு மாநாடு சமீபத்தில் நடைபெற்றது. குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்துக்கு ஆக்கமளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கையாளுமாறு ஐக்கிய நாடுகள் சங்கப் பொதுக் காரியதரிசி மூலம் உலகத் தாபனங்களை வேண்டிக் கொள்ளுவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவின் உதவிக் குடியரசுத் தலைவர் டக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மாநாட்டிற் பேசும்போது கூறியதாவது:

மக்களின் தரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் அதற்குத் தேக ஆரோக்கியமும் ஆரோக்கிய மன நிலையும் மிக அவசியமாகும். தாய்மாருக்கே தக்க போஷாக்கு இல்லை. சரிவரப் போஷாக்கு இல்லாத தாய்மார்கள் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களை சமாளிக்க வேண்டியிருக்கின்றது. இந்நிலையில் அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சரிவரப்போஷித்துச் சரியான முறையில் வளர்க்க வேண்டுமென எப்படி எதிர்பார்க்கலாம். குடும்பக்கட்டுப்பாடு இயக்க ஊழியர்கள் மக்களைப் புத்திசாலித் தனமாக அணுகி உண்மை உணர்ச்சியுடன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் விபரங்களையும் நோக்கங்களையும் விளக்கவேண்டுமென அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இவ்வாறு நீங்கள் பணியாற்றினால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்பது திண்ணம்.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களுட் சில வருமாறு:

உலக சுகாதார தாபனம் தனது சுகாதார வேலைத் திட்டத்திற் கர்ப்பத் தடைச் சாதனச் செய்திகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

உலக சுகாதார தாபனம் மக்களது சுகவாழ்வை விருத்தி செய்வதிலும், மரண விகிதத்தைக் குறைப்பதிலும் அரிய சேவை செய்திருக்கிறது. ஆனால், அது குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக மக்களுக்குப் பிரசாரம் செய்து பிறப்பு விகிதத்தைக் குறைக்கப் போதிய முயற்சி செய்யவில்லை. ஐ. நா. சமூக பொருளாதாரச் சபை வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான பெரிய சாதனமாகக் குடும்பக் கட்டுப்பாடு முறையைக் கருதி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

## கிராமப்புறங்களில் தொண்டர்கள் சேவை முக்கியம்.

இலங்கையிற் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் துரிதமாக முன்னேற்றமடைந்து சனப் பெருக்கத்தைக் குறைக்க உதவ வேண்டுமாயின் கிராமப் புறங்களில் இவ்வியக்கம் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும். இவ்வாறு டக்டர் சீதா சின்னத்தம்பி அவர்கள் புதுடில்லியில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு மாநாட்டில் பங்குபற்றிப் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். இலங்கைக் குடும்பக் கட்டுப்பாடு சங்கத்தின் உப தலைவரான டக்டர் சீதா சின்னத்தம்பி அவர்கள் மேலும் பேசுகையில் கிராமப் புறங்களிலே இத்துறையிற் சமூகத் தொண்டர்களும், பயிற்சிபெற்ற டக்டர்களும் உழைத்தல்வேண்டுமெனவும் கூறினர்.




தையல் வேலைக்கு உகந்த சித்திரம் இது. இதனைத் தலையணை உறைக்கும் மற்றும் தேவைகளுக்கும் உபயோகப்படுத்தலாம். இவ்வித சித்திரங்கள் மாணவிகளுக்கும் மாதர்களுக்கும் உபயோகமானவை.


ஈழநாடு
சுதந்திர வார இதழ்
சிவன் கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண் 49
யாழ்ப்பாணம்
இலங்கை
ஆண்டுச் சந்தா ரூ. 10-00
தனிப்பிரதி விலை சதம் |-20
ஆண்டுச் சந்தா முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.



★ நகைகளுக்கும்

★ வைரங்களுக்கும்



நகைமாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

65, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

# 'தீவாந்திரக் கைதிக்கு' லண்டனில் இராஜோபசாரம்

## ஐந்து லட்சம் சைப்பிரஸ் மக்களுக்கு அரசியல் விமோசனம்

சைப்பிரஸ் தீவின் சனத்தொகை மொத்தம் 5 லட்சம் தான். இதில் நான்கு லட்சம் பேர் கிரேக்கர்கள் மற்ற ஒரு லட்சமும் துருக்கியர்.

கிழக்கேயுள்ள துருக்கி, பழைய சரித்திர காரணங்களைக் கூறி சைப்பிரஸ் தங்களுடன் சேரவேண்டும் என்று கேட்டது. இது முடியாவிடில், அந்நாட்டை இரண்டு துண்டு போட்டு, அங்குள்ள துருக்கி மக்களுக்குத் தனிச் சுதந்திர மளிக்க வேண்டுமென்று வற்புறுத்தியது.

வடக்கேயுள்ள கிரீஸும், சைப்பிரசில் பெரும்பான்மையாகவுள்ள மக்கள் கிரேக்கர்கள் என்றும், அதனால் அத்தீவு அனைத்தும் தங்கள் நாட்டுடன் இணைய வேண்டு மென்றும், கிளர்ச்சி செய்தது.

ஆனால் சென்ற பல ஆண்டுகளாக, அத்தீவைக் குடியேற்ற நாடாக்கி ஆதிபத்திய அதிகாரம் செலுத்திவந்த பிரிட்டன் இந்த இரு யோசனைகளுக்கும் சம்மதிக்கவில்லை. மேற்கு ஆசியாவைச் சேர்ந்த க்யூவெயிற், யோர்தான் இங்குள்ள எண்ணெய்க் கிணறுகளுக்கும் பாதுகாப்பாக சைப்பிரஸ் கடல் தளம் தங்களுக்கு மிக அவசியமென்று உணர்ந்துள்ளன. சென்ற 5 வருடகாலமாக அத்தீவின் அடக்குமுறை ஆட்சி தாண்டவமாடியதிலே படுகளமாயிற்று. பல உயிர்கள் மடிந்தன. மக்கள் நிம்மதியாக வாழ முடியாமல் பரிதவித்தனர். இளம் பிரிட்டிஷ் சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர்.

கிரேக்க சமூகத் தலைவரான அதிமேற்றிராணியார் வண. மகாரியோவை மூன்றண்டுகளுக்குமுன் தேசப் பிரஷ்டம் செய்து, தூரத்திலுள்ள தீவாந்திரத்தில் சிறைப்படுத்தினர். ஒரு வருஷத்துக்குப் பின் அவரை விடுதலைசெய்து, சைப்பிரஸுக்கு வரப்படாதென்று தடை உத்தரவு போட்டனர். அவர் அமெரிக்கா, கிரீஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று தமது கட்சிக்கு ஆதரவு தேடினர்.

இதற்கிடையே துருக்கியின் தெற்குப்புறமுள்ள சைரியாவில் எகிப்திய நாஸரின் ஆட்சியேற்பட்டதும், மற்றொருபுறம் ஈராக்கில் புரட்சியேற்பட்டு, கம்யூனிஸ்ட் செல்வாக்கு அதிகரித்ததும், துருக்கிக்குத் திகைப்பேற்பட்டது. இதே சமயம், கிரீஸும், ஐ. நா. சபையில் சைப்பிரஸ் விஷயமாகச் செய்த முறையீடுகளும் பலிக்கவில்லை.

கிரீஸும், துருக்கியும் நாட்டோ என்னும் வட அத்லாண்டிக் ஒப்பந்த நாடுகள். இந்த இராணுவ உடன்படிக்கை ருஷ்யாவுக்கு மாறாகச் செய்யப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தைச்சேர்ந்த. இரு நாடுகளுக்குள்ளாகவே சைப்பிரஸ் விஷயமாகச் சச்சரவு ஏற்பட்டு வேற்றுமைகள் வளர்ந்து வருவதைக் கண்டு அமெரிக்காவுக்குக் கவலை. இச்சச்சரவால் "நாட்டோ"வின் பலமே சீர்குலைவதாகக் கண்டு, சைப்பிரஸ் சிக்கல் எப்படியாவது சுமுகமாகத் தீர வேண்டுமென்று விரும்பியது.

அமெரிக்காவின் தூண்டுதலின் மீது துருக்கி, கிரீஸ் அரசாங்கப் பிரதிநிதிகள், சுவிட்ஸலாந்திலே, சூரிச் எனுமிடத்தில் கூடி ஒரு சமரஸ ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

1. சைப்பிரஸ், அமெரிக்கா முறைப்படி ஒரு சுதந்திரக் குடியரசாகும். அதன் தலைவர் ஒரு கிரேக்க சைப்பிரஸ் வாசியாகவும், உபதலைவர் ஒரு துருக்கிய சைப்பிரஸ் வாசியாகவும் இருப்பர். சைப்பிரசிலுள்ள துருக்கிய மக்களின் விவகாரங்களில் அந்த உப தலைவருக்கு அதிகாரங்கள் இருக்கும்.

2. ஸைப்பிரஸ் ஒரு கம்யூனிசிய நாடாகிவிடக் கூடாதென்றும், கிரீஸுடன் இணைந்துவிடக் கூடாதென்றும் துருக்கிக்கு இரு பெரிய கவலைகள். இவற்றைத் தீர்ப்பதற்காக, ஸைப்பிரஸ் "நாட்டோ" உடன்படிக்கை நாடுகளில் ஒரு அங்கத்தினராக கிரீஸுக்கும், துருக்கிக்கும் பொது நட்பு நாடாக இருக்கும். இத்துடன் அங்கு கிரேக்க, துருக்கி, ஸைப்பிரஸ் கூட்டு இராணுவப் படைகள் இருந்துவரும்.

3. மத்தியதரைக் கடலில் பிரிட்டனுக்கு முக்கிய கடல் தளமாகவுள்ள ஸைப்பிரஸில், பிரிட்டன் தொடர்ந்து அத்தளங்களை வைத்திருக்கும்.

4. சைப்பிரஸிலுள்ள துருக்கிய சிறுபான்மைமக்கள் விஷயமாக புதிய பாதுகாப்பு ஏற்படும். அங்கு துருக்கிய இராணுவப் படையினரை அனுப்பி வைக்க முடிவதும், துருக்கிக்கு இரு பெரிய வெற்றிகளாகும். சமாதானத்தை முன்னிட்டு கிரேக்க பிரதமர், இந்த "தியாகத்துக்கு" இணங்கி, ஓர் அரசியல் ஞானியாகப் போகின்றார்.

சூரிச்சில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும், இரு நாட்டு அமைச்சர்களும் லண்டன் சென்று பிரிட்டனிடம் இதைத் தெரிவித்தனர். பிரிட்டனின் முதலமைச்சர் இதைவரவேற்று லண்டனில் சைப்பிரஸ் மாநாடு கூட்டினர். கிரேக்க, துருக்கிப் பிரதமர்களும், சைப்பிரஸிலுள்ள, இரு சமூகத்தினர்களும், அதிமேற்றிராணியார் வண. மக்காரியோசும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர்.

சிறைக்கைதியாக தீவாந்திரம் அனுப்பப்பட்ட மக்காரியோஸை லண்டனிலுள்ள முதல் தரமான டார்செஸ்ட் ஹோட்டலில் வைத்து, பிரிட்டிஷ் அரசாங்கம் இராஜோபசாரம் செய்ததுடன், சைப்பிரஸுக்கு சுதந்திரம் அளிக்கவும் சம்மதித்து விட்டது பெரிய காரியம். அங்கு அமைதியும் மக்களின் அபிமானமும் இல்லாவிடில் அத்தளத்தால் பயனில்லை என்று கண்டு பிரிட்டன் சைப்பிரஸுக்கு அரசியல் விடுதலை அளிக்கச் சம்மதித்து விட்டது. இனி சுதந்திர சைப்பிரஸ் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் சேர்ந்து இருக்குமென்று பிரிட்டன் நம்பிக்கை தெரிவிக்கின்றது.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது ருஷ்யாவுக்குப் பிடிக்கவில்லை. "சைப்பிரஸ்" மக்களின் சம்மதமில்லாமல் ஒரு சதி செய்யப்பட்டுவிட்டது என்று ருஷ்ய "பிராவ்டா" பத்திரிகை கண்டித்து எழுதியுள்ளது. இந்த ஒப்பந்தத்தால் "நாட்டோ" ஒப்பந்தம் ஓரளவு பலப்பட்டுள்ளதால், இது ருஷ்யாவுக்குப் பிடிக்காதது வியப்பில்லை.

ஆனால் சைப்பிரஸில், அவசர நெருக்கடியும் இராணுவ ஆட்சியும் நீங்கியதாலும் அரசியல் விடுதலை கிடைத்துள்ளதாலும் அங்கு பொது மக்கள் பொதுவாக மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். இரு சார்பினரும் நேரில் மனம் விட்டுப் பேசி மேலான ராஜதந்திரத்தைக் காட்டியதும், பிரிட்டன் பிடிவாதம் காட்டாமல் பெரிய மனதுடன் அரசியல் சுதந்திரம் அளித்ததும் இந்தச் சிக்கல் நீங்க வழி செய்தன. பிரிட்டனின் மற்றொரு குடியேற்றநாடு விடுதலை அடைந்ததும் ஐந்து லட்சம் மக்களுக்கு பல்லாண்டுகளுக்குப்பின் அரசியல் விமோசனம் கிடைத்ததும் வரவேற்கத் தக்கனவேயாகும்.

# இம்சைக்கு இனி இடமில்லை

கிரேக்க முதலமைச்சர் கார் மார்லிஸ் பிரதிநிதிகள் சபையிற் சைப்பிரஸ் விஷயமாகத் தாம் நடாத்திய பேச்சு வார்த்தைகளை ஆதரித்து நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும்படி கோர இருக்கிறார்.

மக்காரியோஸ் சைப்பிரசுக்கு திரும்புவதற்கு முன் அவருடைய பெட்டி படுக்கைகள் அங்கு போய்ச்சேர்ந்துவிட்டன. ஒரு பொன்டியாக் மோட்டார் வண்டியும், ஒரு கடில்லாக் மோட்டார் வண்டியும் அவர் பெயரில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. "இனி இம்சைக்கு இடமில்லை. இயோக்கா என அழைக்கப்படும் இயக்கத்துக்கு வேலையில்லை. நான் சொன்னல் கேட்பார்கள். அதைக் கலைத்து விடலாம்" என இவர் கூறினர்.

## இந்தோனேஷியா

இந்தோனேஷியாவின் ஆட்சி முறை எப்படி இருக்கவேண்டுமென்று குறித்துக் கடந்த இரண்டாண்டுகளாக இருந்துவந்த தகராறு இனித்தலைகாட்டமாட்டாது. அங்கு மீண்டும் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படும் என முதலமைச்சர் சுவாண்டா தெரிவித்துள்ளார். இவ்வாட்சி முறையே ஏற்பட வேண்டுமென்ற டக்டர் சுகர்னேவின் கருத்தை இராணுவமும் ஆதரித்துள்ளது. சுகர்னேவின் திட்டப்படி இந்தோனேஷிய அரசாங்கத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் நியமனப் பிரதிநிதிகளும் இடம் பெறுவர்.

# நேதாஜி போஸ் இவ்வாண்டில் இந்தியா வருவார்

நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் 1959-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து விடுவார் என்று பங்களூரிலிருந்து வெளிவரும் பிரபல "சோதிட சஞ்சிகை" அதன் ஆண்டு மலரிற் கூறுகின்றது.

1945-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இரண்டாவது உலக யுத்தம் முடிந்த சமயத்தில் நேதாஜி ஒரு விமான விபத்தில் சிக்கி மாண்டதாகக் கூறப்பட்டது. அவரது அஸ்திகள் ஜப்பானில் எடுத்து வைக்கப்பட்டதுடன், இந்தியாவிலிருந்து இதுபற்றி விசாரிக்கச்சென்ற விசேஷ குழுவினரும், நேதாஜி மாண்டுவிட்டது உண்மைதான் என்று தெரிவித்தது.

என்றாலும், நேதாஜியின் உத்தம நண்பரும், தமிழ் நாட்டு நேதாஜி முத்துராமலிங்கத் தேவர், இன்னும் நேதாஜி உயிருடன்தான் இருக்கிறார் என்றும் தக்க சமயத்தில் அவர் வந்துவிடுவாரென்றும் உறுதியாகக் கூறிவருகின்றார்.

தேவரை நான் சென்ற அக்டோபர் மாதம் புதுக்கோட்டைச் சிறையில் அவர் விசாரணைக் கைதியாக இருக்கையில் சந்தித்து ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்குமேல் பேசிக் கொண்டிருந்தேன். அப்போதும் அவர் நேதாஜி உயிருடன் இருப்பதாகவே தெரிவித்தார்.

"உலகமே நம்பாத நிலையில் தாங்கள் இப்படிக் கூறுவதற்கு ஆதாரமென்ன? இப்போது அவர் இந்தியா வருவதற்கு என்ன தடை?" என்று கேட்டதற்கு, அவர் கூறினர், "இப்போது யுத்தம் முடிந்துவிடவில்லை. இது யுத்த நிறுத்தமேயாகும். மற்றொரு யுத்தம் எப்படியும் வரத்தான்போகிறது. அதற்காகத்தான் ரஷ்யாவும், அமெரிக்காவும் ஆயுத முஸ்தீபுகள் செய்துவருகின்றன. அந்த முடிவான யுத்தம் வந்து, உலகில் ஏகாதிபத்தியங்கள் மறைந்து, எல்லா நாட்டு மக்களும் சுதந்தரமாக, சரிநிகர் சமானமாக வாழவழிபிறக்கும். அச்சமயம் நேதாஜிபோஸ் மீண்டும் தோன்றி உலகுக்கே தலைமை வகித்து நடத்துவார்" என்றார்.

"அவர் இப்போது எங்கிருக்கிறார்? அவருடன் தங்களுக்குத் தொடர்பு உள்ளதா?" என்று கேட்டதற்கு, "இதெல்லாம் ரகசியம். இதைப்பற்றி அதிகம் கேளாதீர்கள். எனக்கும் அவருக்கும் தொடர்பு இருந்துதான் வருகிறது" என்றார்.

இலங்கையின் பிரபல சோதிடர் திரு. கே. எஸ். ராஜலிங்கம் இவ்விஷயமாக எழுதுகையில், தாம் நேதாஜி பற்றி இவ்விதமே கூறியும் எழுதியும் வந்துள்ளதாயும் நேதாஜி இந்தியாவில் தோன்றுவாரென்றும் தெரிவிக்கிறார்.

"நேதாஜி அவர்களுக்கு இப்போது நடப்பது சனி மகா திசை. சந்திர புத்தி 19-1-59ல் ஆரம்பமானது. இது 19 மாதங்களுக்கு நடக்கும். இக்காலத்தில் நேதாஜி இந்தியாவில் தோன்றித் தலைமை வகித்து நடத்துவார். கார்த்திகைக்குள் நடப்பதைப் பார்க்கவும்" என்று எழுதுகின்றார்.

### நேதாஜி ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | செ | 12 |
| சுக் | உத்திரம் | | ல. கே |
| சூ. ரா | | | வி |
| பு. 6 | 5 | சனி | சந் |

1897-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் திகதி சுபாஸ் வங்காளத்தில் அவதரித்தார்.


உங்கள் கார் **பற்றறிகளைத்** திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




**சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ்**

402, கே. கே. எஸ். வீதி :: யாழ்ப்பாணம்

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு மாசி மீ 16 உ (28-2-59)


## கிராம ராச்சியம்

மற்ற விஷயங்களில் முதலமைச்சருக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கும் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம்; ஆனால் கிராமாபிவிருத்தி பற்றி இருவருக்கும் மனவொற்றுமை உள்ளதென்பது, சமீபத்தில் ரூவான்வெலையில் இருவரும் தங்கள் அரசியல் மனஸ்தாபங்களை மறந்து, கிராமாபிவிருத்திச்சங்க விழாவிற் கலந்துகொண்டதிலிருந்து தெரிகிறது. பொது மக்களின் நன்மைக்கான இவ்வித பொது விஷயங்களில் இரு சார்பினரும் ஒத்துழைப்புடன் எவ்வளவோ முன்னேற்றங்களைக் காண முடியும்.

பத்தாண்டுகளுக்கு முன்பாகத்தான், தீவெங்கும் கிராமாபிவிருத்திச் சங்கங்களை உள்நாட்டு அமைச்சு ஆரம்பித்தது. அதற்குமுன் தலதாபன அமைச்சரென்ற முறையிலே திரு பண்டாரநாயக்கா, தமது பகுதி மூலம் "சமூக நிலையங்களை", பல கிராமங்களிலும் அமைத்திருந்தார். தமது அரசியற் செல்வாக்கைக் குறைக்க வேண்டுமென்றே, போட்டியாகக் "கிராமாபிவிருத்திச் சங்கங்கள்" ஆரம்பிக்கப்பட்டதாக முதலமைச்சர் வாய்விட்டுத் தெரிவித்தாலும், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் நல்லபணி செய்வதாய்ப் பாராட்டினர். என்றாலும் இப்போதும் பல கிராமங்களில் இவ்விரு தாபனங்களும் போட்டா போட்டிபோல் இருந்து வருவதாயும் பார்க்கின்றோம்.

கிராமாபிவிருத்திச் சங்கங்களுள் ஒரு சிலதான் மேலான முறையில் நடைபெறுகின்றனவென்றும் பெரும்பாலானவை தூங்கிவிழுவதாயும், சமூக நிலையங்கள் எனப்படுவன போதிய பணமின்றி, தக்க வேலை செய்ய முடியாமல் இருப்பதாயும் கூறப்படுகின்றது. பத்தாண்டுக்கு முன் எக்காரணம் பற்றி, போட்டி தாபனங்களாக இவை அமைக்கப்பட்டாலும் இன்றைய அரசியல் சூழ் நிலையில், ஒரே கிராமத்தில், கிராமாபிவிருத்திச் சங்கமும், சமூக நிலையமும் தனித்தனியே இருக்கக் காரணமில்லை. இவ்விரண்டையும் இயக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. இயக்கத்தால், நிர்வாகச் செலவுகள் குறைவதுடன், கட்டுப்பாடாகக் கிராம மக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்வது சாத்தியமாகும்.

உண்மையில் கிராமங்கள் அபிவிருத்தியாக வேண்டுமாயின், கிராம மக்கள் ஊக்கமெடுத்துத் தங்கள் கிராம நிர்வாகத்தைத் தாங்களே வகித்து நடத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் இதுவரை கிராமங்களை எல்லாம் கொழும்பிலிருந்து தலைமை அரசாங்கமே ஆட்டிவைக்கின்றன. தலைமை அரசாங்கம் எவ்வளவுக்கெவ்வளவு தலையிடாமல், கிராம மக்களுக்கு நிர்வாக சுதந்தரம் அளித்து இங்கு கிராம ராச்சியம் ஏற்பட உதவுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கிராமமக்கள் புத்துணர்ச்சியும் உற்சாகமும் காட்ட முன்வரலாம். பிரதேச சபைகள் ஏற்படுத்தி, மாகாண சுயாட்சி அளிக்கப்போவதாகக் கூறிவந்த முதலமைச்சர் சென்ற சில காலமாக இதுபற்றி ஏனோ மௌனம் சாதிக்கின்றார்.

பக்கத்தில் பாரத நாட்டிலே ஆசார்ய வினோபாபாவே தாம் பெற்ற பூதான கிராமங்களில், கிராம மக்களைக் கொண்டே கிராம ராச்சியம் நடத்த ஒழுங்குகளைச் செய்துள்ளார். அங்கு தலைமை அரசாங்கமும், மண்டல ராச்சியங்களும் இதற்கு உதவியாகச் சட்ட திட்டங்களைச் செய்து ஆதரிக்கின்றன. பிறர் தலையீடுகள் இன்றிக் கிராம மக்கள் தங்கள் கிராம நிர்வாகத்தைத் தாங்களே நடாத்திக் கொள்ள முடியும்போதே, காந்தி அடிகள் வற்புறுத்திவந்த கிராம ராச்சியம் உருவாக முடியும். கிராமங்களில் வேலையில்லாக் கஷ்டம், பஞ்சம், பட்டினி இவை இராததுடன், கிராம மக்கள் சீவனத்துக்காக நகர்ப் புறங்களுக்குச் சென்று பரதவிக்கத் தேவையிராது. இவ்விஷயமாக வினோபாபாவே காட்டும் முன் மாதிரி இலங்கைக்கும் பயன்பட வேண்டிய சமயம் வந்துவிட்டது.

### மகத்தான சேவை

மக்கள் சேவையே இறைவன் சேவை என்னும் தூய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் பணிகள் என்றுமே நற்பலன் அளித்துவருகின்றன. இதே நோக்கத்துடன் யாழ்ப்பாணத்திலே 1817ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற யாழ்ப்பாணம் ஆங்கிலப் பள்ளிக்கூடம் இன்று **யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**யாக மலர்ந்து ஈழவளநாட்டில் நற்புகழ்நாட்டி வருகின்றது. இது உண்மையாகவே மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். கிறிஸ்துவின் நற்போதனைகளையும், மணிமொழிகளையும் மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களைக் கிறிஸ்த சமயத்திற் சேர்த்துக்கொள்வதே கிறிஸ்த தொண்டர்களின் நோக்கமாக இருந்துவருவதாயினும், கல்வித்துறையில் அவர்கள் ஆற்றிவரும் அரும்பணிகள் நாட்டுக்குப் பெரும்பயன் அளித்துவருகின்றன. தமிழ்மொழி இன்று மலர்ச்சியுறுவதற்கும் கிறிஸ்த தொண்டர்கள் பலர் மேற்கொண்ட வழிகளே காரணமாகும். பேராசிரியர் பேர்சிவல் தமது சமயத்திற்கொண்ட பேரார்வமானது தமிழ் வசன நடைக்கும் வித்தாக அமைந்துவிட்டமை தமிழ் பேசும் மக்களின் பாக்கியமேயாகும். இப்பெரியாரின் தமிழ்ப்பற்றினைத் தமிழ்மொழி ஆக்கத்துக்கு நன்கு பயனுறுமாறு செய்த பெருமை நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்களையே சாரும். யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆறுமுகநாவலர் அவர்களைத் தமிழ் உலகிற்குத் தந்ததுமன்றி, ஈழநாட்டின் சமய, சமூக, அரசியல் துறைகளிற் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய பெருந் தலைவர்களையும் இக் கல்லூரி அளித்துள்ளது. இத்தகைய தாபனம் 125 ஆம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அதன் வளர்ச்சிக்காகச் சலியாது உழைத்த தொண்டர்களையும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கல்லூரியின் விருத்திக்காக இன்றும் ஆர்வத்துடன் உழைத்து வருபவர்களையும் நாடு வாழ்த்துகின்றது; நாமும் வாழ்த்துகின்றோம்.

### அடையாள வேலை நிறுத்தம்

பாதுகாப்புத் திருத்த மசோதாவை ஆட்சேபிக்கப் பொது வேலைநிறுத்தம் செய்யாமல் ஒரே ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம்மட்டும் செய்வதென்று தொழிற்சங்கக் கூட்டுசபை செய்துள்ள முடிவு வரவேற்கத்தக்கதாகும்.

தொழிற்சங்க இயக்கத்திலே வகுப்புவாத விஷத்தைப் புகுத்தச் சில சுயநலமிகள் சமயம் பார்த்திருக்கிறார்கள். ஒருநாள் வேலைநிறுத்தச் சந்தர்ப்பத்திலும் அவ்விஷமிகள் வகுப்பு வெறியைக் கிளப்பிவிடக்கூடும். ஏற்கெனவே தமிழருக்கு மாறான சில வகுப்புவாதத்துண்டுப் பிரசுரங்களும், சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சமூக ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று கவலை காட்டும் முதலமைச்சர், இதில் வகுப்பு வெறியர்களுக்கு இடமளிக்காமல் அமைதியை நிலைநாட்ட முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.

இவ்விஷயத்தில் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் அதிக பொறுப்புண்டு. பொதுமக்களிடையே, பொறுப்புவாய்ந்தவர்கள் ஆங்காங்கே கட்டுப்பாடாகச் சேர்ந்து, உறுதியுடன் நின்றால் காடையர்கள் தானாக அடங்கிவிடுவர்.

இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிற் சங்கங்களிற் பலவற்றுக்கும் அரசாங்கத்தைத் திகைக்கச்செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லை. பிற்போக்கான இச் சட்டத்தை ஆட்சேபிக்கும் அறிகுறியாகவே இதில் அவை ஈடுபட்டுள்ளன. ஆகவே, அரசாங்க சிப்பந்திகள் உள்ளிட்டு, இதில் ஈடுபட்டவர்களை அரசியல் விரோதிகள் என்று கருதிவிடாமல், அவர்களது பீதிகளைப்போக்கி, அவர்களது நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெறும் முறையிலே இனி முதலமைச்சர், தக்க முயற்சிகளைச் செய்வதே தீர்க்க தரிசனமும் மேலான இராசதந்திரமுமாகும்.

### அமைச்சர் உபதேசம்

வர்த்தக அமைச்சர் தமது தொகுதி மக்களின் கூட்டமொன்றிற் பேசுகையிற் பலாத்காரப் புரட்சி வேலைகளில் ஈடுபடும் காடையருக்கு இடமளிக்காமல் அவர்களை ஒழிக்கவேண்டுமென்றும் காந்தி அடிகளின் அஹிம்சை வழியைப் பின்பற்ற வேண்டுமென்றும் உபதேசம் செய்தார். இது நல்லதே.

வசதியான ஒரு விஷயத்தில் மட்டுமன்றி எல்லா விஷயங்களிலும் காந்திஜி கூறிய உபதேசங்களை மதித்துப் பின்பற்ற வேண்டும். உதாரணமாக இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினருக்குச் சுலபமாகக் குடியுரிமை கிடைப்பதாக இருக்கவேண்டுமென்றும், ஐந்து வருடங்கள் இங்கு குடியேறி வசித்தவர்கள் இஷ்டப்பட்டால், இவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்படாதென்றும் காந்தி அடிகள் கூறினர்கள். இரு நாடுகளுக்கும் நட்புப் பிணைப்பைப் பலப்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தினர்கள். இந்த விஷயத்திலும் வர்த்தக அமைச்சர் அடிகளின் யோசனையைப் பின்பற்றி நடப்பாரா? நடந்தால் அவர் ஒரு பெரிய சிக்கலை நல்லபடி தீர்க்க உதவுவதுடன் பிறருக்கும் மேலான முன் மாதிரி காட்டுவதாக இருப்பார்.

### தெமிசின் தேசவுடைமை!

தேசவுடைமை என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு சில அரசியல் வாதிகள் அவசியமற்ற துறைகளில் தலையிடுவது சனநாயகத்துக்குத் தலையடி கொடுப்பது போன்ற செயலாகும். அதுவும் மக்களாட்சி இலங்கையில் நடைபெற்றுவருவதாகத் திக்கனைத்தும் பறைசாற்றி வரும் எம். ஈ. பி. கட்சியைச் சேர்ந்தவர்களே தனி மக்களின் சுதந்திரத்துடன் சருவ முயற்சிப்பது அரசியற் சிறுபிள்ளைத்தனமன்றி வேறொன்றுமில்லை. பத்திரிகைகளைத் தேசவுடைமையாக்க வேண்டுமெனக் கொழும்பு மத்திய தொகுதிப் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. எம். எஸ். தெமிஸ் பிரதிநிதிகள் சபையிற் சமர்ப்பித்துள்ள பிரேரணையைப்பற்றித்தான் இங்கு குறிப்பிடுகின்றோம். ஒரு சில முதலாளிமாரின் ஆதிக்கத்திலே தினசரிப் பத்திரிகைகள் இருந்து வருவதால் அவர்கள் பத்திரிகை உலகிற் சர்வாதிகார 'தர்பார்' நடாத்திவருகின்றனர் என்பது பத்திரிகைகளைத்தேசவுடைமையாக்கவேண்டுமென அவர் கூறுங்காரணங்களில்ஒன்றாகும். பத்திரிகைகள் தேசவுடைமையாகும் பட்சத்தில் உண்மைச் செய்திகளை மக்கள் அறிந்துகொள்ள ஏதுவாகுமென்பது திரு. தெமிஸ் அவர்கள் கண்டுபிடித்துள்ள உண்மை. ருசியாவையும் சீனத்தையும் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் பத்திரிகைகள் அரசாங்கத்தின் கையில் இருப்பதாகக்கூறும் தெமிஸ் ஓர் உண்மையை உணர்ந்துகொள்ளத் தவறியது அவரிடத்துக் குடிகொண்டுள்ள அரசியல் ஞானசூனியத்தின் விளைவேயன்றி வேறொன்றுமில்லை. ருசியாவிலும், சீனத்திலும் முள்ள பத்திரிகைகள் ஆட்சிப் பீடத்துக்கு மிண்டு சாத்தும் சாதனங்கள் என்பதை அவர் அறியார்போலும். இந்தநிலை இலங்கைக்கும் ஏற்படக்கூடாதென்பதை நாம் அவருக்கு இடித்துக்காட்டுகின்றோம். பத்திரிகைச் சுதந்திரம் கண்ணின் மணி போன்றது அதற்கு ஊறு விளைக்கும் தீயசக்திகளை தகர்த்தெறிவது சனநாயகத்தின் தலையாயக் கடனாகும்.

## பூவலம்

சூத்திரப்பாவை

ஓர் அரசனின் முதல் தொழிலாவது யாவரிடத்தும் நடப்பவைகளை ஒற்றினால் அறிவது. ஒற்றாடலுக்கும் தரும இலக்கணம் உண்டு. இதைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்.**

எனக் கூறியுள்ளார்.

அரசனானவன் ஒற்றனையும் புகழ் அமைந்த நீதி நூலையும் தன் இரு கண்களாகத் தெளியக் கடவன் என்பதால், முறைப்படி தன் தொழிலைச் செலுத்தும் ஒற்றனை ஒரு நீதி நூலுக்குச் சமமாக்கப்பட்டிருப்பது விளங்கும். ஆனால் தற்காலப் போக்கில் ஒற்றாடலை ஓர் உயர்தரத் தொழிலாகக் கருதுவதில்லை.

1951ஆம் ஆண்டில் பிரித்தானிய வெளிவிவகாரப்பகுதியில் உயர்ந்த உத்தியோகம் நடாத்திவந்த "பேர்கெஸ், மக்கிலீன்" எனும் இரு ஆங்கிலேயர் இரகசியமாகத் தமது தொழிலையும் நாட்டையும் துறந்து மறைந்துவிட்ட செய்தி கிடைத்தது. பிறகு அவ்விருவரும் மொஸ்கோவைச்சேர்ந்துவிட்டார்கள் என்று அறிந்தோம். மூன்று வருடங்களுக்கு முன்பதாகப் பேர்கெஸ் விடுத்த செய்தியில் தாம் இருவரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற் படித்தகாலந்தொட்டுப் பொதுவுடைமைக் கொள்கையை அனுசரித்துவந்ததாகக் குறித்திருந்தார். இவ்விருவரையும் கிளப்பிக்கொண்டு சென்ற ருஷிய ஒற்றருக்குத் தன் தொழிலில் முதற்பரிசு என்பதற்குத் தடையில்லை. ஆனால் இதுவல்ல நாம் இங்கு ஆராய எடுத்தவிடயம்.

ஒரு நாட்டின் அரசாங்க உத்தியோகத்தர்களுள் அந்தரங்கமாயிருக்க வேண்டியவர்கள் வெளிநாட்டு விவகாரங்களை ஆராய்பவர்களே. அங்குள்ள பல இரகசியங்களையும் சந்தேகமின்றி அறியும் தருணங்கள் அவர்களுக்குண்டு. அவர்களே தங்கள் நாட்டைவிட்டு அகன்று மாற்றானைச் சேர்வதானால் அச்செய்கை ஒரு தருமத்திற்கும் சேர்ந்ததாகா. இருந்தும், பேர்கேசும், மக்கிலீனும் தாம் தம் நாட்டிற்கு ஒரு துரோகமும் செய்யவில்லை என்று சொல்வதின் அர்த்தம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

பேர்கேசின் நண்பருள் செல்வாக்குள்ள ஒருவர், சேர். ஹரல்ட் நிக்கல்சன் என்பவர் இந்த வாரத்திற் கொழும்பில் நின்றபொழுது தமக்கு பேர்கேசில் நம்பிக்கை கொஞ்சமேனும் குறையவில்லை என்று அறிவித்தார். இதை முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாதாயினும் பிரித்தானிய அரசாங்கம் இதுவரையில் இவர்களுக்கு எதிராக ஒரு வழக்கும் தொடராமல் இருப்பது ஆச்சரியமே! இவர்கள் பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தது இதற்குக் காரணமாகாது. அதோடு இங்கிலாந்தின் அரசியல்முறையில் இலங்கையைப் போலல்லாது அமைச்சர்கள் சட்டத்துக்குரிய வழிகளில் தலையிடுவதில்லை.

இங்கிலையில் சர்வாதிகார நாடுகளில் என்ன நடக்குமென்

(9-ம் பக்கம் பார்க்க)

# பயிரை மேய்ந்த வேலிக்கு பத்துவருட கடுங்காவல்

## கொள்ளை அடிக்காதே! வழிப்பறி செய்யாதே!

## மே மாத கலவர வழக்கில் தண்டனை

நமது கொழும்பு நிருபர்

சென்ற மே மாதம் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் சம்பந்தமான இரு முக்கிய வழக்குகளில், சென்ற வாரம் எதிரிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு தெகிவளையிலே ஒரு தமிழருக்குச் சொந்தமான ராணி ஸ்டோர்ஸில் ரூ. 992 மதிப்புள்ள துணிமணிகளை சென்ற மே மாதம் 29-ந் திகதி கொள்ளையடித்துச் சென்றதாக தெகிவளை பொலிசைச் சேர்ந்த நான்குபேர்மீது வழக்குத் தொடரப்பட்டு 19 நாட்களாக விசாரணை நடைபெற்றது.

பொலிஸ் டிரைவர் பியதாஸ, கான்ஸ்டெபிள்ஸ் ஜயசூரிய, கருணசேகரா, உபயரத்ன இவர்கள் அளித்த வாக்கு மூலத்தில், "நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை, சூறையாடிய ஒருவர் சில பொருள்களை விட்டுச் சென்றார். அவரை ஓர் இருட்டுச் சந்து வழியே துரத்திச் சென்றோம். பிடிக்க முடியவில்லை. பின்னர் அந்தப் பொருள்களை பொலிஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லுகையில், இராணுவக் காவலர்கள் குறுக்கிட்டு, கைது செய்தனர். விஷயத்தை விளக்கவும் எங்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை". என்றார்கள்.

சிங்களம் பேசும் ஜூரிகளில் பெரும்பாலோர், எதிரிகள் குற்றவாளிகள் என்று அளித்த முடிபை நீதி கமிஷன் எல். பி. டி. ஸில்வா ஏற்று, எதிரிகள் ஒவ்வொருவருக்கும் பத்து வருஷ கடுங்காவல் தண்டனை விதித்தார். வழக்கு முடிவை அறிய ஏராளமான கூட்டம் ஆவலுடன் கூடியிருந்தது.

* *

சென்ற மே மாதம் 22-ந்திகதி கொழும்பில் ஒரு மோட்டார் வண்டியைக் கொழுத்தி, வழிப்பறி செய்ததாக 6 பேர் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் ஜில்லா நீதிபதி ஆலஸ், எதிரிகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு வருட கடுங்காவல் தண்டனை விதித்தார்.

"கொழும்பு புதுச்செட்டித் தெருவைச் சேர்ந்த திரு. நீதிராஜாவுக்குச் சொந்தமான ஒரு மோட்டார் வான், பீடிக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு, நுவரெலியாவிலிருந்து திரும்புகையில், அதை கொழும்பு உருகொடவத்தை ரயில்வே கடவையில் ஒரு பெரிய கூட்டம் தடுத்தது. "உள்ளே தமிழர் இருக்கிறார்களா?" என்று கேட்டு, உள்ளே இருந்த காஷியர் ராமலிங்கத்தை இழுத்து அடித்து அவரிடமிருந்த ரொக்கம் ரூ. 2150 யையும், ரூ. 430 மதிப்புள்ள பீடிக்கட்டுகளையும், கட்டி இருந்த வேட்டியையும் பறித்துக்கொண்டு, மோட்டார் வண்டியைக் கொழுத்திவிட்டார்கள். அடிபட்ட ராமலிங்கமும், டிரைவர் லூயி அப்புகாமியும் மருதானை ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஓடித்தப்பினர். பின்னர் போலிசார் வந்து, சிரிசேன, சைமன்பெரேரா, சார்லி, டான் வில்சன், குணபாலா, எஸ். ராமையா இவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர்.

எதிரி சிரிசேனதான், வழிப்பறிக் கொள்ளை கோஷ்டிக்குத் தலைவனென்றும், மற்ற எதிரிகளும், கொள்ளையிற் பங்குபற்றியதாகவும் நீதிபதி கூறி மேற்குறித்த தண்டனையையளித்தார். சிரிசேன ஏற்கனவே பத்துமுறை தண்டிக்கப்பட்டவர்.

இவ்விரு கலக வழக்குகளிலும் எதிரிகளுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்குச் சரியான எச்சரிக்கையாவதுடன், நீதி நிர்வாகத்தின் நற்புகழும் இதனல் ஓங்கியதாகவுள்ளது.

### கண்டிராச்சியம்

சுயாட்சிபெற்ற கண்டிராச்சியத்தை மீண்டும் ஏற்படுத்தவும், அரசியல் சீர்திருத்தச் செயற்குழுவினரிலும் கண்டியர்களின் கருத்தைத் தெரிவிக்கவும், கண்டி வாலிபர் சங்கத்தார், தங்கள் வருடாந்தக் கூட்டத்தில் ஒரு அரசியல் விசாரணைச் சபையை நியமித்திருக்கிறார்கள்.

"கண்டி மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை உடன் திருப்பிக் கொடுக்க வேண்டும், கண்டி மக்களுக்கு அரசியல், பொருளாதார ஆபத்துக்கள் இல்லாத முறையில், ஒரு குறிப்பிட்ட தொகை இந்தியர்களை மட்டும் சேர்த்துக் கொண்டு, இந்தியர் சிக்கலை உடன் தடுக்க வேண்டும். வீகம்பட்டு, வவனியா, கிழக்கு மாகாணங்களில் சில பகுதிகள், இவ்விடங்களிலும் "நியாயமான அளவு தமிழ்" அமுலுக்கு வரப்படாது. இதற்குச் செவிகாய்க்காவிடில், கண்டியர்கள், சுயாட்சிபெற்ற கண்டி இராச்சியத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று தீர்மானம் நிறைவேற்றியதுடன், மார்ச்சுமாதம் 2-ந் திகதி "சிங்கள ராஜதானிய" தினத்தை பல இடங்களிலும் கொண்டாடுவதெனத் தீர்மானித்தனர்.

கண்டி மக்களின் கோரிக்கையைப் பிரதிநிதிகள் சபையில் எடுத்துச் சொன்னதற்காக ஆர். ஈ. ஜயதிலகாவைப் பாராட்டியுள்ளனர்.

இவ்விஷயமாக ஆர். ஈ. ஜயதிலகாவை விசாரித்ததிற் கண்டியிலுள்ள ஒரு சில பிரமுகர்களுக்குப் பட்டம் பதவி கொடுப்பதால், கண்டிநாட்டுச் சிக்கல் தீராதென்றும், வேலையில்லாக் கஷ்டம் அதிகரிப்பதுடன், அங்கு வீதிகள் முதலியவை மோசமாக இருப்பதாயும், கண்டி மக்களுக்குச் சுயாட்சி அவசியமென்றும் இவ் விஷயமாக ஒரு பெரிய இயக்கம் ஆரம்பிக்கப்பட இருப்பதாயும் தெரிவித்தார்.

இலங்கையில் பிரஸவ ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய உபகரணங்களும், மருந்துகளும் அளிக்க ஐக்கிய நாடுகள் தாபனத்தின் குழந்தைகள் உதவிப் பகுதி முன்வந்தும் சென்ற சில வருஷங்களாக அதை இலங்கை அரசாங்கம் கேட்டு வாங்கிப் பயன்படுத்தவில்லை என்று தெரிகிறது.

இவ்விஷயமாகப் புதுடில்லியிலிருந்து, இலங்கையின் பல பகுதிகளிலும் ஒருமாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்த ஐ. நா. குழந்தைகள்நிதி தாபன அதிகாரி ஹீரேன் என். குப்தா, சுகாதார அதிகாரிகளுடன் கலந்து பேசியதாயும், இனி இவ்வுதவிகளையிட்டு விசேஷமாகப் பயன்படுத்தப்படுமென்றும் தெரிகிறது.

"வங்காளத்தில் சமூகத் துறையில் முஸ்லிம்களுக்குப் பல இன்னல்கள் இருந்ததால் தான் பாகிஸ்தான் ஏற்பட வேண்டியதாயிற்று. இலங்கையில் ஏறத்தாழ 20 லட்சம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை யாரும் அலட்சியம் செய்ய முடியாது. தாராள மனதுடன், தமிழ், இந்தியப் பிரச்னைகளைத் தீர்த்தால்தான் இலங்கையில் அமைதி ஏற்பட்டு, முன்னேற்றம்காணமுடியும்" என்றார் ஸ்ரீ. குப்தா.

### கேதீச்சரத்தில்

"தொண்டர் நாள் தொறும் துதிசெய அருள்செய்"

திருக் கேதீச்சரத்தில் மகா சிவராத்திரி விழா இம்முறை வருகிற மார்ச்சு 7-ந்திகதி சனிக்கிழமை மிக விசேஷமாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மன்னார் மாவட்ட அரசாங்கச் சைவ அலுவலாளர்கள் முதற்சாம பூசையும், தேவக்கோட்டை அருணசலம் செட்டியார் குடும்பத்தினர் இரண்டாம் சாமப் பூசையும், திருப்பணிச் சபையார் மூன்றும் சாமப் பூசையும் வவனியா, முருங்கன் நீர்ப்பாசன பகுதி சைவ அலுவலாளர்கள் நான்காம் சாமப் பூசையும் செய்வதாயும், பல்லாயிரக் கணக்கானவர்கள் இவ்விழாவுக்கு வருவார்களென்றும் தெரிகிறது.

கொழும்பிலுள்ள இந்து வாலிப சங்கத்தார், கொழும்பிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரிகர்களை அழைத்துச் செல்ல விசேஷ பஸ்சுகளுக்கு ஒழுங்கு செய்து வருகின்றனர்.

மார்ச் 7-ந் திகதி இரவு 10-30 முதல் 1-30 வரையிலும், மறுநாள் 8-ந் திகதி காலை 5முதல் 7 வரையிலும் இலங்கை வானொலியில், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்பட ஒழுங்கு செய்யப் பெற்றுள்ளது.

---

## பூவலம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பதைச் சொல்லவும் வேண்டுமா? குற்றஞ்சாட்டப்படுவது மாத்திரமல்ல; குற்றவாளிகள் இல்லாமலே அவர்கள் தூக்குக்கு நியமிக்கப்படுவார்கள்; அவரின் சுற்றத்தாரும் தண்டனைக்குள்ளாவார்கள்.

பிரித்தானிய முதலமைச்சர் மாக்மில்லன் மொஸ்க்கோவிற்குப் போகும் பொழுது இவர்களின் விடயத்தை விசாரணை செய்யச் சந்தர்ப்பம் இராது. பேர்கேஸ் தனது தாயாரை இங்கிலாந்திற் காண விருப்பமுடையவராயிருக்கிறார் என்று சேர். ஹரல்ட் கூறினார். இந்த வசதி அவருக்குக் கிடைக்கப் போவதில்லை என்றுதான் யூகிக்கவேண்டும்.

இதனல் பிரித்தானிய அரசாங்க ஒழுங்குமுறை ஒருவாறு அறியக்கிடக்கிறது.

---

# ஒருநாள் வேலை நிறுத்தம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதனல்தான் அவர்கள் இச்சபையைவிட்டும் ஓடிவிடுகின்றார்களோ தெரியாது. ஆனல் நாங்கள் இச்சபையிலே அடிக்கடி தமிழிலே பேசாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். நாங்கள் தமிழிலே பேசினல் இச்சபையிலே "நிறைவெண்" 'கோரம்' கூடக் கிடைக்காமற் போகின்றது" என்று கூறிவிட்டு,

"இந்தியாவிலே இருக்கின்றன என்ற காரணத்துக்காக இந்நாட்டிலும் இத்தகைய கொடிய சட்டங்கள் இருக்க வேண்டியதில்லை. இந்தியாவில் உள்ள அரசியற் சட்டத்திலே நாம் பிரதிபண்ணக்கூடிய எத்தனையோ அம்சங்கள் இருக்கின்றன. அவற்றைவிட்டு அங்கேயுள்ள ஒரு சில கெட்ட அம்சங்களைத்தான நாங்கள் பின்பற்றவேண்டும்?

ஆனல் இந்தத் தமிழ்ப் பேச்செல்லாம் அம்பலம் ஏறுமா? செவிடன்காதில் ஊதிய சங்கநாதம்தான்.

### "ஆபத்தான இயக்கம்"

புதிய சட்டத்தை ஏன் கொண்டுவர நேரிட்டதென்பதை அரசாங்கம் அறிக்கையில் விளக்குகையில், "உதாரணமாக நாட்டைப் பிளவுபடுத்த வேண்டுமென்றும், சாதிமத, மொழி முதலான காரணங்களுக்காக, ஆபத்தான இயக்கங்களை யாரும் ஆரம்பித்தால் அதைச் சமாளிக்கவே இது தேவையென்றும், மக்களின் அதிக தொகையான வாக்குகளைப் பெற்றுச் சனநாயக முறையில் ஏற்படுத்த முடியாத மாற்றங்களை, இவ்வித ஆபத்தான நடவடிக்கைகள் மூலம் எடுக்க அனுமதிக்க முடியா"தென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆபத்தானவெளியார்ப்பாட்டங்களுக்கு இடமளிக்கக்கூடாது தான். ஆனல் தேர்தலில்பெரும்பான்மை வாக்குகள் பெற்று, சிறுபான்மை சமூகங்களின் முக்கிய உரிமைகளைப் பெரும்பான்மையோர் பறிப்பதாயின், அதற்கென் செய்வது? மொழி விஷயமா அவ்விதம் செய்ததால் தான், நாட்டில் அமைதி குறைந்து இந்த அவலநிலை ஏற்பட்டிருக்கிறதென்பதை கோப்பாய் எம். பி. சுட்டிக்காட்டி, அந்த மூலகாரணங்களை நீக்கினல்தான் உண்மையாய் அமைதி ஏற்பட முடியுமென்றும், காகிதச் சட்டங்களால் பயனில்லை என்றும் குதிரையை குளத்துக்குக் கொண்டுபோகலாமேயன்றி, கட்டாயமாக நீரைக் குடிக்கும்படி செய்ய முடியாதென்றும், கூறினர்.

### மலைநாட்டுத் தமிழர்

தோட்டப் பகுதியிலுள்ள பத்து லட்சம் இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமையும், குடியுரிமையும் பறிக்கப்பட்டுள்ளன. தங்கள் உரிமைகளைப் பெற இனி வேலை நிறுத்தம் முதலியவைகளில் ஈடுபட்டால், அதைச் சட்டவிரோதமாக புதிய சட்டம் தடுக்குமென்றும், ஆகவே இதை எதிர்த்து ஆட்சேபிக்க வேண்டியுள்ளதென்றும், முதலமைச்சர் நேரில் அழைத்துக் கேட்டதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் தெரிவித்தாராம். மலைநாட்டுத் தமிழரும் சேர்ந்ததால் இவ்வேலைநிறுத்தம் அதிக முக்கியம் வாய்ந்ததாகிறது.

இந்திய வம்சா வளியினரின் சிக்கல்களைத் தீர்க்கத் தாம் தக்க நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் உறுதி கூறியதாகத் தெரிகிறது. இது வெறும் பேச்சுடன் இன்றி காரியபூர்வமாக மாற்றப்பட வேண்டும். இது எப்படியாயினும் இப்போதுள்ள அரசாங்கத்தை எதிர்த்துக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை என்றும், தங்கள் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டுமென்றும் அறிவுறுத்தலே அவர்கள் இதில் சேருவதாகவும் தெரிகிறது.

### துவேஷப் பிரசுரம்

இதைக் கேட்டதும், இந்திய, தமிழ் துவேஷ சுவரொட்டிகளும், துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப் பட்டுள்ளனவாம். இந்த வேலை நிறுத்தத்தைத் தமிழரும் இந்தியரும் தூண்டிவிட்டுள்ளதாயும், ஒரு சிங்கள அரசாங்கத்தைக் கவிழ்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதிற் குறிப்பிட்டுள்ளன.

ஒரு நாள் வேலை நிறுத்தத்தையும் சில காடையர்கள் பயன்படுத்தி, விஷமங்கள் செய்து வகுப்புவாதத் தீயை மூட்டி, பலவிதமான இடங்களில் சிறுபான்மை மக்களைத் தாக்கக்கூடும். அரசாங்கத்துக்கு இது தெரியாதிருக்க முடியாது. ஏற்கெனவே சில அமைச்சர்களின் தொலை பேசிக் கம்பிகள் அறுக்கப்பட்டுள்ளனவாம். காடைத்தனங்கள் நடைபெறுமல் தடுக்க, அரசாங்கம் ஆங்காங்கே தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

சென்ற கலவரத்தில் தமிழரே அதிக கஷ்ட நஷ்டங்களுக்குப் பலியானர்கள். அவர்களுக்கு மீண்டும் சங்கடங்கள் ஏற்படாமற் பார்த்துக்கொள்ள அரசாங்கம் விசேஷ பாதுகாப்புகளைச் செய்யக் கடமைப்பட்டுள்ளது.

### இரு கடமைகள்

அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் பண்டாரநாயக்கா பேசுகையில், இரு பொறுப்பான கடமைகள் அரசாங்கத்துக்கு இருப்பதாகக் கூறினர்.

(1) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். (2) முதல் சமூக ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். என்று சொல்லி, இவ்விரண்டிலும் மக்கள் என்ன கூறினலும், அரசாங்கம் மிக முன்னேற்றம் கண்டிருக்கிறது என்று தம்மைத் தாமே பாராட்டிக் கொண்டார்.

அரசாங்கக் கட்சியிலேயே சில வகுப்பு வர்திகள் இருக்கின்றனர். வேற்றுமைகளும் அதிக முள்ளன. அவர்களெல்லாரும் ஒரு கட்டுப்பாடான கோஷ்டியாக வேலை செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் மீண்டும் வேண்டிக்கொள்ள வேண்டியதாயிற்று. தமது கட்சியிலுள்ள வகுப்புவாதிகளைக் கண்டிப்பாக அடக்கி, அல்லது நீக்க வேண்டும்.

இந்தியாவில் நேருஜி, மற்றெல்லாக் கட்சியினரின் ஒத்துழைப்பையும் கேட்டுள்ளார். அதுபோல் இங்கும் முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்து அவர்களது ஒத்துழைப்பைப் பெற ஆவனசெய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது.

நாட்டிற் சமூக அமைதி ஏற்பட்டு, நாம் பெற்ற சுதந்திரம் பயன்படவேண்டுமாயின் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமாயின் இவ்வித ஒத்துழைப்பைப்பெற வேண்டியது அவசியமென்பதை முதலமைச்சர் உணர்ந்தே இருக்கவேண்டும். இல்லாவிடில், வேலை நிறுத்தக் கிளர்ச்சிகளிலும் அடக்குமுறை நடவடிக்கைகளிலும் இரு சார்பினரும் போட்டா போட்டியுடன் ஈடுபட்டு நாட்டு மக்கள் அமைதியாக வாழ முடியாமலும் அவர்கள் முன்னேற முடியாமலும் தடுப்பதாக இருக்கும்.

# ஜேர்மனியின் இன்றைய நிலை

## இருபகுதிகளும் இணைக்கப்படுமா?

இரண்டாவது உலக மகாயுத்தம் ஐரோப்பாவில் முடிவடைந்து ஏறக்குறைய 14 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால் இன்னும் ஜேர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. இதனால் ஜேர்மனி ஒரு நாடாக அங்கீகாரம் பெற்று ஐக்கிய நாடுகள் தாபனத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாத நிலையில் இருக்கின்றது. இப்பொழுது பிளவுபட்டுக்கிடக்கும் ஜேர்மனியும் அதன் தலைநகரும் ஒன்றாகச் சேர்க்கப்படும்வரை ஜேர்மனியின் அரசியற் சிக்கலுக்கு ஒரு விதமான தீர்வும் காண முடியாது.

1945-ம் ஆண்டு மே மாதத்தில் ஐரோப்பாவில் உலகயுத்தம் முடிவடைந்ததும் ஜேர்மனியும் அதன் தலைநகராகிய பேர்லினும் நான்கு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுப் பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ருஷியா ஆகிய வல்லரசுகளின் இராணுவ ஆட்சி ஒவ்வொரு பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

1945 தொடக்கம் 1948 வரை இந்நான்கு வல்லரசுகளும் ஜேர்மனியை ஒரு நாடாக்குவதற்குக் கையாண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

1949 தொடக்கம் 1952 வரை ஒவ்வொரு வல்லரசும் தத்தம் பிராந்தியங்களில் அரசாங்கங்களை அமைப்பதில் ஈடுபட்டன.

1949 இல் ஜேர்மனியும் பெர்லின் நகரும் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அரசாங்கங்கள் நிறுவப்பட்டன. ருஷிய இராணுவ ஆட்சியிலிருந்த கிழக்கு ஜேர்மனியில் ஜேர்மன் சனநாயகக் குடியரசு தாபிக்கப்பட்டது. மேற்கு வல்லரசுகளின் இராணுவ ஆட்சியிலிருந்த ஏனைய மூன்று பிராந்தியங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு மேற்கு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசாக்கப் பட்டது. பேர்லின் தொடர்ந்தும் நான்கு வல்லரசுகளின் இராணுவ ஆட்சியிலிருந்து வருகிறது.

1952 தொடக்கம் 1955 வரை இரண்டு ஜேர்மனிகளையும் இணைப்பதற்கு மீண்டும் முயற்சிகள் நடைபெற்றன. இம் முயற்சிகளும் தோல்வியடைந்தன.

இரு ஜேர்மனிகளின் சில விபரங்கள் பின்வருமாறு:

**மேற்கு ஜேர்மனி**

| | |
|---|---|
| பரப்பு | 95,708 சதுரமைல் |
| சனத்தொகை | 5,16,82,000 |
| தலைநகரம் | பொன் (Bonn) |
| குடியரசுத்தலைவர் | டக்டர் தியோடர் ஹியூஸ் |
| சான்சலர் (முதலமைச்சர்) | டக்டர் கொன்ராட் அடினோர் |

**கிழக்கு ஜேர்மனி**

| | |
|---|---|
| பரப்பு | 41,390 சதுரமைல் |
| சனத்தொகை | 1,68,00,000 |
| தலைநகரம் | பெர்லின் |
| குடியரசுத்தலைவர் | வில்ஹெல்ம் பீக் |
| முதலமைச்சர் | ஒட்டோ குறட்டோவல் |

1955 தொடக்கம் 1958 வரை மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் முறையே வட அத்திலாந்திக் ஒப்பந்த தாபனத்திலும் வார்ஸோ ஒப்பந்த தாபனத்திலும் சேர்ந்து விலகிச் செல்கின்ற கொள்கைகளை பின்பற்றிக் கொண்டு வந்தன.

1959 இல் ஜேர்மனியின் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு மீண்டும் முயற்சிகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

— வ. மகாதேவன் —

10-1-59 இல் ருஷியா மேற்கு வல்லரசுகளுக்கு அனுப்பிய அறிக்கையொன்றில் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தது.

1. ஜேர்மன் சமாதான ஒப்பந்தத்தைப் பற்றிக் கலந்தாலோசனை செய்வதற்கு 28 தேசங்கள் அடங்கிய மாநாடு ஒன்று இரண்டு மாத காலத்திற்குள் கூட்டப்பட வேண்டும்.

2. 27-5-59 இல் கிழக்கு பேர்லின் நகர நிர்வாகத்தை கிழக்கு ஜேர்மனியின் அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு ருஷியா தீர்மானித்திருப்பதால் மேற்கு வல்லரசுகள் பேர்லினிலிருக்கும் இராணுவதிகாரத்தை நீக்கி பேர்லினை ஒரு சுதந்திர நகரமாக்க வேண்டும்.

வட அத்திலாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் ருஷியாவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்பும், அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு. டல்லஸ் பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி, பிராஞ்சு ஆகிய நாடுகளின் அரசாங்கங்களோடு கலந்தாலோசனை செய்த பின்பும் மேற்கு வல்லரசுகள் ருஷிய அரசாங்கத்திற்குப் பதிலறிக்கை ஒன்று அனுப்பியிருக்கின்றன. இவ்வறிக்கையில் இரு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைக்கப்படுவதற்கு முன் ஜேர்மனியுடன் சமாதான் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாதென்றும்; பேர்லின் சிக்கல் ஜேர்மன் சிக்கலின் ஒரு பகுதியாகக் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்றும், இதற்காக 1959 மார்ச் மாதத்தில் நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் மாநாடு நடைபெறவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தனர். 24-2-59 இல் இவ்வறிக்கையை ருஷியாவின் முதலமைச்சர் நிராகரித்தார்.

இச்சிக்கல் விரைவாகத் தீர்க்கப்படாவிட்டால் தொடர்ந்து கெடுபிடியுத்த பீதியும் நிலைத்திருக்கவே செய்யும்.

இது சிக்கல்கள் பல நிறைந்ததாக இருக்கினறது. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:—

1. பொதுத் தேர்தல் மூலம் இரண்டு ஜேர்மனிகளையும் இணைப்பதை மேற்கு வல்லரசுகள் விரும்புகின்றன; ருஷியா இம்முறையை விரும்பவில்லை. இதற்குக் காரணம் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு முரணான கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறும் என்பதேயாகும்.

2. கிழக்கு ஜேர்மனியின் பொருளாதார அமைப்பு ருஷியப் பொருளாதார அமைப்பைத் தழுவி அமைக்கப்பட்டிருக்கின்றபடியால் இரு ஜேர்மனிகளும் இணைக்கப்படும் போது பல பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றும். ஆனால் இச்சிக்கல்களைத் தீர்த்துவைப்பது கடினமன்று.

3. கிழக்கு ஜேர்மனி ருஷியாவின் முக்கிய தொழிற்சாலையாக இருந்து இரசாயனப் பொருள்களையும் இயந்திர வகைகளையும் உற்பத்தி செய்வதால் கிழக்கு ஜேர்மனி ருஷியப் பொருளாதார அமைப்பிலிருந்து விலகுவதாற் பல சிக்கல்கள் தோன்றலாம்.

4. மேற்கு ஜேர்மனி மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார முறையில் இணைக்கப்பட்டிருக்கின்றது. மேற்கு ஐரோப்பாவுடன் வியாபாரத் தொடர்புகளை வைத்திருக்கும் புதிய ஜேர்மனியை ருஷியா விரும்பமாட்டாது. கிழக்கு ஐரோப்பாவுடன் வியாபாரத் தொடர்புகளை வைத்திருக்கும் புதிய ஜேர்மனியை மேற்கு வல்லரசுகள் விரும்பமாட்டா. மேற்கு ஜேர்மனி 1-1-59 முதல் பிரித்தானியா, பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், லக்சம்பர்க், ஒல்லாந்து நாடுகளுடன் மேற்கு ஐரோப்பாவின் சுதந்திர வியாபாரக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றது.

5. ஓர் ஒப்பந்த இணைப்பு (Confederation) மூலம் இரு ஜேர்மனிகளையும் ஒன்று சேரச் செய்வதற்கு வழிவகுப்பதையும் ருஷியா எதிர்க்கின்றது.

★ யன்னல் பூக்கண்ணாடிகள்
★ வாழ்த்துப் பத்திரங்கள்
★ திறமான முகம் பார்க்கும் கண்ணாடிகள்

மற்றும் படங்கள் பிறேம்போடுவதற்கும் தகுந்த இடம்

ஜெஸிமா பிக்ஸர் பலெஸ்

கே. கே. எஸ். வீதி :: யாழ்ப்பாணம்.

உலக நிலை

# சைப்பிரஸ் குடியரசு நாடாகும்

பிரித்தானிய, கிரேக்க, துருக்கித்தலைவர்கள் லங்காஸ்டரில் கூடி நிகழ்த்திய பேச்சின்பலனாக இன்னும் ஒரு வருடகால எல்லைக்குள் சைப்பிரஸ் ஒரு சுதந்திர குடியரசாகத் திகழுமென முடிவாகியிருக்கிறது.

கிரேக்க சைபிரிய தலைவர் மக்காரியோஸ் புதிய குடியரசின் தலைவராகலாம் என்று நம்பப்படுகிறது. உதவித்தலைவராகத் துருக்கி சைப்பிரிய தலைவர் ஒருவரே நியமனமாவார்.

சைப்பிரஸ் பாராளுமன்றத்தில் 70 சதவிகிதம் கிரேக்க அங்கத்துவமும் 30 சதவிகிதம் துருக்கி அங்கத்துவமும் இருக்குமெனவும முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. அமைச்சிலும் பொதுச்சேவைகளிலும் இதேவிகிதாசாரப்படியே நியமனம் நடைபெறும். எல்லாக் கட்சிகளும் தாராளமாக விட்டுக் கொடுத்ததன் பயனாக இரத்தப் பெருக்கும் பூசலும் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாத் தலைவர்களும் ஒத்துக் கொண்டனர்.

பிரிட்டிஷ், கிரேக்க முதலமைச்சர்கள் விமான விபத்தின் பலனாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் துருக்கி முதலமைச்சரிடம் நேரில் சென்று உடன்படிக்கைக்கு ஒப்பம்பெற்றனர்.

சைப்பிரஸில், துருக்கி இளைஞர்கள் 'மக்காரியோஸ் ஒழிக' 'எங்களைப் பிரித்துவிடுங்கள்' என்ற கூச்சலுடன் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர். அங்கே அவசரகாலநிலைமை நீக்கப்பட்டிருக்கிறது. ஆனந்தக்கண்ணீர் தோய மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

### தத்துவஞானி கொலை

தனிமையில் வாழ்ந்த தத்துவஞானி அன்னியோபா என்பவர் ஒரு பைத்தியகாரனால் மெல்போர்னில் கொலைசெய்யப் பட்டார்.

### நாடகாசிரியரின் மறைவு

லோறன்ஸ் ஹவுஸ்மன் என்னும் நாடகாசிரியர் 93 ஆவது வயதில் மறைந்தார். அவர் எழுதிய நூல்களில் விக்டோறியாராணியின் வாழ்வைச் சித்தரிக்கும் 'விக்டோரியா ரெஜினா' என்னும் நூலும் 'சென்ற் பிரான்சிஸின் குட்டி நாடகங்கள்' என்னும் நூலும் பிரசித்தி வாய்ந்தவை.

### கதிரைக்கு நடந்த 'நடப்பு'

கானா சுதந்திரம்பெற்றதற்கு பிரிட்டிஷ் மக்கள்சபையால் அளிக்கப்பட்ட பரிசு நாற்காலியை கானா பிரதமரும் அங்கத்தவர்களும் தலைக்கு மேல் சுமந்துகொண்டு தங்கள் பாராளுமன்றத்துக்குச் சென்றனர்.

### அடிமைகளில் அபாக்கியவான்

சைப்பிரஸ்வாசி ஒருவன் பிரிட்டன் துருக்கியிடமிருந்து அந்நாட்டைக் கைப்பற்றிய தினமாகிய 19-2-1878 இல் பிறந்தான். சென்ற வியாழன் சைப்பிரஸின் சுதந்திரம் உறுதியான அன்று காலமானான். அந்த அபாக்கியவானின் பெயர் க்றிஸ் தோபோரஸ் அனஸ்தேசியஸ்.

### சிங்கப்பூரில் வரவேற்பு

மக்கள் நடவடிக்கைக் கட்சி எடின்பரோ கோமகனுக்கு சிங்கப்பூர் வரவேற்பளிப்பதைக் கண்டித்தபோதும் சிங்கப்பூர் வாசிகள் மகத்தான வரவேற்புபசாரம் செய்தனர். சீனப் புதுவருஷ விழா நாட்களின் இறுதிநாளன்று அவர் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டார்.

### வராதே!

போரிஸ் பாஸ்டர்நாக் என்னும் ருஷிய எழுத்தாளரைப் பிரிட்டனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் வருமாறு வற்புறுத்த இருந்த செனோர் ஜோஸ் லூயி டி வில்லாலொங்கா என்னும் ஸ்பானிய எழுத்தாளரின் ருஷிய விஸா ரத்தாக்கப்பட்டுள்ளது. இவர் கம்யூனிஸத்துக்கு எதிரான கட்டுரைகள் எழுதியவர் என்பதே சாக்கு. வீண் 'பிதற்றல்' என்று கையை விரிக்கிறார் ஸ்பெயினிலிருந்து நாடுகடத்தப் பட்டுள்ள இந்த எழுத்தாளர்.

### பர்மாவிலும் கலகலப்பு

எதிர்பார்க்கப்பட்டதுபோலவே சட்டதிட்டங்களை மாற்றியமைத்து பர்மிய முதலமைச்சர் பதவி நீவின் என்பவரிடமே ஒப்படைக்கப்படுகிறது. மக்களால் தெரிவுசெய்யப்படாதவர் ஆறு மாதங்களுக்குமேல் அமைச்சர்அவையிற் சேவை செய்ய முடியாது என்ற விதியிருப்பதனாலேயே அவர் பதவியைத் துறந்தார். ஆனால் இதற்கிடையில் தனது கட்சி நியாயமில்லாத வகையில் ஒடுக்கப்படுவதை ஆட்சேபித்து சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்க்ப்போவதாக முன்னாள் முதலமைச்சர் யுநூ மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

### அணையைக் கட்டிப்பார்

எகிப்தில் உருவாகும் அஸ்வான் அணைக்கட்டுக்கு மொத்தத்தில் 464,000,000 பவுண் செலவாகும். இதில் முதல்படியாக 33,000,000 பவுண் ருஷியா கடன் கொடுக்க முன் வந்துள்ளது. சூயஸ் கால்வாய் தேச உடைமையாக்கப்பட்டதன் விளைவாக பிரிட்டனும் அமெரிக்கனும் உதவியளிக்க மறுத்தன.

இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்.

....................................
கையொப்பம்.

பெயர்: ....................................

விலாசம்: ....................................

இங்கே வெட்டவும்

*சீனத்துச் சிறுகதை*

# மந்திரத் தூரிகை

[தமிழாக்கம்: **சரோஜினிதேவி நடராசா** பதிவு எண்: 39]

மூன்னொரு காலத்திலே மா-லியாங் என்ற பெயருடைய ஒரு பையன் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெற்றோர் சிறு வயதிலேயே இறந்து விட்டதால் தனது அன்றாட சீவியத்திற்குத்தொழில் பார்க்கவேண்டியது அவசியமாயிற்று. ஆகவே விறகு சேகரித்தும் வயல்களில் களை பிடுங்கியும் வாழ்க்கையை நடாத்தி வந்தான். புத்திசாலியான அவன் பல கலைகளையும் விசேடமாக ஓவியக்கலையையும் பயில விருப்பம் உடையவனானான். ஆனால் அவனுடைய ஏழ்மைநிலை ஒரு வர்ணத் தூரிகையையாவது வாங்க இயலாதபடி தடைசெய்தது.

ஒரு நாள் லியாங் பிரத்தியேக பாடசாலை ஒன்றின் வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது தலைமை ஆசிரியர் தீட்டிக்கொண்டிருந்த வர்ண ஓவியம் கண்களைக் கவரவே தன்னை மறந்தவனாய் அவரது படைப்பை நோக்கினான். சிறிது நேரத்தில் பாடசாலைக்குள் தான் நுழைந்து விட்டதாக உணர்ந்த அவன் தலைமை உபாத்தியாயரைப் பார்த்து,

"நான் வர்ணந்தீட்டும் முறையைக் கற்க மிகவும் ஆவல் உடையேன். தயவுசெய்து எனக்கு நீங்கள் தூரிகை ஒன்று இரவல் கொடுப்பீர்களா?" எனக் கேட்டான். "என்ன!" தலைமை ஆசிரியர் பையனை உற்றுப் பார்த்தார். "ஒரு சிறு பிச்சைக்காரப் பயலுக்கு வர்ணம் தீட்டப் பழக வேண்டுமா? நீ கனவு கண்டு கொண்டிருக்கிறாய்" எனக் கூறிப் பையனைத் துரத்தி விட்டார்.

ஆனால் மா-லியாங் தனக்குள்ளே ஒரு தீர்மானம் செய்து கொண்டான்.

"ஏழையாக இருந்தாலும் ஏன் நான் வர்ணந்தீட்டக் கற்றுக்கொள்ளக் கூடாது" என மனத்துள் எண்ணிக் கொண்டான்.

லியாங் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் சித்திரம் வரைந்து பழகுவதில் கருத்தைச் செலுத்தினான். விறகு சேகரிப்பதற்காக மலைச் சாரல்களில் சஞ்சரிக்கும் லியாங் சிறு சுள்ளிகளின் உதவியினால் மணலில் பறவைகளின் தோற்றங்களை வரைய முற்படுவான். ஆற்றோரத்தில் வளரும் நாணல் புல்வெட்டப் போகும் சமயங்களில் விரலைத் தண்ணீரில் தோய்த்து மீனின் உருவத்தைக் கல்லில் வரைவான். தன் இருப்பிடமான குகையை அடைந்ததும் அதன் சுவர்களில் தான் பழகிய உருவங்களை மரங்களில் கீறி வைப்பான். அதிவிரைவில் நான்கு புறச் சுவர்களையும் அவனது சித்திரங்கள் அலங்கரித்தன.

காலமும் விரைந்தோடி மறைந்தது. இருந்தும் மா—லியாங் ஒருநாட்பொழுதையாவது வீணாகக் கழிக்கவில்லை. சித்திரமும் கைப்பழக்கம் என்பதுபோல் தினமும் சித்திரக் கலையைப் பழகிவந்தான். இயற்கையாகவே விரைவான முன்னேற்றத்தையும் அடைந்தான். அவனது சுவர்ச் சித்திரங்களைப் பார்த்தவர்கள் எல்லோரும் அவற்றில் ஜீவகளை ததும்புவதைக்கண்டு வரையப்பட்ட பறவைகள் எல்லாம் இனியகீதம் எழுப்பவும், மீனினங்கள் நீந்தவும் எதிர் பார்த்தார்கள். இவ்வளவும் இருந்தும் மா லியாங் விரும்பிய தூரிகை இன்னும் கிடைக்கவில்லை. தூரிகை ஒன்றுகிடைத்துவிட்டால் தான் அடையும் மகிழ்ச்சியை எண்ணிப்பார்த்தான் அவன்.

கடினமான உழைப்பிற்குப் பின் ஒரு நாள் இரவு லியாங் அயர்வுடன் தூங்கிவிட்டான். தன் வைக்கோல் படுக்கையில் சாய்ந்த மறுகணம் அவனை நோக்கி நாடி தளர்ந்தவரும் வெள்ளை வெளேரென்று வெளுத்த தாடியுடையவருமான ஒரு முதியவர் வந்து ஒரு தூரிகையை அவனுக்கு அளித்தார். பின் லியாங்கை நோக்கி,

"இது ஒரு மாய தூரிகை. இதை மிகவும் கவனமாக உபயோகிக்க வேண்டும்" எனக் கூறினார்.

லியாங் அந்தத் தூரிகையைக் கைகளில் எடுத்துக்கொண்டான். தங்கத்தினாலான அந்த தூரிகை கண்களைப் பறிக்கும் ஒளியுடன் கூடியதாகவும், கனமாகவும் இருந்தது. களிப்பு மிகுதியினால் அவன்,

"என்ன அழகான தூரிகை" எனக் குதித்துக் கொண்டே "உங்களுக்கு மிகவும் உபகாரம்" ..................

எனத் தனக்கு அதைக் கொடுத்தவருக்கு நன்றி பாராட்டமுன் வெள்ளைத்தாடியுடன் வந்த முதியவர் மறைந்தார். பையன் திடுக்கிட்டு எழுந்தான். தான் கண்டது கனவு என நினைத்தான். ஆனால் என்ன ஆச்சரியம்; கனவில் பெற்ற தூரிகை லியாங்கின் கைகளில் இருந்தது. அவன் தன்னை மறந்து ஆச்சரியத்தில் மூழ்கினான்.

(தொடரும்)

## பள்ளிக்கூடச் சிறுவர் நாம்.

பள்ளிக் கூடச் சிறுவர் நாம்
பாடி இன்பம் பெறுவோம் நாம்
கள்ளம் கபடம் இல்லோமே
காணு தொன்று சொல்லோமே.

சேவல் கூவ எழுவோமே
தெய்வம் அன்பாய்த் தொழுவோமே
ஆவலாகிப் படிப்போமே
அன்னை பணிகள் முடிப்போமே.

கையில் எழுது கோலுடனும்
கற்க வேண்டும் நூலுடனும்
பையப் பள்ளி செல்வோமே
பாடம் ஒழுங்காய்ச் சொல்வோமே.

கண்ணைத் திறந்த ஆசிரியன்
கடவுள் என்றே நேசமுடன்
எண்ணித் தினமும் போற்றிடுவோம்
எமது கடமை ஆற்றிடுவோம்.

பாடமெல்லாம் முடிந்ததுமே
பாங்காய் மணியும் அடித்திடுமே
ஓடி வீட்டைச் சேர்வோமே
உள்ளத் துவகை கூர்வோமே.

மாலை நேரம் ஒன்றாக
மாணவரே நாம் நன்றாக
கோலமாக ஆடிடுவோம்
குதூகல மாகப் பாடிடுவோம்.

# சிறுவர் பகுதி

**செல்வச் சிறுவர்களே!**

அடேயப்பா! அதையேன் பேசுவான். எனது மருமக்களாகிய நீங்கள் சிறுவர் பகுதியிற் காட்டிவரும் ஊக்கம் எனக்கு உற்சாகத்தை ஊட்டி வருகின்றது. தினமும் எனக்கு வந்து குவியுங் கடிதங்களைப் பிரித்துப் பார்ப்பதற்கே நேரம் போதாது. உங்களுடைய கட்டுரைகளைப் படித்து அவற்றுள் நல்லவற்றைத் தெரிந்தெடுப்பதென்றால் அது இலகுவானதல்ல. அது மாத்திரமா? நீங்கள் எழுதும் கடிதங்கள் அனைத்தையும் மிக்க கவனமாகப் படித்துவருகின்றேன்.

உங்களிற் சிலர் எழுதிய கடிதங்களிற் பிழைகள் இருக்கின்றன. கடிதங்களை எனக்கு அனுப்பமுன்னர் அவற்றை வேறு யாரிடமாவது காட்டித் திருத்தங்கள் செய்த பின்னர் அனுப்புவதே நல்லது.

இவ்வாரம் எனது மருமக்கள் சிலரின் கடிதங்களுக்கு மறுமொழி எழுதியிருக்கின்றேன். எனக்குக் கிடைக்கும் கடிதங்கள் எல்லாவற்றுக்கும் உடனே மறுமொழி எழுதுவது இயலாத காரியம். கடிதங்களின் அவசியத்தையும் எனது வசதியையும் பொறுத்தே மறுமொழி எழுதுவேன். ஆனால் எனது மருமக்களின் கடிதங்களையும் கதைகள், கட்டுரைகளையும் நான் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டேயிருப்பேன். அனைவருக்கும் வணக்கம்.

சின்ன மாமா

## மாமா பதில்

**சு. மகேந்திரன்** (பதிவு எண். 14)

உமது கதை நன்றாக இருப்பதாகச் சிலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர்.

**மா. பி. தமிழ்நெஞ்சன்** (ப. எ. 10)

தமிழ்நெஞ்சன் என்பது உமது சொந்தப் பெயரா, அல்லது புனைபெயரா?

**எம். கே. நடராசா** (ப. எ. 36)

உமது ஆர்வத்தைப் பாராட்டுகின்றேன். ஆம், கட்டுரைகள் எழுதி அனுப்பலாம்.

**சு. கௌரிதேவி** (ப. எ. 43)

புனைபெயரில் எழுத வேண்டாம். 'சிறுவர் பகுதி'க்குச் சொந்தப்பெயரிலேதான் எழுத வேண்டும்.

**சி. அருந்தவதேவி** (ப. எ. 45)

'சிறுவர் பகுதி'யில் வெளியாகும் கதைகளை நீர் விரும்பி வாசிப்பதையறிந்து மகிழ்கின்றேன்.

**மா. இந்திராணி** (ப. எ. 33)

உமது கடிதத்தைக் கவனமாகப் படித்தேன். உமது ஆர்வத்தை உண்மையாகவே பாராட்டுகின்றேன்.

## புதிய மருமக்கள்

**பெயர்களும் பதிவு இலக்கமும்**

26. மு. பாரூக், 39, கொழும்பு வீதி, கண்டி.
27. சி. சுந்தரராசா, 59, சப்பல் தெரு, யாழ்ப்பாணம்.
28. க. கந்தசாமி, பாலிவெட்டை, கரவெட்டி.
29. க. சண்முகலிங்கம், 53, அரசடிரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
30. எஸ். சுந்தரராசா, 180, மெயின் வீதி, ரக்வானை.
31. க. பாலசுப்பிரமணியம், 64, பலாலி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
32. க. தர்மலிங்கம், c/o சி. கந்தையா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி P.O.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய சிறுவர் சிறுமியர் அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 7-3-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்குள் உபயோகித்துக்கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

**சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(28-2-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**

வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..................................................

விலாசம்..................................................

..................................................

.............................. கையொப்பம்

..............................

பெற்றோர் அல்லது ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

# நமது நூல் நிலையம்

**கலைமதி : பொறுப்பாசிரியர் :** சி: ஆறுமுகம்; கலைமதி அலுவலகம், அளவெட்டி, இலங்கை; **தனிப்பிரதி** சதம் 25.

"சென்றிடுவீரெட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதியாரின் வேண்டுகோளைச் சிரமேற் கொண்டு 'கலைமதி' பணியாற்றிவருகின்றது. இனிய கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் இம்மதியில் ஒளிர்கின்றன. சங்கநூற் காட்சி ஒன்றினைத் தழுவிய நாடகமும் இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. க. சிவராமலிங்கம், வ பொன்னம்பலம், வ. கந்தசுவாமி, நா. சிவபாதசுந்தரன், பண்டிதர் கா. பொ. இரத்தினம் உட்பட வேறும் பல பிரபல எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். மக்கள் சீனத்துக்குச் சென்று திரும்பிய ஆசிரியர் ஏ. எஸ். கனகரத்தினம் அவர்கள் புதிய சீனத்தைப் பற்றி எழுதியுள்ள பிரயாணக் கட்டுரை மிகவும் உபயோகமானது.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

**மத்திய தீபம் :** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 125-வது ஆண்டு நிறைவுவிழாச் சிறப்பு மலர் — ஆசிரியர் எம். எச். ஹமீம்; யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

தமிழின் மறுமலர்ச்சிக்குப் பலவகைகளில் வித்திட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 125-வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி வெளியிடப்பெற்றுள்ள 'மத்திய தீபம்' மாணவர்கள் மாத்திரமன்றி மற்றையோரும் விரும்பிப் படிக்கக்கூடிய கட்டுரைகளுடனும், கதைகளுடனும் கவிதைகளுடனும் வெளியாகியுள்ளது. 'தமிழ் இளைஞர்களின் 'எதிர்காலம்' பற்றி திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்கள் எழுதியுள்ளார்கள். பேர்சிவலின் தமிழ்த்தொண்டுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு திரு. க. மாணிக்கவாசகரின் கட்டுரை உதவியாகவிருக்கும். திருவாளர்கள் கனக. செந்திநாதன், முருகையன், இ. நாகராசன் ஆகியோரும் இம்மலரில் எழுதியுள்ளனர். ஆங்கிலப் பகுதியில் அருமையான ஒரு சிறு கதையைப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவரான திரு. அழகு சுப்பிரமணியம் எழுதியிருக்கின்றார். புகைப் படங்களுடன் அழகாக அமைந்துள்ள இச்சிறப்பு மலர் யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கும் அதன் பழைய மாணவர்களுக்கும் பெருமை தரும் பொன் மலராக விளங்குகின்றது.

### பின்வந்த நூல்கள்

**தமிழகம் தந்த ம. பொ. சி:** தொகுத்தவர்: முல்லை முத்தையா: **விலை** ரூ. 2-00. **ம. பொ. சி. வாழ்க்கை வரலாறு:** **தொகுப்பாளர்:** சோம. சுவாமிநாதன்; **விலை** ரூ. 1-00, **இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்:** இன்ப நிலையம், சென்னை 4

# மகியங்கனை

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அசவிடோவின் தலைமையில் படையெடுத்த காலத்தில், கண்டியரசனகிய சேனரத்ன தன் குடும்பத்துடன் மகியங்கனைக்கு வந்து தங்கியிருந்தான். இக்காலத்திலேயே இராணி 2-ம் இராசசிங்கனைப் பெற்றெடுத்தாள்.

**சுவையான செய்திகள்**

இனி நாங்கள் இலங்கைகுக் அவ்வப்போது வருகை புரிந்த வெளிநாட்டார் இத் தாதுகர்ப்பத்தைப்பற்றித் தரும் சுவையான செய்திகளை நோக்குவாம். இலங்கைக்கு முதலில் வந்த டச்சுக்காரரான திரு. யோறிஸ் வான் ஸ்பில் பேகன் (Joris Van Spilbergen) என்பவர், விந்தனை நகரத்திலே ஒரு பெரிய தாது கர்ப்பமிருப்பதாகவும், அதன் கீழ்ப்பாகம் வட்ட வடிவமாகவும், மேற் பாகத்தில் பிரமிட்போலக்கோபுரமொன்றிருப்பதாகவும், அயலில் பிக்குகள் தங்கும் மடாலயமொன்றிருப்பதாயும் குறிப்பிட்டு, தமது குறிப்பில் அப்போது இங்கு நடந்த 'பெரஹராவை'ப் பற்றி விவரித்துள்ளார். சில வருடங்களுக்குப் பின்பு வந்த திரு. ஓவ் ஜிடே (Danish Admiral Ambassador- Ove Giedde) என்பவர் இப்பட்டினத்தில் 8 நாட்கள் தங்கியிருந்தார். இவரது குறிப்புகளில் தாது கர்ப்பத்தின் வரலாறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. 2-ம் இராசசிங்கனல் சிறை பிடிக்கப்பட்ட நொக்ஸ் அவர்கள், தும்பறையிலிருந்து தெரிந்த அளுத் நுவரையின் தோற்றத்தை விவரிக்கிறார். இத்தாது கர்ப்பம் சீரழிந்து கிடந்த நிலையைச் சித்தரிக்கும் திரு. எமர்ஸன் றெனெட் அவர்களின் கருத்துக்கள், தாதுகர்ப்பத்தின் அன்றையத் தோற்றத்தை எம் கண் முன் கொண்டு வருகிறது. ஊவா மாகாண அரசாங்க அதிபராகவிருந்த திரு. கேபாட்வைற் அவர்கள் விந்தனைக்குச் செல்வோர் தங்கி, புராதன பௌத்த சின்னங்களைப்பார்க்க வாடிவீடு நிறுவப்படவேண்டியது அவசியமென்று சுட்டிக் காட்டியுள்ளார்.

அளுத்நுவரை அன்று சரித்திரப்பிரசித்திபெற்ற பாதைகளின் மையமாகவிருந்தது. காலவரையில் இப்பாதைகள் தூர்ந்து அடர்ந்த காடுகளுக்ிரையாயினமையால், யாத்திரிகர்களின் செல்வாக்கையிழந்தன. ஆனுல், அவற்றுள் ஒன்ருன அளுத்நுவரைக்கூடாகச் செல்லும்மட்டக்களப்பு-கண்டிப் பாதை, இப்போது இலங்கையிலே இதுவரையுமே கண்டிராத வகையில் நவீன பொறியியல் நுணுக்கங்கள் வாய்ந்த பாதையாக மாற்றியமைக்கப்படுகிறது. இப்பாதையமைப்பிலே ஈடுபட்டுள்ள அமெரிக்க, இலங்கைப் பொறி இயல் வல்லார் கோஷ்டியினரின் அரிய சேவையால், இப்பழையபாதை புத்துயிர் பெறுவதுடன் மகியங்கனையே மலர்ச்சி பெற்றுவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

# "வாசலிடைக் கொன்றை மரம்"

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது என்மனம்" என்ருர் வித்துவான்.

சம்பாஷணம் அப்பால் சங்கச் செய்யுள்களில் தாவியது. வித்துவான் 'வாசலிடைக் கொன்றை மர'த்தை மறந்தார். ஆனுல், அந்த மரம் முதலியாரின் இருதயத்தை ஊடுருவி வளரத்தொடங்கியது. முதலியாரின் வாசலில் அவர் கண்ணெதிரில் நாடோறும் வாளா வளர்ந்துநின்ற அந்தக் கொன்றைமரம், அந்தவித்துவானை முதலியார் சந்தித்த பிறகு, முதலியாரின் மனத்தில் ஒரு பெருஞ்சுமையாய் இமாசலம்போல் அசைக்கமுடியாததாய் எழுந்துவிட்டது!

படிப்பைப் பொருள் செய்யாத மகன் எங்கே? 'வாசலிடைக் கொன்றை மரம்' எங்கே!

மகன் ஆசுகவி செய்தான் என்று முதலியார் எப்படி நம்புவார்?

'பொன்' சொரிகின்ற அந்தப் பாட்டுச் சாதாரண விருத்த வகையைச் சேர்ந்ததும் அன்று. அது ஒரு வெண்பாவாயிற்றே. வெண்பாப் புலவர்களுக்குப் புலி, அன்றே!

விளையாட்டுப் பிள்ளைகளிடத்தில் இந்த 'வாசலிடைக் கொன்றைமரம்' எப்படி முளைத்தது?

வித்துவான் ஒருவருக்குத் தமது வீட்டைக் காட்டிக்கொடுத்த,

'வாசலிடைக் கொன்றை மர'த்தை—அது வந்த வரலாற்றை—வில்லவராய முதலியாருக்குக் காட்டிக் கொடுப்பார் யாரும் இல்லை.

அல்லும் பகலும் அது முதலியாருக்குத் தொல்லைசெய்வதாயிற்று. வாசலில் நின்ற கொன்றைமரத்தை விரும்பினுல் தறித்து வீழ்த்திவிடலாம். முதலியாரின் மனத்தில் வேர்வீழ்ந்த கொன்றைமரத்தை யார் வீழ்த்தமுடியும்! அதை வீழ்த்த முதலியாருக்கும் முடியாதே! அது நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் முதலியாரின் மனசில் வளருகிறது.

கல்வியைப் புறக்கணித்த ஒரு விளையாட்டுப் பிள்ளையை அழைத்து 'நீ இந்தப் பாடலைப் பாடினுயா?' என்று வினவுவது முதலியாரின் கௌரவத்துக்கு அடுக்குமா? முதலியார் யாருடனும் அதுபற்றி வாய் திறக்கவில்லை. ஆயினும் கொன்றை மரம் வளருகிறது. முதலியார் காலையில் துயிலெழும்போதே, 'வாசலிடைக்கொன்றைமர'மும் அவர் மனசில் துயில் எழுந்துவிடும். அதன்பிறகுதான் வாசலிலே நிற்கின்ற கொன்றை மரம் முதலியாரின் கண்ணுக்குத் தோன்றும். சிலசமயம் அவ்வாறு தோன்ருமல் அது மறைந்துவிடுவதும் உண்டு. மனக்கண்ணில் முளை எழுமேயானுல், புறக்கண்ணில் ஒன்றுந் தோன்ருதுதானே.

சின்னத்தம்பிப் புலவர் வடதேசவித்துவானுடைய இருதயத்தில் நாட்டிய 'வாசலிடைக் கொன்றைமரம்' அதன்பிறகு, அருமைத்தந்தையாரின் இருதயத்தில் பொன் பூச் சொரிந்து பொலிந்த செழுந் தாதை இறைப்பதாயிற்று.

தேசவளமை செய்த முதலியார் தமது 'வாசலிடைக் கொன்றை மர' வரலாற்றை எப்படி அறிந்து இனி அமைதி எய்துவாரோ!

(—தொடரும்)

## இலங்கை மக்களின் நாகரிகம்!

### கண்டியிற் புத்தபிக்கு கண்டனம்.

இலங்கையைப்பற்றியும் அந்நாட்டு மக்களைப்பற்றியும் வெளிநாட்டினர் மிகக் கீழாக மதித்து வருகின்றனர் என நாரதா மகாதேரர் கண்டியில் நடைபெற்ற சாரணர் இயக்கக் கூட்டமொன்றிற் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

எமது நாகரிகம் ஈராயிரம் வருடங்களுக்கும் மேலானதெனப் பறைசாற்றி வருகின்றேம். அதே வேளையில் மக்களை உயிருடன் எரித்தும் ஈன இரக்கமின்றி வாள் கொண்டு வெட்டியும் வருகின்றேம். இலங்கையில் நடைபெறும் கொலைகளைப் போல் வேறு எந்த நாட்டிலும் நடைபெறுவதேயில்லை. அமெரிக்காவிலும் கொலை பாதகங்கள் நடைபெறுவதாயினும் இம்மாதிரி மிருகத்தனமான செயல்களை அங்கு காணமுடியாது.

தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வதில்லை. சனப் பிரதிநிதிகள் சபையிலும் பொது மேடைகளிலும் அமைச்சர்களும் எம். பீக்களும் ஒருவரையொருவர் வாய்க்கு வந்தபடி பழித்துரைக்கின்றனர். இவற்றை எல்லாம் கவனிக்கும்போது இலங்கைமக்கள் நாகரிகமுள்ளவர்கள் என எண்ணவே முடியாது.

இலங்கை மக்கள் பூரண நம்பிக்கை கொண்ட தலைவர்கள் இந்நாட்டில் மருந்துக்குத்தானும் இல்லை. ஆனுல் இந்தியாவிலே நேரு போன்ற பெருமக்கள் பலர் இருக்கின்றனர்.

உண்மையான பிக்குகள் எவரும் கட்சிச் சார்புடையவர்களாக இருத்தல்கூடாது. என்னைப் பொறுத்தமட்டில் நான் எந்த அரசியற் கட்சியையும் சேர்ந்தவனல்லன். பிக்குகள் சாதிமதபேதத்துக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் அகில உலகத்துக்கும் உரிமை பூண்டவர்கள்.

மக்கள் உள்ளும் புறமும்சுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இங்கிலாந்து, பிரான்சு முதலிய மேனுடுகளில் மக்கள் சுத்தமான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். களங்கமற்ற நல்ல உள்ளமே மிக முக்கியமானதாகும்.


35 வருடகாலமாக நடந்து வரும்

**விஷகடி வைத்தியசாலை**

தற்போது முன்னிருந்த இடத்தைவிட்டு
அதற்கருகாமையில் உள்ள

**குருக்கள் மடம்**

என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிற
தென்பதை பரோபகார சிந்தையுடன்
தெரிவிக்கின்றேம்.

**திரு. நா. அருணசலதேசிகர்**

"அருணகிரி"

மாதகல்



யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**
**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துத்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

அருள் வழி

# சிவராத்திரியின் மகிமை

க. ஆனந்தக்குமாரசுவாமி

சிவராத்திரி தினத்தன்று வாழையடி வாழையாக வந்த தமிழர் கூட்டத்தில் ஒரு பிரிவினராகிய இந்துக்களின் முக்கிய கடமை விரதம் அனுட்டிப்பதே. இவ்விரதத்தின் பொருள் என்ன? அதன் மகிமை என்ன? என்று ஆராய்வது எமது கடமையாகும். "தென்னுடைய சிவனே போற்றி, என்னுட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று இறைவனைப் பிரார்த்திக்கும் இந்துக்கள் அனுட்டிக்கும் விரதத்தில் அடங்கியிருக்கும் தத்துவம் யாது? என்ற கேள்விகளுக்கு விடைபகரும் நோக்கமாகச் சில பெரியார்களில் கூற்றை நோக்குவோம். "மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினுலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்மூலம் அறியக்கிடக்கின்றது.

"வினைமாசு தீர்ந்து, அந்தக் காரணங்கள் பரிசுத்தமாதற் பொருட்டு இன்ன அறங்களைச் செய்வேனென்றும் இன்ன பாவங்களை விடுவேனென்றும், தமது வல்லமைக்கு ஏற்ப அளவுசெய்துகொண்டு துறந்தோராலே காப்பாற்றப்படுவதுதான் விரதம்" என்று தமிழ்மறை தந்து தெய்வப் புலவர் திருவள்ளுவனுர் விளக்கியுள்ளார். இவ்விரு பெரியார்களது கூற்றையும் பொதுவாக நோக்கின் இறைவன்மேல் உண்மையான அன்போடு மாசு தீர்ந்து கள்ளங் கபடமற்றுத் துதித்து ஒன்றை வரங்கேட்டு நிற்க விரதம் அனுட்டிப்பதே சிறந்த முறையாகும். அனுட்டிக்கும் முறைகளில் வேறுபாடுகள் இருந்தாலும் விரதம் அனுட்டிப்பது சிறந்தது என்பதை மறுக்கும் சமயங்கள் மிகச்சிலவே.

உபவாசம் இருப்பதால் இறைவனை உள்ளன்போடு வழிபடுகிறேம் என்றே கூறலாம். இம்மாண்புமிக்க நோன்பால் மக்களுக்கு உண்டாகும் பல தீராத பிணிகள் குணமடைகின்றன. இதுவே இயற்கைமுறை. உதாரணமாக மிருகங்களில் நாய்கூட வயிற்றில் ஏதும் கோளாறு ஏற்படின் ஒன்றும் சாப்பிடாது விரதம் அனுட்டிக்கின்றது. உடம்பு பூரண சுகம் ஏற்பட்டபின்பே அது உணவு உட்கொள்கின்றது. இவ்வாறே மனித இனமும். இது சுகாதார முறையில் பொருந்தும். இவ் வழக்கம் "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்குப் பக்கபலமாக உற்றதுணையாக உதவியாக உள்ளது. கிழமையில் ஒருநாளைக்கு உபவாசம் இருத்தலே சுகாதாரத்துக்கும் நோய் இல்லாது வாழ்வதற்கும் சிறந்த முறையாகும். உடலையும் உள்ளத்தையும் சுத்தி செய்வதற்கேற்ற கருவி விரதம்போல் வேறென்று இல்லை. பக்தியைப் பெருக்குவதற்கும் விரதம் சிறந்த உபகரணமாகின்றது. காந்தியடிகள் உபவாசத்தின் உட்கருத்தைப் பலமுறை விளக்கியுள்ளார். உபவாசம் இருந்தால் ஏற்படும் நன்மைகளும் அவர் வாழ்வே சாட்சியாகும்.

மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷி சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் இருந்து நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாமப் பூசையும் அவ்வக்காலங்களில் செய்வது உத்தமம். நான்கு காலத்தையும் ஒரு காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம் என்று நாவலர் கூறுவதை நாம் அவரது நூல்கள்மூலம் அறியக்கிடக்கின்றது.

சிவராத்திரி விரதம் அனுட்டிப்பதோடு நின்றுவிடாது நித்திரையையும் விழிக்கின்ருர்களே? அதன் நன்பேறுதான் என்னே? கண் விழித்திருப்பது என்பது உயிர்விழித்திருப்பது என்று பொருள்படும். ஒவ்வோர் ஆன்மாவும் மும்மலம் ஒழித்தற்காக ஆரம்பிக்கும் விழிப்பு சிவராத்திரியன்று ஆரம்பிக்கும். இந்த விழிப்பு அடுத்த சிவராத்திரிவரையுமன்றி வாழ்வு முழுவதிலும் விழிப்பாய் இருத்தல்வேண்டும். ஐம்புல வேடர்களையும், பகைவர்களையும் வெல்லவேண்டுமேயாகில் வாழ்வு முழுவதிலும் விழிப்பாய் இருத்தல் வேண்டும். ஒருநாள் விழிப்பாக இருந்து பலநாட்கள் கும்பகர்ணர் படலம் பாடுவோமேயாகில் நாம் சோம்பேறிகளாக நேரிடும். ஆகவே வாழ்வில் நாம் போதிய அளவு கண் விழித்திருப்பது நலனுகும். விரதங்கள் அனுட்டிப்பவர்கள் ஆலயங்களிற் சென்று ஐம்புலன்களையும் ஒரே புலனுக இறைவன்மேற் செலுத்தி இறைவழிபாடு உண்மையான அன்போடு செய்தலே விரதத்தின் சிறந்த அம்சமாகும்.

சிவராத்திரியின் மகிமையைக் குறிக்கும் ஒரு சிறு கதையை இங்கு எழுதுவது பொருத்தமானது. அங்குலன் என்னும் ஒரு வேடன் வேட்டையாடும் முகமாகக் காட்டிற்குச் செல்வது வழக்கம். ஆனுல் ஒன்றும் அகப்படாமை கண்டு ஒரு வில்வமரத்தில் ஏறி இலைகளுக்கூடே மறைந்து பறவைகள், மிருகங்களின் வருகையை எதிர் பாாத்தான். அவ்வாறு இருக்க ஒன்றும் வரவில்லை. இருளும் சூழ்ந்துகொண்டதால் அவன் வீடு செல்லவும் முடியவில்லை. ஆகையால் அங்கேயே அன்றிரவு தங்க எண்ணினுன். அவ் வில்வ மரத்தடியிற் சிவலிங்கம் ஒன்று இருந்தது. அன்று சிவராத்திரி என்று தெரியாத அங்குலன் அவ்வில்வம் இலைகளைப்பறித்து நேரத்தைப்போக்கும் நோக்கமாக வீசி எறிந்துகொண்டிருந்தான். அவை சிவலிங்கம்மேல் வீழ்ந்து அருச்சனையாக அமைந்தன. அவன் பனியால் நனைந்து உண்டியும் உறையும் இன்றி வாடி வில்வம் இலையால் அர்ச்சனை செய்தபடியால் அது தெரிந்தோ தெரியாமலோ சிவ அர்ச்சனையாயிற்று. மறுநாள் சூரிய உதயம் ஆனதும் வீடு சென்று சொற்பநாள் கழித்து வயோதிபனுக இறந்தான். ஆனுல் ஜமதூதர் அவரைக் கொண்டு போகாவண்ணம் இறைவனின் உள்ளன்பை வியந்தார். இச்சிவானந்த வாழ்வைப் பெற்ற அங்குலனைக் கண்ட தேவர்களும், பாமரர்களும் அன்றுதொட்டு விரதம் அனுட்டித்துத் தங்கள் இஷ்ட சித்திகளைப் பெற்ருர்களென்று புராணங்கள் கூறுமிடத்து நாம் ஏன் வாழாய் இருப்பான்? விரதத்தால் பல நன்மைகள் உண்டு. விரதத்தின் மகிமையையும் இக்கதைமூலம் விளங்கிக் கொண்டு சும்மா இருப்போமாகில் தமிழனுக இந்து சமுதாயத்தில் பிறந்த சைவனுக இருப்பதில் நம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு என்று பட்டம் ஏற்க நேரிடும். ஆகவே "எம் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதுக்கொப்ப நம் சமயம், நம் மொழி, நம் நாடு என்ற உணர்ச்சிததும்ப நம் கடமைகளை அயராது விழிப்போடு செய்வோமாக!

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே சுக் | | குஜ | |
| ரவி புத | இவ்வார ஆரம்ப ராசி நிலை 1-3-59 இரவு மீன புதன் | | |
| | | | |
| சனி | குரு | | ரா |

**விளம்பி மாசி 16-ம் நாள் 28-2-59**
[28-2-59—7-3-59]

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்பாதம்) குடும்ப கருமங்கள் அதிகரிக்கும். தொடங்கும் புதுக் கருமங்கள் முற்பகுதியில் நற்பலனைக் கொடுக்காதிருக்கும். பண வருவாய் மிகக் குறைவடையும். நடைமுறையிற் சில மாற்றங்களுக்கிடமுண்டு.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்) தேகாரோக்கியம் சிறிது குறைவடையும். உமது நல் விருப்பங்கள் எவ்வகையிலும் சித்தியடையாதனவாகும். சொந்தச் சிக்கல்கள் வார இறுதியில் நீங்கப்படும். நடைமுறையிற் சில மாற்றங்களுக்கிடமுண்டு. எவ்வகையிலும் மன ஆறுதலில்லாததாகும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) குடும்பத்தில் ஒருவர் நோயினுற் பீடிக்கப்படுவர். பகைவர்களின் விரோதம் அதிகரிக்கும். சமய சம்பந்தமான கொள்கைகளில் வெறுப்புண்டாகும். குடும்பத்தாரோடு மன வெறுப்புண்டாகும்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம் பூசம் ஆயிலியம்) சகோதரர்களால் நன்மையடைவர். புத்திரப்பேற்றை அல்லது புத்திரர்களால் நன்மையையடைவர். தொடங்கும் கருமங்களில் அதிக முன்னேற்றத்தைப் பெறுவர். சிறிது நாட்கள் தேகாரோக்கியமற்றவராவர்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) நற் கருமங்கள் நிகழப்பெறும். குடும்பக்கருமங்கள் சிறிது குழப்பமுடையனவாயிருக்கும். சினேகிதர்களால் நன்மை வரப்பெறும். காத்திராப் பிரகாரமான சேதம் உண்டுபடும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4ஆம் பாதம், அந்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்.) புது முயற்சிகள் தாமதிக்கப்படும். விபரீத விளக்கத்தால் பகைவர் அதிகரிப்பர். எவ்விதத்திலும் தேகாரோக்கியமில்லாதிருப்பர். வீணுகத் தமது வருவாயைச் செலவுசெய்பவராவர். மேலதிகாரிகளுடன் இணங்கி நடத்தல் வேண்டும்.

**துலாம்** (சித்திரை 3, 4ஆம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ஆம் பாதம்) தொடங்குங் கருமங்கள் நற்பலனைக் கொடுப்பனவாகும். முயற்சிகள் நற் பலனைக் கொடுப்பதுடன் கீர்த்தியையும் அதிகரிக்கச்செய்யும். காத்திராப்பிரகாரமான அபகீர்த்தியையும் இருதயநோயையும் அடைய நேரிடும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை) பொருளழிவும் பிராண பயமும் உண்டாகும். வருவாயிலும் பார்க்கச் செலவு அதிகரிக்கும். மன நிம்மதி இல்லாதவராயும் மனச் சஞ்சலம் அதிகமுடையவராயுமிருப்பர்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம்பாதம்) வாரத்தின் முற்பகுதியில் தேகாரோக்கியம் குறைவடையும். வரப்பெறும் நன்மைகள் யாவும் முடிவில் துன்பத்தைக் கொடுப்பனவாகும். வீண்பழிச் சொற்களைக் கேட்பவராவர்.

**மகரம்** (உத்தராடம் 2,3,4-ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2-ம் பாதம்) பண வருவாய் அதிகரிப்பினும் காத்திராப்பிரகாரமான செலவுகள் சடுதியில் வரப்பெறும். திருடர்களால் அல்லது சதி செய்வோரால் தீமையையடைவர்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) நற்கருமங்கள் வீட்டில் நிகழப்பெறும். இருதய சம்பந்தமான அல்லது கண்சம்பந்த நோயினுல் வருத்தமுறுவர். பணவருவாய் அதிகமிராவிடினும் மன ஆறுதலுடையவராயிருப்பர்.

**மீனம்** (பூரட்டாதி 4 உத்தரட்டாதி, ரேவதி) மனதிற்குச் சந்தோஷத்தைக் கொடுக்குங் கருமங்களைச் செய்ய மிக விருப்புடையவராவர். நண்பர்களுடனும் பகைமையைப் பெறுபவராயும் பணவருவாய் உடையவராயுமிருப்பர்.

விளையாட்டுப் பகுதி

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இன்னிங்ஸ் வெற்றி

## சதானந்தன் - 18 ஓட்டங்களுக்கு 6 விக்கற்றுகள்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி** இவ்வாரம் வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் ஆடிய ஆட்டத்தில் இன்னிங்ஸ் வெற்றியீட்டியுள்ளது. முதலில் ஆடப்புகுந்த யாழ்ப்பாணம் இந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. வேகமாய்ப் பந்தை வீசிய வைரவநாதனை சமாளித்து சிவசுப்பிரமணியம், சதாநந்தம், பாலகிருஷ்ணன், செல்வராசா ஆகியோர் 49, 35, 34, 34, ஓட்டங்களைப் பெற்றனர். யாழ்ப்பாணக்கல்லூரி முதலாவது இன்னிங்சில் 57 ஓட்டங்களுடன் $1\frac{1}{2}$ மணி நேரத்துக்கிடையில் எல்லா விக்கற்றுகளையும் இழந்ததற்கு சதானந்தனின் நுணுக்கமான பந்துவீச்சுத்தான் காரணம். இவர் 18 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். போதிய ஓட்டங்கள் பெருமையால் மீண்டும் ஆடப்புகுந்த யாழ்ப்பாணக் கல்லூரி 152 ஓட்டங்கள் மட்டுமே பெற்றனர். தேவதாசன் உறுதியாக ஆடி 40 ஓட்டங்களையும், ஜெகநாதன் விக்கட்டை இழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 3 மணி நேரமாக ஆடிய அக் கோஷ்டி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இறுதிக்கட்டத்திற் செய்த முயற்சி ஆட்டத்துக்கு சுவாரசியத்தை யூட்டியது. 7 ஓட்டங்கள் குறைவாகப்பெற்று அவர்கள் இன்னிங்ஸ் தோல்வியடைந்தனர்.

**யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கக்** கூட்டமொன்றில் இனிமேல் வயது கணிக்கும் திகதியை ஜனவரி 1 ஆக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, வருகிற ஆண்டு உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர் 9 மாதம் அதிக வயதுடையவராயிருப்பர். இதுவரை செப்டம்பர் 15ஆந் திகதியே வயது கணிக்க உபயோகிக்கப்பட்டு வந்தது.

**யாழ்ப்பாண மத்தியஸ்தர் சங்கத்தின்** சேவையைச் சென்ற ஆண்டு நிராகரித்ததுபற்றியும் இக் கூட்டத்திற் பேச்சு நடந்தது. வருகிற ஆண்டுகளில் மத்தியஸ்தர் சங்கத்திடமே அப்பொறுப்பை ஒப்படைப்பதாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

**உதை பந்தாட்டத்தின் தரத்தை** உயர்த்த அகில உலகமுறைகளைப் பின்பற்றி பூர்வாங்கத் தெரிவின்மூலம் சிறந்த கோஷ்டிகளை தெரிவு செய்து அவற்றினிடையே ஒரு சுற்றுப் போட்டியை நடத்துவதெனவும் யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

**யாழ்ப்பாண மாணவர்** தெரிவுக் கோஷ்டியுடன் ஒரு கிரிக்கட் ஆட்டம் ஆடுவதற்கு இலங்கைக் கல்லூரிகள் கிரிக்கட் சங்கக் கோஷ்டியொன்று ஏப்ரல் 10ஆம் 11ந் திகதிகளில் யாழ்ப்பாணம் வருமெனத் தெரிகிறது.

**யாழ்ப்பாண விளையாட்டுச்சங்கத்தின்** அப்போதீக்கரீஸ் வெற்றிக்கிண்ண இரண்டாவது பிரிவு உதைபந்தாட்டப் போட்டி 3 உபபிரிவுகளாக நடைபெற்றது. மூனறிலும் சூட்டிங்ஸ்ரார்ஸ், பற்றிசியன்ஸ், போஸ்டல் ஆகிய கோஷ்டிகள் வெற்றியீட்டியுள்ளன. இவற்றுக்கிடையே நடைபெறும் இறுதி ஆட்டங்கள் வருகிற மூன்று ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்ணை மைதானத்தில் நடைபெறும்.

**போஸ்டலின் வெற்றியை** கிறீன் பீல்ட் ஆட்சேபித்திருப்பதாய்த் தெரிகிறது. போஸ்டல் ஆட்டக்காரர் வேறுகோஷ்டிகளிற் கலந்து ஆடியிருக்கிறார்கள் என்பதே குற்றச்சாட்டு. ஆட்ட விதிகளைச் சரிவரத் தெரியாத விளையாட்டு வீரரைத் தவறான பாதைகளிலே தூண்டிவிட்டு, அப்புறம் அவர்களை அந்தர நிலையில் ஆழ்த்தும்வகையில் புதிய சங்கங்களும் கழகங்களும் யாழ்ப்பாணத்தில் நிறைய முளைத்துள்ளன. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை என்ற முறை விளையாட்டுலகிலும் நிலவுவது பலருக்கு வருத்தத்தைக் கொடுத்துவருகிறது. பலபிரமுகர்கள் இந்த வேடிக்கையான சூழ்நிலையை உருவாக்கிவருகிறார்கள்.

**பணப் பரிசு** பெறும் எந்த விளையாட்டுவீரரும் அமெச்சூர் அந்தஸ்தை இழப்பர் என்பதை சுட்டிக்காட்டவேண்டிய சந்தர்ப்பம் இப்போது எழுந்துள்ளது. எப்போட்டியில் பணப்பரிசு பெற்றாலும் அப்புறம் அதையே தொழிலாகக் கொண்டுவிட்டதாகக் கருதப்பட்டு, சாதரான விளையாட்டு வீரரோடு போட்டியிடும் வாய்ப்பை அவ்வீரர்கள் இழக்க நேரிடும். ஆட்சேபங்கள் பின்னுற் பிறப்பதற்கு வழிகோலாமல், விளையாட்டைப் பணவருவாய்ச் சாதனமாகவோ, சூதாகவோ கருதாமல் விளையாட்டுகளிற் பங்குபற்றுவது முக்கியம்.

புதிய விளையாட்டுச் சங்கங்கள் மூலைக்கு மூலை யாழ்ப்பாணத்திலே தோன்றியுள்ளன. இருக்கிற சங்கங்களிலிருந்து விலகிய சில பிரமுகர்களின் பெயர்கள் இப் புதிய சங்கங்களில் அங்கம்வகிக்கின்றன. குறிப்பாக ஒருவரின் பெயர் பல இடத்தில் அடிபடுவதுபற்றி விளையாட்டுப் பிரியர்கள் விளையாட்டுகளும் விளம்பரசாதனமா எனக் கேட்கின்றனர்.

**அநுராதபுரத்து அரசாங்க அதிபர்** ஒரு விளையாட்டுமைதானம் வேண்டுமெனக் கேட்டுள்ளார். புதிய பட்டினத்திலோ, பழைய பட்டினத்திலோ இப்போது ஏற்ற மைதானம் கிடையாது.

## சென்னை கிரிக்கட் கோஷ்டி இலங்கை வருகை

**சென்னை கிரிக்கட் கோஷ்டி** இலங்கைக்கு வருமெனவும் இங்கு மூன்று ஆட்டங்களில் கலந்துகொள்ளுமெனவும் முடிவாகியுள்ளது. மார்ச் 4, 5 இல் இலங்கை மாணவர் தெரிவு கோஷ்டியுடனும், மார்ச் 7,9 இல் அகில இலங்கைக் கோஷ்டியுடனும், மார்ச் 11, 12 இல் மத்திய மாகாண கோஷ்டியுடனும் ஆடுவார்கள்.

**இந்தியா கிரிக்கட் கோஷ்டி** அடுத்த தடவை இங்கிலாந்து செல்லும்போது தலைமைதாங்க கெயிட்வாட் என்னும் வீரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடைய வயது 30.

**ஜோன் தோமஸ்** என்னும் 17 வயது நீக்கிரோ உயரப்பாய்தலிற் புதிய சாதனை ஒன்றை நிறைவேற்றியுள்ளார். அவர் பாய்ந்த உயரம் 7அடி $1\frac{1}{4}$ அங்குலம். இது நடந்த இடம் மடிசன்ஸ்குயார் (அமெரிக்கா).

**ரேய் கில் கிறிஸ்ட்** என்னும் மேற்கிந்திய கிரிக்கட் வீரர் ஒழுங்கு நடவடிக்கை காரணமாக திருப்பியனுப்பப்பட்ட வேளையில் "நான் பயப்படவில்லை. மகிழ்ச்சியுடன் திரும்புகிறேன் மேற்கிந்திய கிரிக்கட் கட்டுப்பாடு சபைக்கு நான்கூறவேண்டியதை எடுத்துரைப்பேன்" என்றார். அவர் பந்தை வேகமாக பறக்கும்படி வீசியது கோஷ்டித் தலைவருக்கு அதிருப்தியைக் கொடுத்திருக்கவேண்டுமெனவும் அதைப்பற்றி இரண்டொருதடவை எச்சரிக்கை செய்திருக்கவேண்டுமெனவும் சொல்லப்படுகிறது. இரசிகர்கள் மத்தியில் வேகமாகப் பந்து வீசும் வீரர்களின் ஆயுதங்களிற் 'பறக்கும் பந்தும்' ஒன்று என்ற அபிப்பிராயமுடையோரும் உளர்.

## M.C.C. 000 அவுஸ்திரேலியா

**அவுஸ்திரேலியாவில்** நடைபெற்ற கிரிக்கட் ஆட்டங்களின் போது உடனுக்குடன் தேவையானோர் ஆட்ட நிலைமையை அறிய தொலைபேசி வசதி செய்யப்பட்டிருந்தது. இதை 4, 455, 386 பேர் உபயோகித்தனர். டெலிபோனை எடுத்து MCC 000 என்ற இலக்கத்தை விசாரிக்கவேண்டியதுதான்.

**மெல் மக் இன்ஸ்** என்னும் கிரிக்கட் மத்தியஸ்தர் இனி ஓய்வுபெற்றுக்கொள்வார். கடைசியாக முடிவடைந்த ஆங்கில—அவுஸ்திரேலிய ஆட்டங்களில் விவாதத்தில் முடிந்த சில தீர்ப்புகளை அளித்தவர் அவரே. 15 போட்டி ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகித்த அவரை மிகச் சிறந்த மத்தியஸ்தர் என்று 4 ஆண்டுகளுக்கு முன் எல்லோரும் பாராட்டினர். ஆங்கிலப்பந்துவீச்சு முறைகளைச் சந்தேகக் கண்ணுடன் பார்த்தமையும் அவுஸ்திரேலிய பந்து வீச்சுமுறைகளில் ஆட்சேபகரமான முறைகளை அனுமதித்தமையும் அவருக்கு ஆங்கிலப் பத்திரிகைகளின் துவேஷத்தைத் தேடிக்கொடுத்தன. பின் அவர் முடிபுகள்பற்றிமுணுமுணுப்பும் 'முறுய்ப்பும்' இருந்து வந்தன.

## ஒலிம்பிக்ஸ் 60ல் ரோமாபுரியில் நடைபெறும்

**1960 இல்** நடைபெறும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகள் ரோமில் (இத்தாலி) நடைபெறும். இதில் உதைபந்தாட்டத்தில் 26 தேசங்கள் கலந்து கொள்ளுகின்றன.

சினிமா உலகம்

# சாரங்கதரா

**கா**லமாற்றத்துடன்வளர்ந்து வரும் திரையுலகின் வளர்ச்சி அம்சங்கள் கொண்ட பழைய கதை இது.

நவீன சாதனைகள் வளர்ந்தது போன்று பழைய கதையின் மூலத்தை அப்படியே வைத்துக்கொண்டு அதன் கிளைகளைத் தறித்துப் புதுமை சேர்த்திருக்கிறார்கள். இது தவிர சாரங்கதரா எனும் பழைய பெயரின் முக்கிய அம்சம் அப்படியே இருக்கிறது.

முன்னாள் தமிழ்த் திரையில் தனது இசைச் செல்வத்தை வைத்துக் கொண்டு முதன்மை ஸ்தானத்தைப் பெற்ற தியாகராஜபாகவதருக்குப் பதில் இன்று நடிப்பில் முதலிடம் பெற்றுள்ள சிவாஜிகணேசனால் அதே பாத்திரம் தாங்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான்.

முந்திய இரசிகர்கள் பாட்டையும் இன்றைய இரசிகர்கள் நடிப்பையும் விரும்புவர் என்பதைத் தவிர இதில் எந்தப் படிப்பனையும் இருப்பதாகத் தெரியவில்லை.

பொருளும், இனிமையும் நெஞ்சைத் தொடும் இசையமைப்பும் பொருந்திய பாடல்கள் இடம் பெற்று இரசிகர்களுக்கு இன்பமூட்டுகின்றன.

மற்றும்படி காட்சி ஜோடனை, ஒலி ஒளி அமைப்புப் போன்ற ஏதாவது புதுமைக் கவர்ச்சிகள் நிறைந்தனவோ என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும்.

புதிய கதையிற் கதையை இயக்கும் சூத்திரமான மந்திரியாக இடம் பெறுகிறார் நம்பியார். அந்தப் பாத்திரத்திற்கு அவர் மிகவும் பொருத்தமே.

உடுக்கையிழந்தவன் கையாக—உத்தம நண்பனாக வரும் முந்து கிருஷ்ணன், கதையின் பிரதான பாத்திரங்களில் ஒன்றான சித்திராங்கி வேஷம் தாங்கும் பானுமதி, சாரங்கதராவின் உண்மைக் காதலி ராஜசுலோசனா ஆகியோரின் நடிப்பு அவர்களை உயர்த்தவுமில்லை; அன்றேல் தாழ்த்தவுமில்லை.

பானுமதியைப் பார்க்கும் போதே அம்மாவை நினைவுறுத்தும் தோற்றத்துடன் காட்சி தருகிறார். அவரது நடிப்புக்காக இளமைப் பாத்திரத்தைத் தரும் தயாரிப்பாளர் இதைக் கவனத்திலே கொள்ளல் வேண்டும்.

ரங்கராவ், சாந்தகுமாரி ஆகியோரின் நடிப்பு அவர்களின் எல்லையுடன் நின்றுவிடுகிறது. வற்றிப்போன காதல் உணர்ச்சி தலை தூக்கும்போது ஓரளவு விகடச் சுவையை வெளிப்படுத்தி நடிக்கும் ரங்கராவைக் கண்டு அனுதாபப்பட வேண்டியிருக்கிறது.

மொத்தத்தில் பாமர இரஞ்சகமான பழைய அம்சங்கள் கொண்ட இப்படம் புதிய வார்ப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## பண்டரிபாயின் புதுப்படம்

நடிகை பண்டரிபாய், பாண்டுரங்கா புரொடக்ஷன்ஸ் என்ற தனது படக்கம்பெனியின் சார்பில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகிறார். கதை எழுதியவர் ஜி. வி. அய்யர். இதன் வசனங்களை இளம் எழுத்தாளராகிய மா. ரா. என்பவர் எழுதுகிறார். இப்படத்தின் நடிகர்கள் பண்டரிபாய், மைனாவதி, மனோகர், பாலாஜி, வி. ஆர். இராஜகோபால், டி. எஸ். பாலையா. இப்படத்தை கே. எஸ். மூர்த்தி ஆர். இராமமூர்த்தி இருவரும் டைரக்ட் செய்கிறார்கள். இப்படத்தின் ஆரம்பவிழா பொங்கல் அன்று பரமவுண்ட் ஸ்ருடியோவில் நடைபெற்றது.

★ உங்கள் குழந்தையின் சிரிப்பைக் கண்டு பூரிக்க வேண்டுமா?

★ புதுத்தம்பதிகள் ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுக்க வேண்டுமா ?

★ பாஸ்போட் புகைப்படம் அவசியம் எடுக்க வேண்டுமா ?

அப்படியானால்

நீங்கள் போகவேண்டிய இடம்

பாரத் ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

# படமாளிகைகளில் சுகாதார வசதிக்குறைவு

நமது நிருபர்

யாழ்ப்பாணம்

நகரிலுள்ள சினிமாத் தியேட்டர்களில் இருக்கும் சீர் கேடுகளை உடனடியாக ஒழித்துவிடப்போவதாக யாழ்ப்பாணம் நகரசபை சில மாதங்களுக்கு முன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தது. அந்தத் தீவிரம் இப்போது படிப்படியாகக் குறைந்து வருகிறதென்பதை "மேயரின் கால நீடிப்பு உத்தரவுகள்" எடுத்துக்காட்டுகின்றன.

தியேட்டர்களிற் சுகாதார வசதிகள் செய்வது, மூட்டைப் பூச்சிகளை ஒழிப்பது, ஆசன வசதி ஆகியவை சம்பந்தமான வேலைகளைக் கடந்த டிசம்பர் 31-ந் திகதிக்கிடையில் முடித்துவிட வேண்டுமெனவும் இல்லாவிடின் புது வருடத்துக்கான அனுமதிப் பத்திரம் தரப்படமாட்டாதென்றும் இறுதி எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்குச் சில மாதங்களுக்கு முன்பே படமாளிகைகள் ஒவ்வொன்றுக்கும் இத் திருத்தங்கள் பற்றிய உத்தரவுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அனுமதிப் பத்திரத்திற் குறிப்பிட்ட தொகைக்குமேல் பார்வையாளர்களை அனுமதிக்கக்கூடாதென்பது அந்த உத்தரவில் மிக முக்கியமான ஒரு அம்சமாக இடம் பெற்றிருந்தது.

நகர சபையின் கட்டளையைச் சினிமாத் தியேட்டர் நிர்வாகிகள் முற்றிலும் நடைமுறைக்குக் கொண்டு வரும் பட்சத்தில் தற்போது அனுபவிக்கப்பட்டுவரும் எமவேதனை இல்லாமல் ஒழிந்துவிடுமென்பது யாழ்ப்பாணத்துச் சினிமா ரசிகர்களின் கருத்தாக இருந்தது.

முக்கியமாகக் கலரி மகா சனங்கள் படும் கஷ்டத்தை நீக்க வேண்டுமென்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த மேயர் தன் உத்தரவுக்குப் பின் அந்த வகுப்புகளின் நிலை எப்படி இருக்கிறதென்பதை உத்தியோகஸ்தர்கள் நேரில் அனுப்பி அறிவதற்குக்கூடப் பின்னிற்கவில்லை.

இத்தகைய அதி தீவிர சிரத்தையின் விளைவாக ஒரு சில சினிமாத் தியேட்டர்கள்மீது நகரசபை பெரும் அதிருப்தி கொண்டுள்ளது. ஆயினும் ஆரம்பத்திற் காணப்பட்ட வேகம் இப்போது குறைந்து போனது ஏனோ தெரியவில்லை.

கடைசியாக ஜனவரி 31-ந் திகதி வரை தியேட்டர்களுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அவகாசம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இத்துடன் நான்கு தடவைகள் காலம் நீடிக்கப்பட்டுவிட்டதெனலாம்.

# தமிழாசிரியர் கூட்டத்தில் அசம்பாவித நிகழ்ச்சி

நமது நிருபர்

யாழ்ப்பாணம்

ஆசிரியர்களாகிய நாம் எமக்குரிய பொதுத்தன்மையை எந்தக்கட்டத்திலும் கைவிடக்கூடாது. சில்லறைப் பூசல்களுக்காக நமது பண்பையே மறந்து விடுவதா? நிறைவான உள்ளத்துடன் எல்லோரும் பணியாற்ற முயல்வோம்.

கடந்த புதன் கிழமை பிற்பகல் நடந்த யாழ்ப்பாணத் தமிழாசிரியர்சங்கக்கூட்டத்தில் நிகழ்ந்த அசம்பாவித நிகழ்ச்சிகளை மனதிற் கொண்டு அதற்குத் தலைமை வகித்த திரு. இ. கந்தையா ஒரு கட்டத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பெரும்பாலும் ஒழுங்கீனமான விஷயங்களே தலைகாட்டின. இவற்றைக்கண்டு சலிப்படைந்தவர்களிற் சிலர் தம் கண்டனத்தை மனம் விட்டுத் தெரிவித்தனர்.

சர்ச்சைகள் மோசமான கட்டத்துக்குப் போய்க் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் ஆசியர் திரு. க. தி. சம்பந்தன் எழுந்து காரியங்கள் ஆபாசமாக நடந்து கொண்டிருக்குமிடத்தில் நான் இருக்க விரும்பவில்லையென்று சொன்னார்.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின் போது நிலைமை மேலும் மோசமடைந்தது.

புதுவருட நிர்வாகிகள் தேர்தலைத் தற்காலிகத் தலைவர் ஒருவரே நடத்த வேண்டுமென்பதை ஒரு பகுதியினர் ஆட்சேபித்தனர். ஆயினும் தற்காலிகத் தலைவர் இருப்பதுதான் ஒழுங்கான செயலென ஏற்றுக் கொண்டு, அப்பதவிக்கு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. ஆர். கே. தியாகராசாவைத் தெரிவு செய்தனர்.

செயலாளர் பதவிக்குப் பலரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டதும், அபேட்சகர்கள் நேரடியாக உரையாடியதும் மிக வேடிக்கையாக இருந்தன. இந்தக் கட்டத்தில் ஒரு அபேட்சகரைப் பிரேரித்தவரான திரு. வே. க. கந்தசாமி தலைவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுக் கூட்டத்திலிருந்து எழுந்து சென்றார். இனியாவது இனிமையாகப் பேசுங்கள் என அவர் வேண்டுகோளும் விடுத்தார்.

மிகவும் அருவருக்கத்தக்க ஒரு சூழ்நிலையில் கூட்டத்தின் பிற்பகுதி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒருவரையொருவர் கண்டிப்பதில் தாராளமாக ஈடுபட்டார்கள்.

இந்தக் கூட்டத்தின் எதிரொலி சில மணி நேரங்களுக்கிடையிலேயே கிளம்பியது. இக்கூட்டம் ஒழுங்கீனமாக நடந்ததாகையால் மற்றொரு விசேட பொதுக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யுமாறு ஒரு மனு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதே அந்த எதிரொலியாகும்.

# இந்தியாவின் எதிர் காலம்

## 'குறுகிய மனப்பான்மை ஒழிய வேண்டும்' —நேருஜி

இந்தியா எதிர்காலத்தை நம்பியிருக்கவேண்டும். அதற்காக ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும்பாடுபட்டு உழைக்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் நமது பழமையையும் போற்ற வேண்டுமென ஆசாத் நினைவுச் சொற்பொழி வரிசையில் முதலமைச்சர் நேருஜி புதுடில்லியிற் பேசினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

பன்னெடுங் காலமாக இந்தியா போற்றிவந்திருக்கும் முக்கியமான கொள்கைகளை புறக்கணித்தலாகாது. நமது சக்தியை எல்லாம் ஒன்று திரட்டித் தொழில் விருத்தியில் ஈடுபட வேண்டியது அவசியமாகும், ஆனால் பொறுமையும் இரக்கமுமின்றித் தேடும் பொருட் செல்வத்தாற் பயனெதுவுமில்லை.

### விஞ்ஞான அறிவு

இந்தியாவின் எதிர்காலம் எமது உழைப்பிலேயே தங்கியிருக்கிறது. அத்துடன் தொழில் துறையிலும் விஞ்ஞான அறிவிலும் அது முன்னேற்றமடைந்துவிடும். மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்; கல்வியறிவு பரவிவரும். கலையும் கலாசாரமும் மக்களின் வாழ்க்கையை வளமுறச் செய்யும். இந்த அதி உன்னத நிலையை அடைவதற்குச் சாதி, மத, மொழி மாகாண அடிப்படையில் உள்ள குறுகிய மனப்பான்மை ஒழிந்தே யாக வேண்டும். முக்கியமாகச் சாதி வெறி அகலவேண்டும். சாதி அடிப்படையிற் சோஷலிசமோ மக்களாட்சி முறையோ ஏற்பட முடியாது.

### அணுசக்தி

அணுசக்தி பற்றி நேருஜி பேசும்போது கூறியதாவது: இன்றைய அணுசக்தி யுகத்தின் சிக்கல்களைத் தீர்க்க வேண்டின் பழங்காலமுறைகளைக் கைவிட வேண்டும். கெடுபிடிப்போரால் எவ்வித நன்மையுமில்லை. அணுசக்தி ஆயுத சோதனைகளை உடனடியாக நிறுத்தவும் ஆயுத உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளவும் வல்லரசினருக்கிடையே உடன்படிக்கை ஏற்படவேண்டும். சமுதாய நலனுக்குச் செலவாக வேண்டிய பணம் போர்க்கருவிகள் உற்பத்தி செய்வதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

இனவேற்றுமைபற்றி நேருஜி குறிப்பிடுகையில், நாடுகள் அனைத்தும் இனவேற்றுமையைக் கண்டித்து வருகையில், தென்னுபிரிக்காமட்டும் இதனை ஒரு முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியமும் குடியேற்ற ஆதிக்க முறையும் இக்கால உலகுக்குப் பொருந்ாதவை. நாடுகள் அனைத்தும் தத்தம் விதிகளைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு சோஷலிசம் ஒன்றுதான் வழியெனவும் நேருஜி கூறினார்.

### நேருவுக்குப்பின் யார்?

முதலமைச்சர் நேருவுக்குப் பின் அப்பதவியை வகிப்பவர் யார்? திருமதி இந்திரா காந்திதான் என டக்டர் லோகியா கருதுகின்றார். காங்கிரஸின் தலைவராக இந்திரா காந்தியைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் நேருஜிக்குப் பின்னர் இந்திரா காந்தியே முதலமைச்சராகப் பதவி வகிக்க வேண்டுமென்ற கொள்கை உருப்பெற்றுவிட்டதென அவர் குறிப்பிட்டார்.

### ஒரிசா அரசியல் நெருக்கடி

ஒரிசா சட்டசபையில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலக வேண்டுமா? அல்லது தொடர்ந்து பணியாற்றி வர வேண்டுமா என்பதை முதலமைச்சர் மேதாப் முடிவு செய்வார். ஐந்தாண்டுத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அமைச்சரவை நிலையுள்ளதாக இருக்கவேண்டும். இல்லாதுவிடின் நாகபுரி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டவாறு திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்யவியலாதென முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

### சென்னை வழிகாட்டுகிறது

சென்னை அரசின் 1959—60 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் தமிழிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பிரதிகளும் சட்டசபையில் 2-3-59 இல் அளிக்கப்படும். இதற்கு முன்னர் வரவு செலவுத்திட்ட அறிக்கை முதலில் ஆங்கிலத்திற் தயாரிக்கப்பட்டுச் சபையிற் சமர்ப்பிக்கப்படும்பொழுது தமிழ்ப் பிரதிகள் வழங்கப்பட்டன.

தமிழைப் படிப்படியாக முன்னேற்றமடையச் செய்து சகல துறைகளிலும் கொலு வீற்றிருக்கச் செய்யும் அரசினரின் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் இது ஒரு நடவடிக்கையாகும். சென்னை மாகாணத்திலேதான் இது முதன்முதலாகக் கையாளப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

### புதியமுறையின் நன்மை

தசாம்ச முறைப் பிரசார விழாவையொட்டிச் சென்ற ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் மாணிக்கவேலு வானொலியிற் பேசும்போது குறிப்பிடடிருப்பதாவது:

சென்னை மாகாணத்திற் சென்னை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு வட ஆற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தசாம்ச நிறுத்தலளவை நடைமுறையில் இருந்துவருகிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் இம்முறைதான் சட்டபூர்வமானதாக இருந்துவரும். புள்ளி விபரங்கள் தயாரிக்கவும் கணக்குகள் வைத்துக் கொள்ளவும் தசாம்ச முறை இலகுவாக இருக்கும்.

### பாக். போரில் இறங்காது

பாகிஸ்தான் தனது தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதற்காக அது இந்தியாவுடன் யுத்தம் செய்ய விரும்பமாட்டாது எனப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கான்பூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: உலக அபிப்பிராயமும் பாகிஸ்தானியரின் மனோபாவமும் பாகிஸ்தான் அவ்வாறு செய்வதைத் தடுக்கும். நம்முடைய நாட்டில் இராணுவ ஆதிக்கம் ஏற்படப் போவதில்லை. இந்தியா என்றுமே சமாதானமாக வாழ்ந்துவருகின்றது. அதனுடைய தேசியக் கொள்கை காந்தி அடிகளால் வகுக்கப்பட்டுள்ளது. நாட்டின் மனித சக்தி நம்முடைய மகத்தான செல்வமாகும். இந்த உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

### நேத்தாஜி போஷ்

திரு. முத்துலிங்கத்தேவர் கல்கத்தாவிற் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் நேத்தாஜி சுபாஸ்போஷைக் கண்டுபிடிக்கத் தமது கட்சி முயற்சி செய்கின்றதெனக் கூறினர்.

### நிலச்சீர்திருத்தம்

உத்தேசிக்கப்பட்டுள்ள நிலச்சீர்திருத்தங்கள்மீதுள்ள தகராறுகள் அமைதியானமுறையிலே தீர்க்கப்படுமென முதலமைச்சர் நேரு நம்பிக்கை கொண்டுள்ளார்.

### வெள்ளச் சேதம்

பாண்டுங்கில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 300 வீடுகள் வரை அழிந்துவிட்டன.

### அமைச்சர்கள் படும்பாடு

முன்னாள் முதலமைச்சராயிருந்த தங்கா பிரசாத் ஆச்சாரியார் நேபாளத் தேர்தலில் கட்டுப்பணத்தையுமிழந்துவிட்டார். இவரே பிரஜா பரிஷத் கட்சித்தலைவர். டி. ஆர். ரெக்மி என்னும் உள்நாட்டு அமைச்சரும் கட்டுப்பணத்தை இழந்துவிட்டார்.



பார்த்திருப்பீர்கள் பள்ளிமாணவர்களின் பந்தாட்டத்தை பரந்த வெளியிலே ஆனல்

**சினிமாஸ் தாபனத்தார் திரைகளில்**

**சிம்மக்குரலோன் சிவாஜியின் பந்தாட்டத்தை . . . . . ?**

அருணு பிலிம்சாரின் அதி அற்புத சித்திரம்

# பொம்மை கல்யாணம்

நடிகர்கள் :

சிவாஜி கணேசன்—ஜமுனு—நாகையா—ரங்கராவ்—
(பிரண்ட் ராமசாமி—மைனுவதி—சாந்தகுமாரி சுந்தரிபாய்




★ ராதா தன் வாழ்க்கை துணைவனை கண்டெடுத்தாள்
★ கண்ணன் காதலித்த ராதாவை கைவிட மனமில்லை
★ துணையனின் தந்தை ஓர் மனம்
★ தாய் ஓர் மனம்

இரு இளம் உள்ளங்கள் வாழ்வில் போராடின—
இறுதியில் எவர் வெற்றிகண்டனர் ?

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

## சென்ட்ரல் வெள்ளித்திரையில்

(மருதானை)

தினசரி மாலை 3-00 மணி, 6–15 மணி இரவு 9-30
காலைக் காட்சி ஞாயிறு 10-15 மணி

★ நர்கிஸ், ★ பால்ராஜ் ஷானி, ★ ராஜேந்திர குமார்

— இன்னும் பலர் நடிக்கும் —

# கார் சன் சார் (ஹிந்தி)

அத்தானுக்காக உயிரைத் தியாகம் செய்த ஒரு பெண்ணின் கதை இது.

## விரைவில் வெளிவரும்

சென்ட்ரல் (மருதானை) – ஓடியன் (கல்கிசை) – ராணி (யாழ்ப்பாணம்) – லாஸா (கண்டி) – ஜோதி (திரிகோணமலை)

ஆகிய ஐந்து தியேட்டர்களில் திரையிடப்படவிருக்கும்

— அன்ன பூரண பிக்சர்சாரின் —

# "மஞ்சள் மகிமை"

தமிழ்

நட்சத்திரங்கள் :

★ ஏ. நாகேஸ்வரராவ்
★ பி. கண்ணும்பா
★ ராஜசுலோசனு
★ எஸ். வி. ரங்கராவ்
★ கே. சாரங்கபாணி
★ சாவித்திரி
★ சுந்தரிபாய்
★ கே. ஏ. தங்கவேலு
★ ஜி. வரலட்சுமி
★ பாலாஜி


நடனம் : ராஜசுலோசனு — ராகினி — சுகுமாரி.
வசனம் : ஸ்ரீதர்.

**இதுவரை திரையுலகில் கண்டிராத ஓர் அற்புத திரைஓவியம்!**
**ரசிகர்களைக் குதூகலக்கடலில் ஆழ்த்தக்கூடிய ஹாஸ்யநடிப்பு**

# உஷா

## தையல், சித்திரத்தையல்

# கண்காட்சி




★ இந்தியாவிலும் மற்றும் வேறு நாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டதும் என்றுமே பார்த்திராத சித்திரத் தையல் வேலைப்பாடுகளமைந்த துண்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

★ கண்ணைக்கவரும் டிசைன்களில் சேலைகள், சட்டைகள், சோளிகள் மற்றும் சிறுவர் உடைகள் ஆகியவற்றை நீங்கள் நேரிற் காணலாம்.

★ கவர்ச்சிகரமான கைப்பைகள், மேசை விரிப்புகள், தலை அணை உறைகள், தேதோளி மற்றும் பப்றிக் விளையாட்டுப் பொருள்கள் உள.

★ சித்திரத் தையற் படங்களைக் கொண்ட அழகான கலா பவனம்.

பிரவேசக் கட்டணம் ஏதுமில்லை

ஒழுங்கு செய்கிறவர்கள்

## உஷா தையல் மெஷின்

உற்பத்தியாளர்கள்

இலங்கையில் முதல் முறையாக
பம்பலப்பிட்டி மார்க்கட்டுக்கு எதிரில்

28–2–59 சனிக்கிழமை ஆரம்பமாகி
18–3–59 வரை நடைபெறும்

குழந்தைகள் குதூகலமாக
விளையாட மைதானம் உண்டு.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாட்டுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி வெளியிடப்பெற்றது.